
கோகுலம்

GOKULAM பிப்ரவரி '95 ரூ.5/-






கோகுலம்

1995
பிப்ரவரி மாத இதழ்
மலர் : 13
இதழ் : 1

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
- தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும்
- பாரதியார்.



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும் போது பெரும்பாலானவர்கள் ஆண்டுத் தேர்வுக்கு திட்டம் போட்டுப் படித்துக் கொண்டிருப்பீர்கள். தேர்வுக்கு எப்படிப் படிக்க வேண்டும் என்பதை இந்த இதழில் வெளியாகியுள்ள பாடல்கள் உங்களுக்கு வழிகாட்டும்.

உங்கள் கோகுலம் இந்த இதழில் தனது பதிமூன்றாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. கோகுலம் தொடங்கப்பட்ட காலத்திலே இதன் பொறுப்பாசிரியராக இருந்து வழிநடத்திய 'வாண்டு மாமா' அவர்கள் இந்த இதழில் இருந்து உங்களுக்காக கோகுலத்தில் எழுதுகிறார். அவரது அருமையான சித்திரத் தொடர்கதையின் முதல் பகுதி இந்த இதழில் வெளிவந்துள்ளது. 'விறுவிறுப்பு' என்பதற்கு என்ன பொருள் என்பதை இக் கதையைப் படிப்பவர்கள் கண்டிப்பாக உணரலாம்.

'இரண்டாவது சாவி' தொடர்கதை ஒரு புதிய திருப்புமுனைக்கு வருகிறது. நல்லவனாக நடித்து வரும் ராஜா, சந்தீப்பைக் கடத்தப் போகிறானா இல்லையா என்பதை நம்மால் உறுதியாக ஊகிக்க முடியவில்லை. அன்பு அவனைத் தடுக்கிறது. பொறுத்திருந்தால் ராஜா என்ன செய்யப் போகிறான் என்பதை அறியலாம்.

குழந்தைக் கவிஞர் அமரர் வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியை நடுவர்கள் படித்து வருகிறார்கள். அடுத்த இதழில் போட்டி முடிவையும், முதல் பரிசு பெறும் கதையையும் வெளியிட முயன்று வருகிறோம்.

கேமல் சேம்ப் வண்ணந் தீட்டுங்கள் போட்டியின் முடிவும் அடுத்த இதழில் வெளியாக உள்ளது.

கடந்த ஆண்டு, 'என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்' என்ற தலைப்பில் தங்கள் அனுபவங்களை எழுத தம்பி தங்கைகளுக்கு வாய்ப்புத் தரப்பட்டது. இந்த ஆண்டில் "நான் கோகுலம் ஆசிரியரானால்" என்ற தலைப்பு தரப்படுகிறது. ஒரு இன்லாண்ட் உறையில் "நீங்கள் கோகுலம் ஆசிரியரானால்" என்னென்ன செய்வீர்கள் என்பதை விளக்கி எழுதியனுப்புங்கள். நாங்கள் கேட்கும் போது புகைப்படம் அனுப்பினால் போதும்.

புதிய பகுதிகள் குறித்து உங்களுக்கு மகிழ்ச்சிதானே? மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)

கோகுலம்

1995 பிப்ரவரி
இந்த இதழில்...




• குறட்டையூர் பெருஞ்சத்தன் பக்கம் 17



• ரத்தினபுரி ரகசியம் பக்கம் 45

* மரங்கொத்தி மரத்தைக் கொத்துவது ஏன்? பக்கம் 12






வீடியோ கண்ணாடி!

குளுகுளு கண்ணாடி அணிவது போல் வீடியோ கண்ணாடி கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. ஜான் ஹாப்கின்ஸ் பல் கலைக் கழகத்தில் இது பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. க்ளுகோமா மற்றும் நீரிழிவு நோயால் அவதிப்படு பவர்களுக்கு இது நல்ல பார்வை கொடுக் கும் எனக் கருதப்படுகிறது. இதன் விலை 3000 டாலர்கள். இது இன்னும் மூன்று ஆண்டுகளில் விற்பனைக்கு வரும்.

- இந்திரா கோபாலன்



பூகம்ப அலாரம்!

பூகம்பம் வரப் போவதை 30 வினாடி களுக்கு முன்பு உணர்த்தும் ஒரு புதிய அலாரம் மிஸ்ஸிபி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஹென்றி பாஸ் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் பெயர் 'ஃபைனல் அலெர்ட்' (Final Alert)

- இந்திரா கோபாலன்.

எழுத்துக் கூட்டி உரக்கப் பாட்டும்

கடுமையான மழைக்காலம். வெட்டுக் கிளிக்கு மிகவும் பசி. எங்கும் ஒரு துளி கூட உணவு கிடைக்கவில்லை. சுற்றி அலைந்ததுதான் மிச்சம். சோர்வோடு ஒரு வயல் வரப்பில் போய் உட்கார்ந்தது.

எதிரே வரப்பில் சாரிசாரியாக எறும்புக் கூட்டம். எல்லா எறும்புகளும் சுறுப்புடன் காணப் பட்டன.


“உங்களுக்கெல்லாம் பசிக்கவில்லை?” என்று வியப்புடன் கேட்டது வெட்டுக்கிளி.

“பசிக்காமல் இருக்குமா? ஆனால் எங்களுக்கு முன்னெச்சரிக்கை அதிகம். கோடைகாலம் முழுவதும் நாங்கள் கடுமையாக உழைப்போம். கிடைக்கும் உணவை வீணாக்காமல் எங்கள் வளையில் கொண்டு சேர்ப்போம். அப்படிச் சேமித்த உணவுதான் இப்பொழுது எங்களுக்குப் பசியைத் தீர்க்கிறது,” என்றது ஓர் எறும்பு.

“ஆமாம், கோடை காலத்தில் நீ உணவைச் சேர்த்துக் கொள்ளவில்லையா?” என்று கேட்டது இரண்டாவது எறும்பு.

“இல்லை” என்று மெதுவாகக் கூறியது வெட்டுக்கிளி.

“மழைக்காலத்திற்கு என்று உணவைச் சேர்த்து வைக்கவில்லையா? அப்படியானால்



படிக்க ஓர் ஈசாப் கதை!

பசியும்!

நீ கோடைகாலத்தில் உழைக்காமல் என்ன செய்து கொண்டிருந்தாய்?'' என்று வியப்புடன் கேட்டது முதல் எறும்பு.

"மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டிருந்தேன். நான் வெகு இனிமையாகப் பாடுவேன் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று பதிலுக்குக் கேட்டது வெட்டுக் கிளி.

"உழைக்க வேண்டிய காலத்தில் பாடிக் கொண்டிருந்துவிட்டு, இப்பொழுது பசியுடன் தவிக்கிறாயா?'' என்றது இரண்டாவது எறும்பு.


வெட்டுக்கிளி தலையைக் குனிந்து கொண்டது.

''எனக்குப் பசிக்கிறது. எனக்கு ஏதாவது உணவு தாயேன். பதிலுக்கு நான் வேண்டுமானால் பாடிக் காட்டுகிறேன்'' என்று கெஞ்சியது வெட்டுக்கிளி.

''உன் பாட்டு யாருக்கு வேண்டும்? உன் பசியைத் தீர்க்கவே அது உதவவில்லையே?'' என்றது முதல் எறும்பு.

''பசி அடங்கிய பிறகுதான் பாட்டும் கூத்தும். உழைப்பை அலட்சியப்படுத்திய உனக்கு இரக்கப் படுவதே பாவம்'' என்றது இரண்டாவது எறும்பு.

இரண்டு எறும்புகளும் தங்கள் வரிசையோடு சேர்ந்து விரைந்தன. உழைப்பைப் புறக்கணித்த வெட்டுக்கிளி பசியுடன் தவித்தது.



ஒற்றுமை என்ன? - போட்டி முடிவு

இதில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டிருந்தாலும் பத்துப் பேர் மட் டுமே சரியான விடையைத் தந்திருக் கிறார்கள். குறிப்பில் "இரண்டு ஒற் றுமை" என்பது தெளிவாகத் தரப்பட்டி ருந்தும் எப்படி எல்லோரும் கோட்டை விட்டார்கள் என்பது புரியவில்லை. இந்த மாதிரிப் போட்டிகளுக்கு விடை கண்டு பிடிக்கும் போது, முதலில் குறிப்பைக் கவனமாகப் படியுங்கள். பிறகு தனிக் காகிதத்தில் உங்களுக்குத் தோன்றியதை எழுதிக் கொண்டு வாருங்கள். பிறகு அவைகளை மறுபடி பாருங்கள். எவை சரியாக இல்லை என்பது உங்களுக்கே புரியும். அவைகளைக் கண்டுபிடிக்க அதிக நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். மற்ற படங்களின் உதவியோடு மறுபடி அவை என்னவாக இருக்கும் என்று யோசியுங்கள். படங்கள் உங்களுக்கு வழிகாட்டும்.

சரியான விடை: மடு அல்லது மேடு அல்லதுகாடு, ஏடு, ஆடு நாடு, ஓடு, கூடு, தோடு, கோடு, பாடு, மாடு, ஜோடு, லாடு.


இரு ஒற்றுமைகள் : எல்லாம் இரண்டு எழுத்துகள், எல்லாம் 'டு'வில் முடிபவை.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்!

1. எஸ். சுதாகர், கோவை - 14
2. ஏ.எஸ். ஹரிணி, தஞ்சை - 6
3. மா. பானுப்ரியா, சேலம் - 11
4. ஏ. வெண்ணிலா, மேட்டூர் அணை - 1
5. கே. இந்துமதி, தேவனூர்புதூர் அஞ்சல்
6. எஸ். சந்தியா, தஞ்சை - 4
7. ம. சுடர்எழில், திருச்சி - 14
8. ஸ்ரீராம், கோவை - 2
9. அர. ரம்யா, கோவை - 4
10. ஏ.எஸ். வைத்தியநாத நடராஜன், அம்மா பேட்டை அஞ்சல்
11. வி. அனுஷா, ராமநாதபுரம்
12. ஏ. மேரி அருள் பிரியா, மூகில் துறைப் பட்டு.

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

கடந்த ஆண்டு "என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்" என்ற தலைப்பு தரப்பட்டு, ஏராளமான தம்பி தங்கைகளுக்கு எழுதும் வாய்ப்புத் தரப்பட்டது. இந்த ஆண்டு "நான் கோகுலம் ஆசிரியரானால்" என்ற தலைப்பு தரப்படுகிறது. கோகுலத்தின் நிறை குறைகளை எடைபோடவும், நீங்கள் கோகுலத்தில் என்னென்ன பகுதிகளை அதிகம் விரும்புகிறீர்கள், புதிதாக எவற்றைச் சேர்க்க ஆசைப்படுகிறீர்கள், எவற்றை நீக்கிவிட விரும்புகிறீர்கள் என்பதையெல்லாம் எழுதியனுப்ப இது ஓர் அருமையான வாய்ப்பு. உள் நாட்டுத் தபால் உறையில் (INLAND LETTER) உங்கள் கருத்தை முழு முகவரியோடு ஆசிரியர், கோகுலம், நான் கோகுலம் ஆசிரியரானால் பகுதி, 47 ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-97 என்று முகவரி இட்டு அனுப்புங்கள். நாங்கள் கேட்ட பிறகு புகைப்படம் அனுப்பினால் போதும். இதில் பதினைந்து வயதிற்குட்பட்டவர்கள் மட்டுமே கலந்து கொள்ள லாம். இந்தக் கருத்துத் தொடரை ஆரம்பித்து வைப்பவர்கள் சென்னை நந்தலாலா சிறுவர் சங்கத்தைச் சேர்ந்த வாசகர்கள்.



நான் கோகுலம் ஆசிரியரானால்...?

நகைச் சுவைப் பகுதிகளை அதிகம் போடுவேன்

நான் கோகுலத்தின் ஆசிரியரானால் சிறுவர்க்கான போட்டிகளை நிறைய நடத்துவேன். வண்ணப்படங்கள் வரைவது, சொற்களைச் சேர்ப்பது, படங்களைப் பார்த்து விடை எழுதுவது போன்றவைகளைப் பிரசுரிப்பேன். வண்ணக் கார்ட்டூன்கள் நிறைய இருக்கும். இவை பிராணிகளின் பலவிதமான உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்படி இருக்கும். நகைச் சுவைப் பகுதிகளை அதிகம் போடுவேன். சிரித்தால் ஆரோக்கியம் தானே? இராமாயண மஹாபாரதக்

கதைகளைப் படங்கள் மூலம் போடு வேன்.

நமது இந்திய மாநிலங்களின் விதவித மான கலாச்சாரங்களை மாதம் ஒரு முறை ஒவ்வொரு மாநிலமாக எடுத்துக் கொண்டு விரிவாக எழுதச் செய்வேன். இது மிகவும் பயனளிக்கும். "உனக்குப் பிடித்த அருமையான சம்பவம்" என்ற தலைப்பில் மாதம் ஒரு கட்டுரையை வெளியிடுவேன்.

—வி.ஸ்ரீவத்ஸன்

இரத்த தானம், கண் தானத்தை ஊக்குவிக்க உதவுவேன்.

நான் கோகுலத்தின் ஆசிரியரா னால் என்பதை நினைக்கும்போதே இனிமையாக இருக்கிறது.

குழந்தைகளே நாட்டின் செல்வங்கள்; நாளைய தலைவர்கள். அதனால் லட்சக்கணக்கான குழந்தைகள் படிக்கும் கோகுலத்தின் ஆசிரியருக்குப் பெரும் பொறுப்பும், கடமையும் உண்டு. தேனு டன் மருந்தையும் கலந்து தருவது போல் இன்னும் அதிக அளவில் பொழுது போக்கு அம்சங்களுடன் நல்ல கருத்துக் களையும் கலந்து தருவேன்.

ஊனமுற்ற குழந்தைகளுக்கு என்று பல போட்டிகளை நடத்தி அவர்களை யும் தன்னம்பிக்கையுடன் வாழ வழி செய்வேன். நமது தாய்மொழி கண் போன்றது. ஆனாலும் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி பல இடங் களுக்குச் செல்லும் போது அவர்களது வளர்ச்சிக்கு மொழி ஒரு தடையாக இருக்க கூடாது. ஆகையால் தமிழ் வாயிலாக மற்ற மொழிகளையும் கற்றுக் கொள்ள வழி செய்து ஆற்றலை வளர்ப்பேன். நமது பண்பாடு, கலாசாரம் இவற்றை குழந்தைகள் கட்டாயம் அறிந் திருக்க வேண்டும். இதிகாசங்கள், காப்பி யங்கள் போன்றவற்றைக் குழந்தைகள் புரிந்து கொள்ளும் வகையில் கதைகளாக வெளியிடுவேன். "பாட்டி சொல்லும் கதைகள்" என்ற தலைப்பில் நீதிக் கதை களைத் தருவேன். பிற நாடுகளைப் பற் றியும் தெரிந்து கொள்ள பேனா நண்பர் களை ஊக்குவிப்பேன். பிறர்க்கு உதவும் எண்ணத்தை வளர்க்க இரத்த தானம், கண்தானம் போன்றவற்றின் சிறப்பைப் புரிந்து கொள்ளக் கட்டுரைகள் வெளி யிடுவேன்.

குழந்தைப் பருவத்தில் எந்த விஷய மும் பசுமரத்தாணி போல் பதியும். அதனால், மனதில் நல்ல விதையை விதைத்து நற்கதிரை அறுக்க வேண்டிய பணியில் பத்திரிகை ஆசிரியரின் பங்கு

• ஸ்ரீவத்ஸன்



• ஆர். அர்ச்சனா



மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. குழந்தைகளின் மனதில் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, ஒற்றுமை, ஓர் இனம் ஓர் குலம் போன்ற நல்ல இலட்சிய குணங்கள் வளர உதவும் விதைகளை விதைக்கப் பாடுபாடு வேன்.

ஜி.அர்ச்சனா,



• வி.ஆர். ராதாகிருஷ்ணன்

மற்றவர்களுக்கு உதவி புரியத் தூண்டும் வகையில் கட்டுரைகளை வெளியிடுவேன்!

கோகுலம் சின்னஞ் சிறுவர்க்கென தனித் தன்மையோடு வருகிற பத்திரிகை. அதில் குழந்தைகளின் விருப்பமும், பங்கும் அதிக அளவில் இருக்க வேண்டும். புகைப்படத்துடன் குழந்தைகளின் பிறந்த நாள் செய்திகள், குழந்தைகளுக்கான சித்திரப் போட்டி, சிறுசிறு அறிவியல் பொது அறிவுப் போட்டி, கண்ணைக் கவரும் வண்ணப்படங்களுடன் சிறு கதைகளைச் சேர்ப்பேன். குழந்தைகளுக்குப் படிப்பு மட்டும் போதுமா? அவர்கள் இறைவுணர்வுடன் இருக்க வேண்டாமா? ஆகவே, பக்தி மார்கத்தை வளர்ப்பதற்கு சிறு, சிறு ஸ்லோகங்கள், பக்திக் கதைகள் ஆகியவற்றை அதிக அளவில் இடம் பெற வைப்பேன்.

தற்போது கணக்கில் நிறையப் புதுக் கணக்குகள் வந்து விட்டன.

• சுப்பிரமணியம்



• ஆர். பத்மசபி மீனாக்ஷி



• எஸ். ஜனகவல்லி



அவற்றின் துணையோடு பொது அறிவை வளர்ப்பதற்குப் பல புதிய கணக்குகளை அளிப்பேன். படங்களில் ஆறு வித்தியாசங்களைக் கண்டு பிடித்தல், விடுகதைகள் ஆகியவற்றை வெளியிடுவேன். குழந்தைகள் பிறருக்குத் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யத் தூண்டும் வகையில் "உதவும் கரங்கள்" போன்ற தொண்டு அமைப்பின் பணிகளை அடிக்கடி விளம்பரப் படுத்துவேன். உதவி என்றால் பண உதவி தானா? வேறு உதவிகள் இல்லையா? அவற்றைச் செய்ய முன்வரு மாறு குழந்தைகளை ஊக்குவிப்பேன்.

தானத்தில் சிறந்தது கண்தானம் தானே? இறந்தவுடன் கண்களைத் தானமாக அளிக்க வேண்டியதன் அவசியத்தை சிறுவர்களுக்குத் தெளிவாகப் புரிய வைக்க சிறுசிறு அறிவுரைகளை வழங்குவேன்.

பிள்ளைப் பருவத்தில் இருந்தே சேமிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள சிறு சேமிப்புத் திட்டங்களின் அவசியத்தை அவர்களுக்குப் புரிய வைப்பேன். இதனால் குழந்தைகள் பயன் பெறுவார்கள். இயன்றவரை குழந்தைகள் இலட்சியக் குடிமக்களாக வளர கோகுலத்தைப் பயன்படுத்துவேன்.

– எஸ்.ஜனகவல்லி

கோகுலம் மாநாடு கூட்டுவேன்!

நான் கோகுலத்தின் ஆசிரியரானால் வழவழவென வண்ண அட்டையுடன் மாதம் இரு முறை கோகுலத்தை வெளியிடுவேன். ரேவதி அவர்களின் முன்னுரை மிகவும் கவரும் அம்சமாதலால் அதில் எவ்வித மாற்றமும் இல்லாமல் அப்படியே பிரசுரிப்பேன். கணிதப் போட்டிகள் வகுப்பு வாரியாகவும், கலப சுருக்குக் கணக்குகளைப் பல வழிகளில் எப்படியெல்லாம் போடுவது என்பதைப் பற்றியும் புதிய பகுதிகளைக் கொண்டு வருவேன்.

உலகச் செய்திகளைத் தொகுத்து, அதனுடன் கூட ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு நாட்டைப் பற்றிய முக்கிய தகவல்களைச் சேகரித்துக் கொடுப்பேன். இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற இதிகாசங்களைப் படத்துடன் கூட பெயிண்ட் செய்யும் வசதியுடன் தொடர்ச்சியாகப் பிரசுரம் செய்வேன். பெற்றோர் உதவி இன்றி தாங்களே "சமையல் செய்வது எப்படி?" பகுதியையும் கொண்டு வருவேன்.

புள்ளிக் கோலம் போடும் முறை, கார்ட்டூன் வரையும் கலை ஆகியவற்றைக் கற்பிக்கும் பகுதிகளை அளிப்பேன். ஆபத்து சமயங்களில் ஒருவருக்கொருவர் செய்யும் முதலுதவி பற்றிய குறிப்புகளைத் தருவேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக கோகுலம் சிறுவர் மாநாடு ஒன்றினைக் கூட்டி சிறுவர், சிறுமியர் தங்களது திறமைகளை உற்சாகத்துடன் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவேன்.

– ஆர்.பஞ்சமி மீனாக்ஷி

கதைகளை நிறையப் போடுவேன்

நான் கோகுலம் ஆசிரியரானால் முதலில் குழந்தைகளுக்குப் பிடித்தமான கதைகளை நிறையப் போடுவேன். கோகுலம் என்றதுமே கண்ணபிரான் வளர்ந்து லீலைகள் புரிந்த கோகுலம்தான் நினைவிற்கு வருகிறது. அதனால் கிருஷ்ணர் சம்பந்தப்பட்ட பாகவதம், மஹாபாரதம், பகவத் கீதை போன்றவற்றைக் குழந்தைகளும் படித்துப் புரிந்து கொள்வதற்கேற்ப படக்கதையாகவோ எளிய தமிழிலோ பிரசுரிப்பேன். "கிருஷ்ண



"88ல் எத்தனை எட்டு?"
"இரண்டு எட்டு."

எஸ். தட்சணாமூர்த்தி

கண்ணபிரான் வெட்டிய பிறந்த நாள் கேக்!

கோகுலத்தின் பனிரெண்டாம் ஆண்டு நிறைவு விழாவை அண்மையில், சென்னை நந்தலாலா வானொலிச் சிறுவர் சங்கம் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. வண்ணத் தோரணங்கள், பலூன்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்தில், கோகுலம் வாசகர்களும் அபிமானிகளும் திரண்டிருந்தனர். குழந்தைகள் ஆளுக்கு ஒரு பலூனைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தனர். சிலர் பொம்மைகளோடு வந்திருந்தனர். அலங்கரிக்கப்பட்ட மேஜையின்மேல் பிறந்த நாள் கேக்கும், பனிரெண்டு வயதைக் குறிக்கும் மெழுகு வர்த்தியும் தயாராக இருந்தன. சரியான நேரத்தில் கண்ணன் தன் நண்பர்கள் புடை சூழ மேஜைக்கு எழுந்தருளி, புல்லாங்குழலை இடுப்பில் சொருகிக் கொண்டு பிறந்த நாள் கேக்கை வெட்டத் தயாராகக் கத்தியை எடுத்துக் கொண்டார். 'ஹேப்பி பர்த்டே' பாட்டுப் பாட மெழுகுவர்த்தி ஒளிர கண்ணன் பிறந்த நாள் கேக்கை வெட்டி சுற்றிலும் இருந்த குழந்தைகளுக்கும் அபிமானிகளுக்கும் வழங்கித் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார். பதிலுக்கு எல்லோரும் கைகளைத் தட்டி மகிழ்ச்சியோடு வாழ்த்துக் கூறினர்.

கேக் வெட்டிய கண்ணன் உட்பட எல்லாக் குழந்தைகளின் விஷமத் தனத்தையும் தாங்கிக் கொண்டு விழாவுக்கான ஏற்பாடுகள் எல்லாவற்றையும் மிகச் சிறப்பாகச் செய்திருந்த திரு ஜெயராமன் குடும்பத்தினரையும் இதற்கு முழு அளவில் ஒத்துழைத்த நந்தலாலா சிறுவர் சங்க நிர்வாகிகளையும் குறிப்பாக அதன் அமைப்பாளர் கவிஞர் மதிஒளிசரஸ்வதியையும் எத்தனை பாராட்டினாலும் தகும்.

அட்டையில் கண்ணனாக கிஹரிஷ்குமார் மற்றும் எல்.நந்திதா, திவ்யமீனாக்ஷி, எஸ்.பார்க்கவ், சந்தான கோபால்.

வண்ணப்படம்: காமிரா திருஞானம்

ஜயந்தி" சிறப்பிதழைப் போட்டு கிருஷ்ணரைப் பற்றிய கேள்விகளுக்குப் பதில் கூறி, வெற்றி பெறுபவர்களுக்கு மதுரா, பிருந்தாவனம் போன்ற புண்ணியத் தலங்களுக்குச் சென்று வர ரயில் கட்டணம் அளித்துப் பரிசு வழங்குவேன்.

'ஓவியம் வரைவது எப்படி' 'பேப்பர் உருவ கட்டிங்ஸ்' செய்வது எப்படி என்பதையெல்லாம் அறிந்து எழுதுவேன். குழந்தைகள் வரையும் ஓவியங்களைப் பிரசுரிப்பேன். கம்ப்யூட்டர் பற்றிய செய்திகளையும் உலக அதிசயங்களையும் வெளியிடுவேன். நன்றாகப் பாடுபவர்கள், ஆடுபவர்கள், கல்வியில் அதிக மதிப்பெண் பெறுபவர்கள், விளையாட்டு வீரர்களின் பேட்டி ஆகியவைகளை எழுதுவேன். கோகுலம் பத்திரிகையின் விலையைக் குறைத்து ஏழைக் குழந்தைகளும்கூட எளிதாக வாங்கிப் படிக்க உதவுவேன்.

— எல்.சுப்ரமணியம்


அதிக அளவில் விமர்சனக் கடிதங்களை வெளியிடுவேன்!

நான் கோகுலம் ஆசிரியராக ஆனால் சிறுவரை ஈர்க்கும் பல வண்ணப் படங்களில் நம் நாட்டின் பண்டைய சரித்திரத்தையும், அவைகளிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய போதனைகளையும் தர முயற்சிப்பேன். நல்ல பழக்கவழக்கங்களையும் நல்ல குணங்களையும் வளர்த்துக் கொள்ள உதவும் கதைகளை எழுதுவேன். அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அறிவியல் குறிப்புகளையும் விளக்கங்களையும் கொடுப்பேன். நம் நாட்டின் ஒவ்வொரு மாநிலத்தின் பெருமையையும், அந்த மக்களின் பழக்க வழக்கங்களையும் தேச ஒற்றுமையை வளர்க்க உதவும் வகையில் எழுதுவேன். விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம், கல்வியறிவு, பூகோளம், மொழிகள், தேச ஒற்றுமை, உலக ஒற்றுமை, நாட்டுப்பற்று, மதப்பற்று, விளையாட்டுவிமர்சனம், கலைகள் முதலியன 'கோகுலத்தில் இன்னும் அதிகம் இடம்பெற முயற்சி செய்வேன். மேன்மேலும் அதிக அளவிலான சிறுவர்கள் 'கோகுலம்' பத்திரிகையை வாங்கிப் படிக்கும்படி அதிக அளவில் அவர்களிடமிருந்து விமர்சனக் கடிதங்களைப் பெற்று கோகுலத்தில் வெளியிடுவேன்.

— வி.ஆர். ராதா கிருஷ்ணன்.

பேட்டி: மதிஒளி

புகைப்படங்கள்: காமிரா திருஞானம்



மரங்கொத்தி மரத்தைக்

அவ்வளவு பெரிய வீட்டில் தன்னந்தனியாக இருப்பது பூமணிக்குப் புதிய அனுபவம். அப்பா பெரிய அலுவலர். பெரும்பாலான நாட்களில் அவர் வீட்டிலேயே, ஏன் ஊரிலேயே இருக்க மாட்டார். அலுவல் தொடர்பாக வெளியூர் சென்று விடுவார். தோட்டக்காரன், வேலைக்காரி உதவியுடன் வீட்டை நிர்வகிப்பது முழுக்க முழுக்க அம்மா தான். போன கல்வி ஆண்டுவரை பூமணியின் அண்ணன் பாபு இருந்தான். இந்த ஆண்டு பொறியியல் படிப்புக்காக அவனும் சென்னைக்குப் போய் விட்டான். வீட்டிலே அம்மாவும் பூமணியும்தான்.

அப்பாவின் உறவினர் யாரோ இறந்து விட்டதாகத் தகவல் வந்தது. அப்பாவின் சார்பில் அம்மாவுக்குப் போக வேண்டிய கட்டாயம். "கவனம் பூமணி. இந்த வீட்டில் பயமே இல்லை. இரண்டே நாள்தான். ஓடி வந்து விடுகிறேன். தைரியமாக இரு. தோட்டக்காரரையும், வேலைக்காரியையும் வீட்டிலேயே இருக்கச் சொல்லி இருக்கிறேன். ஒன்றும் பயமில்லை. தைரியமாக இரு. இரண்டே நாள்தான்" என்று அம்மா மறுபடி மறுபடி கூறித் தயங்கிக் கொண்டே போக மனமில்லாது போனாள்.

அம்மா போன பிறகு, பூமணி அந்த வீட்டின் எல்லா அறைகளையும் மூடித் தாளிட்டாள். சமையலறை, கூடம், படிக்கும் அறைகளை மட்டும் திறந்து வைத்தாள். தோட்டக்காரனும், வேலைக்காரியும் வாசல் நடையில் உட்கார்ந்து பேசியபடி இருந்தனர். பூமணி அமைதியாகக் கணக்குப் பாடத்தில் மூழ்கினாள்.

மேலே தளத்தில் ஏதோ சத்தம் கேட்டது.

வேலைக்காரியும் தோட்டக்காரனும் தூங்கி வழிந்து கொண்டிருந்தனர். வேலை இல்லை என்றால் தூக்கம் வரக் கேட்கவா வேண்டும்?

இப்பொழுது அந்தச் சத்தம் தெளிவாகக் கேட்டது.

"ஸ்பிட் ஸ்பிட்", "ஸ்பிட் ஸ்பிட்..."

தாளம் தப்பாத சந்தத்துடன் "டொக் டொக்" கென்று மொட்டை மாடியில் யாரோ தரையைத் தட்டும் சத்தம் கேட்டது. பிரமையாக இருக்குமோ என்று பூமணி கவனித்துக் கேட்டாள். பிரமை இல்லை. சத்தம் தெளிவாகக் கேட்டது.

"ஸ்பிட்... ஸ்பிட்..." "ஸ்பிட்... ஸ்பிட்..." -தொடர்ந்து மாடித் தரையைத் தட்டும் சத்தம்!


கண்டிப்பாக யாரோ மாடியில் தட்டுகிறார்கள். அதில் சந்தேகமே இல்லை. தட்டுவது யாராக இருக்கக் கூடும்? எதற்காகத் தட்டுகிறார்கள்? பகல் நேரத்தில் இத்தனை சத்தத்தோடு தட்டும் துணிவு யாருக்கு இருக்கும்?

பெயர் சொல்லி வேலைக்காரியை அழைத்தாள். அவள் அசையக்கூட இல்லை. தோட்டக்காரன் அவளுக்கு மேல்! வந்தது வரட்டும் என்று மனத்தில் துணிவை வளர்த்துக் கொண்ட பூமணி, மாடிக்கு விரைந்தாள்.

கொத்துவது ஏன்?

பூனை போல் சத்தமில்லாது மாடிப்படிகளில் ஏறும் போதே, சத்தம் நெருங்கிக் கேட்டது. மொட்டை மாடியின் திறந்தவெளியில் இருந்துதான் அந்தச் சத்தம் வந்தது. பூமணியின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. மொட்டை மாடிக் கதவைத் திறக்காது, பக்கத்தில் இருந்த ஜன்னலின் கொக்கியை ஓசையில்லாது அகற்றி விட்டு, விரல் அளவு சந்துக்கு கதவைச் சிறிது திறந்து கொண்டு, மாடியை நோக்கினாள்.

கொல்லைக் கதவைக் கரையான் அரித்திருந்தது. அதனால் வேறு கதவு போட்டிருந்தார்கள். அரித்த கதவை வெயிலில் படட்டும் என்று மாடியில் கொண்டு வந்து தரையில் போட்டிருந்தார்கள். அதில் மறுபடி கரையான் பிடித்திருந்தது. அந்தக் கதவின் மேல் ஓர் அழகிய மரங்கொத்திப் பறவை உட்கார்ந்து கொண்டிருந்தது.



மைனாவை விடக் கொஞ்சம் பெரிதாக இருந்தது அந்த மரங்கொத்தி. கறுப்பு வண்ண அலகு. பழுப்பும் சிவப்புமான விழிப்படலம். குட்டிக் கால்கள் இரண்டும் சாம்பல் கலந்த இலைப் பச்சை வண்ணம். தலை உச்சியும் கொண்டையும் நல்ல சிவப்பு. உடம்பின் மேற்பக்கம் பொன் வண்ண மஞ்சள் நிறம். ஓரத்தில் கறுப்புக் கறை. உடம்பின் கீழ்ப் பகுதியில் வெண்மைக்கு இடையே கறுப்புக் கோடுகள். தொண்டையும் தலையின் பாகங்களும் கறுப்பாகச் சின்னச் சின்ன வெண் புள்ளிகளோடு இருந்தன. அந்தப் பொல்லாத மரங்கொத்திதான் அடிக்கொரு முறை தன் அலகால், கீழே இருந்த கதவைத் தட்டிக் கொண்டும், "ஸ்பிட், ஸ்பிட்" சத்தத்தை எழுப்பிக் கொண்டும் இருந்தது!



ஜன்னல் கதவை ஓசையின்றி சாத்[illegible] விட்டுக் கீழே இறங்கிய பூமணி, தன்னுடைய கேமராவை எடுத்துக் கொண்டு வந்தாள். அவள் ஜன்னல் கதவைச் சற்றுத் திறந்தது தான் தாமதம். 'ஸ்பிட்' என்று ஒரே ஓர் நீண்ட ஒலியை எழுப்பி விட்டு மரங்கொத்தி பறந்து மறைந்து விட்டது! ஒரு படத்தைக் கூட அவளால் எடுக்க முடியவில்லை.

பூமணி ஏமாற்றத்துடன் மறுபடி கணக்குப் பாடத்தில் மூழ்கினாள். அழைப்பு மணி ஒலித்தது. தூங்கிக் கொண்டிருந்த வேலைக்காரியும், தோட்டக்காரனும் அலறிப் புடைத்து எழுந்தனர். கதவைத் திறந்தனர்.

"பாப்பா, பாபுத் தம்பி [illegible]" [illegible]

ரேவதி

வேலைக்காரி.

தனிமைக்கு விடுதலை கிடைத்த மகிழ்ச்சியில் பூமணி ஓடோடி வந்தாள் அண்ணனை வரவேற்க.

"கல்லூரியில் கலாட்டா. பத்து நாட்களுக்கு மூடி விட்டார்கள். அதுதான் வந்தேன்" என்று கூறிய அண்ணனிடம், பூமணி வீட்டு நிலைமையை விளக்கினாள். வீட்டில் கலகலப்புக் கூடியது. அண்ணனுடன் சாப்பிடும் போது மாடியில் மரங்கொத்தி, கதவைத் தட்டிய சத்தத்தைக் கேட்டுத் தான் பயந்து போனதைக் கூறிச் சிரித்தாள் பூமணி.

சாப்பாடானதும் இருவரும் மாடிக்கு வந்தனர். கீழே கிடத்தப்பட்டிருந்த கதவை பாபு பார்த்தான். ஒரு முனையைப் பாதி தூக்கி விட்டு, கீழே விட்டான். 'பொட்'டென்று கதவு விழுந்தது. அதோடு 'பொல பொல'வென்று கரையான்களும் வெண்ணிறமாக உதிர்ந்து தரையில் ஓடின.

"பூமணி, பலகையில் கரையான் முழுவதுமாகப் போகவில்லை. இன்னும் கூடு வைத்திருக்கிறது. மரங்கொத்தியார் இந்தக் கரையான் உணவுக்காகத்தான் வந்திருக்கிறார், இந்தப் பலகையில் ஏராளமாகக் கரையான் இருப்பதை மரங்கொத்தியார் பார்த்து விட்டார். அதனால் கண்டிப்பாக இதைத் தேடி வருவார். என்னிடம் தானியங்கி ரிமோட் கண்ட்ரோல் காமிரா இருக்கு. அதை வைத்து உன் மரங்கொத்தியாரைப் போட்டோ எடுத்துத் தள்ளலாம். அதோட பைனாகுலரையும் வைச்சுக்கிட்டு அவருடைய ஒவ்வொரு அசைவையும் ரசிக்கலாம். இதுதான் 'பேர்ட் வாட்சிங்'" என்றான் பாபு.



காமிராவை ஜன்னல் விளிம்பில் சரியான கோணத்தில் பொருத்தி விட்டு பைனாகுலரோடு மறைந்து கொண்டான் பாபு. பாபு எதிர்பார்த்தது நடந்து விட்டது.

'ஸ்பிட்', 'ஸ்பிட்' சத்தத்துடன் மரங்கொத்தியார் அக்கம்பக்கமெல்லாம் பார்த்தபடி கதவின்மேல் வந்து உட்கார்ந்தார். "ஸ்பிட்" "ஸ்பிட்" சத்தம் தாளம் பிசகாமல் கேட்டது அடிக்கொரு முறை. இடையிடையே அலகினால் கதவை 'டொக்' 'டொக்'கென்று தட்டினார். ஒவ்வொரு தட்டின் போதும், கரையான்கள் கீழே உதிர்ந்தன. மரங்கொத்தியாருக்கு இரையாயின.

"இதன் கால்களில் எத்தனை விரல்கள் இருக்கின்றன என்று பார்" என்றான் பாபு மெதுவாக.

பைனாகுலரை அசைக்

காது பார்த்த பூமணி, "நான்கு விரல்கள்தான் ஒவ்வொரு காலிலும் இருக்கு அண்ணா! முதலும், நான்கும் பின்நோக்கி இருக்கு. இரண்டும் மூன்றும் முன்நோக்கி இருக்கு! அப்பா, இந்த விரல் நுனிகள்தான் எத்தனை கூராக வளர்ந்திருக்கு!" என்றாள்.

"மரத்தைத் தட்டித் தட்டிப் பார்க்க ணும்னா, கீழே விழாம எத்தனை கெட்டியாப் புடிச்சுக்கணும்? அதுக்கு வசதியாத்தான் இவை அமைந்திருக்கு. மரத்தில் தலைகீழாக ஏறவும் இறங்கவும் கூட இவைதான் உதவும்."

"ஒரு தடவை தட்டினால் இத்தனை கரை யான் விழுதே! இந்த அளவுக்கு பலமாத் தட்டும் படி இதன் அலகு கெட்டியா இருக்கா?"

"இல்லாமலா இப்படித் தட்டித் தட்டி மரப் பட்டைகளுக்குக் கீழே உள்ள பூச்சிகளை வெளியே வரவழைத்து இரையாக்கிக் கொள்ளுகிறது?"

"அப்படியானால் மரங்கொத்தி மரத்தைக் கொத் துவது இரைக்காகத்தானா?"

"பெரும்பாலும் அப்படித்தான். ஆனால், இந்தத் தட்டலில் வித்தியாசமான தட்டலும் உண்டு. அது குடும்பம் நடத்தி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்க விடும் அழைப்பு. மரங்கொத்திகளுக்கு இரண்டு வகைத் தட்டல்களுக்கும் வித்தியாசம் தெரியும்."

"எப்படி அண்ணா, கீழே விழுந்து ஓடும் கரையான் களில் ஒன்றைக் கூட விட்டு விடாது இது கொத்திக் கொள்கின்றது?"

"இதன் நாக்கை நன்றாகப் பார்"

பைனாகுலரால் பூமணி கவனமாகப் பார்த்தாள். கீழே கரையான்கள் உதிர்ந்ததும், பூமணி எண்ணியது போல், குருவி தானியத்தைக் கொத்துவது போல் மரங் கொத்தியார் கொத்தவில்லை. பிளந்த அலகில் இருந்து நீண்ட நாக்கு வெளியே வந்தது. நுனியில் முள் போன்ற அமைப்பு. அதில் கரையான்கள் ஒட்டிக் கொண்டு வாய்க்குள் இழுக்கப்பட்டன!

"இது கரையான்களைக் கொத்தித் தின்கிறது என்று எண்ணினேன். இப்பத்தான் தெரிகிறது இது தனது நாக்கால் ஒட்டித் தின்கிறது!" என்று வியந்தாள் பூமணி.

"இவைகளின் நாக்கு விசித்திரமான அமைப்பைக் கொண்டது. நாக்குடன் குறுத்து எலும்பிலான இரு கொம்புகள் இணைந்திருக்கும். இவை தசைகளுக்கு இடையே தலையைச் சுற்றிக் கொண்டு செல்கின்றன. தசை சுருங்கும் போது, கொம்புகள் வெளியே தள்ளப் பட, நாக்கு நீண்டு வெளியே வரும். நாக்கின் நுனியில் முள் போன்ற அமைப்பு இருக்கும். இதில் ; பசை போன்ற கசிவு இருக்கும்."


"இதன் வால் குட்டையாக, ஆப்புப் போல் கூராக இருக்கே! இதுக்குக் கஷ்டமா இருக்காது?"



"இருக்காது. மரங்களில் இது, விரல்களைப் பதித்து செங்குத்தாக உட்கார்ந்து கொள்ளும் போது, இந்த வால் மரப்பட்டையில் பதிந்து, இது தலைகீழாக விழுந்து விடாமல் இருக் கும்படி தாங்குகின்றது. இரவில் கூட இது இதே நிலையில் தூங்கும். மரத் தில் முன்னும் பின்னும் ஏறும், இறங்கும்."

"இது எங்கே அண்ணா கூடு கட்டும்?"


"உயரமான மரங்களில், அலகால் குடைந்து பொந்து பண்ணி, மரத்தூளைப் பரப்பி மெத்தை மாதிரி பண்ணி மூன்று முதல் நாலு முட்டை வரை இடும். முட்டைகள் பெரிய முத் துக்கள் மாதிரி; சீனாக் களி மண் மாதிரி பளபளப்பாக இருக்கும்.



"ஏன் அழுதுக்கிட்டே வர்றே...?"

"நான் 'வரிசை'யில ஒழுங்கா நிற்கலைன்னு டீச்சர் அடிச்சிட்டாங்கம்மா...!"

- சீர்காழி ஜே. பலராமன்



"நான் எழுதின ஜோக்கைப் படிச்சிட்டு எல்லோரும் சிரிச்சிட்டாங்கடா..."

"ஜோக் அடிக்காதே...!"

- எஸ். தட்சணாமூர்த்தி



"எங்க வீட்டுப் பூனை அநியாய சோம்பேறிடா!"

"எப்படிச் சொல்றே...?"

"தானா எலியைப் பிடிக்காமல் பொறியில மாட்டின எலியைத்தான் சாப்பிடும்!"

- சீர்காழி வி. ரேவதி

"எல்லா நாடுகளிலும் மரங்கொத்திகள் இருக்கா அண்ணா?"

"ஆஸ்திரேலியாவைத் தவிர உலகின் எல்லா நாடுகளிலும் மரங்கொத்தி இருக்கு. இவைகளில் எத்தனையோ வகை. இந்திய மரங்கொத்தி மிக அழகானது."

"இவைகளை வீட்டில் வளர்க்கலாமா அண்ணா?"

"லண்டனில் இரும்புக் கூண்டுகளில் வைத்து இவைகளை வளர்க்கிறார்களாம். ஆனால் இவைகளின் பழக்க வழக்கங்கள் வீட்டில் செல்லப் பறவையாக வளர்க்க ஏற்றதாக இல்லை."

"ஸ்பிட்" "ஸ்பிட்" குரலைத் தொடர்ந்து "டொக் டொக்" சத்தம் கேட்டது.

அறிவியல் உண்மைகள்

♠ மரங்கொத்திகள் பிசிபார்மஸ் PICI FORMES வரிசையில், பிசிடே (PICIDAE) குடும்பத்தைச் சேர்ந்தவை.

♠ கால்களில் நான்கு விரல்கள். முதலும் நான்கும் பின் நோக்கி, இரண்டும் மூன்றும் முன்நோக்கி இருக்கும்.

♠ நாக்குடன் குறுத்து எலும்பிலான இரு கொம்புகள் இணைந்துள்ளன. இது தசைகளின் இடையே தலையைச் சுற்றிக் கொண்டு செல்கிறது. தசை சுருங்கும்போது கொம்புகள் வெளியே தள்ளப்பட நாக்கு நீள்கிறது. நாக்கின் நுனியில் முள் போன்ற அமைப்பு. இதில் பசைக் கசிவு இருக்கும்.

♠ உணவுக்காக மரத்தின் பட்டைகளைத் தட்டி, அடியில் உள்ள பூச்சி புழுக்களை வெளியே வரவழைத்து இரை கொள்ளும். பூக்களின் மகரந்தம், சிறு புழு பூச்சிகளையும் பழத்தின் கொட்டைகளையும் உடைத்து உண்ணும்.

♠ 'டொக் டொக்' என்று அலகால் தட்டியே குடும்பம் நடத்த அழைப்பு விடும். இதற்கான வேறுபாட்டை மரங்கொத்திகள் அறியும். டீ.வி. ஆண்டெனா, கொடிக் கம்பங்களிலும் கூட இப்படித் தட்டும். இது எல்லையைக் குறிக்க. இங்கு வேறு மரங்கொத்திகளும் அருகே இருக்கும்.

♠ மரப் பொந்துகள் அமைத்து முட்டையிடும். பட்டுப் போன மரப் பொந்துகளையும் முட்டையிடப் பயன்படுத்தும். மரத்தூளைப் பரப்பி தரையை மென்மையாக்கி அதிக அளவு நான்கு முட்டையிடும். முட்டைகள் வெள்ளையாக பளபளப்பாக இருக்கும்.

♠ மரங்களில், கால்களால் பட்டைகளைப் பற்றிக் கொண்டு, தலைகீழாக இருந்தபடியும் தூங்கும்.

♠ மரத்திற்குக் கேடு விளைவிக்கும் பல பூச்சிகளை மரங்கொத்திகள் உணவாக்கிக் கொண்டு மனித குலத்துக்கு நன்மை புரிகின்றன.



தவளைப் பட்டணத்து மன்னர் கரம் காரவேலர் மாறுதலான எண்ணங்களுக்கு உறைவிடம். எந்த ஒன்றையும் புதுமையாகச் செய்ய வேண்டும் என்பதில் அவருக்கு அளவில்லாத ஆர்வம்.

"தோசையை எதற்காக வட்டமாக வார்க்க வேண்டும்? அப்படி வட்டமாகத்தான் வார்க்க வேண்டும் என்று ஏதாவது விதி இருக்கிறதா?" என்று அமைச்சரிடம் ஒருநாள் கேட்டார் காரவேலர்.

"விதி என்று எதுவும் அப்படி இல்லை. ஆனால் வார்ப்பதற்கு வட்ட வடிவம் வசதியாக இருக்கும். அதனால்தான்

தொண்டையூர் வெடுக்குத்தன்!

தொன்றுதொட்டு நமது முன்னோர்கள் தோசையை வட்டமாக வார்த்து வருகிறார்கள்" என்றார் அமைச்சர்.

"எல்லாம் பழக்கம்தான் காரணம். பழக்கிக் கொண்டால் எல்லாம் சரியாக வந்து விடும். இனிமேல் நமது தவளைப் பட்டணத்தில் தோசையை யாரும் வட்டமாக வார்க்கக் கூடாது என்று உத்தரவு போடுங்கள். மீறி யாராவது வட்டமாக வார்த்தது தெரியவந்தால் கடும் தண்டனை என்று மக்களிடம் தெரிவியுங்கள்" என்று உத்தரவிட்டார் கரம்காரவேலர்.

"மன்னர் பெருமானே, தோசைக்கு என்று உள்ள உருவ இலக்கணம் வட்டம்தான். நமது கவிஞர் பெருமக்கள் வானத்து நிலவை வட்டமான தோசைக்கு உதாரணமாக் காட்டி பாடல்கள் கூட எழுதியிருக்கிறார்கள். 'வட்ட வட்ட தோசை' என்று குழந்தைகள் கூடப் பாடுகிறார்கள். அதனால் தயைகூர்ந்து தோசையின் வடிவத்தை மாற்ற ஆணையிடாதீர்கள் என்று கவிஞர்கள் சார்பில் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்" என்று கெஞ்சினார் அரசவைக் கவிஞர்.

சின்னபாபு



"எந்த சமாதானமும் எனக்கு வேண்டாம். வட்ட வட்ட தோசை என்று இனிமேல் யாராவது பாடினால் கடுமையான தண்டனைதான்" என்று முழங்கினார் கரம் காரவேலர்.

இப்படிப்பட்ட விசித்திரமான குணமுடைய கரம் காரவேலருக்கு ஏதாவது ஒரு செல்லப் பிராணியை வளர்க்க வேண்டும் என்ற ஆசை பிறந்தது.

மந்திரிப் பிரதானியை அழைத்தார். தன் ஆசையை வெளியிட்டு "எதை வளர்க்கலாம்?" என்று அவர்களிடம் கருத்துக் கேட்டார்.

"நாய் வளர்க்கலாம். அது நன்றியுள்ள பிராணி என்பதுடன், இப்பொழுதெல்லாம் பிரபுக்களும் மன்னர்களும் நாயைத்தான் வளர்க்கிறார்கள்" என்றார் அமைச்சர்.

"நாய் வேண்டாம். அது என்னைப் பார்த்தாலும் வாலை ஆட்டும். அதைக் கவனித்துக் கொள்ளும் வேலைக்காரர்களைப் பார்த்தாலும் வாலை ஆட்டும். அது எனக்குப் பிடிக்காது" என்றார் கரம்காரவேலர்.

"மன்னவா, புலியை வளர்க்கலாமே? வீரத்திற்கு இலக்கணமாகவும் இருக்கும்?" என்றார் தளபதியார்.

சிறிது நேரம் யோசித்த மன்னர், "புலி யோசனை நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் புலியைப் பிடித்துக் கொண்டு தெருவில் நடந்து போக முடியாதே? நினைத்த போது மடியில் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்ச முடியாதே!" என்றார்.

"அப்படியானால் பூனையை வளர்க்கலாம் மன்னா. மடியில் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்ச முடியும்" என்றார் அமைச்சர்.


"நல்ல காரியத்தைச் செய்யக் கிளம்பும் போது அது குறுக்கே வரும். சகுனத் தடையாகும். பூனை யோசனை வேண்டவே வேண்டாம்" என்றார் மன்னர்.

"அப்படியானால் குரங்கை வளர்க்கலாம் மன்னா. மடியில் வைத்துக் கொண்டு கொஞ்ச ஏற்றது அது. கையில் பிடித்துக் கொண்டு தெருவில் கூட நடக்கலாம்" என்றார் தளபதி.

"குரங்குக் குட்டியை வளர்த்தால் அதை எல்லோரும் 'ராஜாக் குரங்கு' என்பார்கள். வேண்டாதவர்களுக்கு எல்லாம் மிகவும் வேடிக்கையாக இருக்கும். அதைக் கூப்பிடுவதைப் போல் 'ராஜாக் குரங்கு' என்று கூப்பிட்டு என்னை மறைமுகமாகக் கேலி பண்ணுவார்கள். அவர்கள் மேல் என்னால் நடவடிக்கை கூட எடுக்க முடியாது. 'குரங்கைத்தான் குறிப்பிட்டேன்' என்பார்கள். குரங்கு யோசனை வேண்டவே வேண்டாம்" என்று மறுத்தார் மன்னர் கரம்காரவேலர்.

"மகாராஜா, நீங்கள் கூறுவதையெல்லாம் பார்க்கும் போது, செல்லப் பிராணியாக வளர்க்கக்கூடிய பெருமைக்கு உரியதாக தவளையைத்தான் எனக்குத் தோன்றுகிறது. அதை மடியில், பல்லக்கில், சிம்மாசனத்தில் கூட பக்கத்தில் வைத்துக் கொண்டு கொஞ்சலாம். அது எழுப்பும் "கொடகொட" சத்தம் குழந்தைகளை மகிழ்விக்கும். அதோடு நமது தவளைப் பட்டணத்திற்கும் அது பெருமை சேர்ப்பதாக இருக்கும்" என்று பணிவோடு கூறினார் கோமாளி.

கரம்காரவேலர் கோமாளியின் யோச



ணையைக் கேட்டதும் மகிழ்ச்சியோடு துள்ளிக் குதித்தார்.

"அருமையான யோசனையைக் கூறினீர்கள். உம்முடைய பெருமைமிக்க கருத்துக்கு இது எமது பரிசாக இருக்கட்டும்" என்று அமைச்சரின் கழுத்தில் இருந்த முத்து மாலையைக் கழற்றச் சொல்லி கோமாளியாரிடம் கொடுத்தார் மகாராஜா.

அரசருக்கு மகிழ்ச்சி வந்து விட்டால் போதும். பக்கத்தில் உள்ள மந்திரிப் பிரதானிகள் அணிந்துள்ள நகைகள், பட்டாடைகளைக் கழற்றச் சொல்லிப் பரிசளித்து விடுவார்! இந்தப் பயம் காரணமாகவே யாரும் நல்ல ஆடை அணிகலன்களணிந்து கொண்டு அரசரிடம் பேச வர மாட்டார்கள்.

"நாம் வளர்ப்பதற்கு முற்றிலும் ஏற்றதாக ஒரு பெரிய தவளையைத் தேர்ந்து எடுங்கள். அது "கொட கொடா" சத்தம் போட்டால் நம் தவளைப் பட்டணம் முழுவதும் கேட்க வேண்டும். மற்ற தவளைகளை விட அதிக தூரம் அது தாவிக் குதிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். யார் அப்படிப்பட்ட ஓர் அதிசயத் தவளையைக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கு அந்தத் தவளையின் எடைக்கு எடை தங்கம் தரப்படும் என்று அறிவியுங்கள்" என்று உத்தரவிட்டார் கரம்காரவேலர்.

அரண்மனையில் வேறு எந்த வேலையும் நடக்கவில்லை. பணியாளர்கள் எல்லாம் தவளைப் பணியிலேயே முழுவதுமாக ஈடுபடுத்தப்பட்டனர். தவளையைக் கொண்டு வந்தவர்கள் விருந்தினர் விடுதியில் வசதியாகத் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு அருமையான சாப்பாடு போடப்பட்டது. தவளைகளுக்கு உணவளிக்க தனியாகப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டு பூச்சி புழுக்களைப் பிடிக்க அனுப்பப்பட்டனர்.

ஒவ்வொரு தவளையைப் பற்றியும் எடுக்கப்பட்ட விவரங்கள் எல்லாம் கம்ப்யூட்டரில் கொடுத்து தொகுக்கப்பட்டன. கடைசியாக குரட்டையூர் பொன்னுச்சாமி என்பவர் கொண்டு வந்த தவளையே மிகச் சிறந்த தவளை என்றும், மன்னரின் செல்லப் பிராணியாக இருக்க


முற்றிலும் தகுதிபெற்றது என்றும் கம்ப்யூட்டர் முடிவைத் தெரிவித்தது. அமைச்சரும், தளபதியும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

ஆனால் அவர்கள் நிம்மதி நீடிக்கவில்லை. மன்னர் அடுத்த நாளே மந்திரி சபையைக் கூட்டினார். "தேர்ந்தெடுக்கப்பட்ட தவளைக்குப் பொருத்தமான ஒரு பெயரைக் கூறுவோருக்கு ஒரு தங்கப் பதக்கம் தருவதாக அறிவியுங்கள்" என்று உத்தரவிட்டார். அரண்மனை வாசலில் மேஜையைப் போட்டுக் கொண்டு அரண்மனைப் பணியாளர்கள் உட்கார்ந்தனர். வருகிறவர்கள் போகிறவர்கள் எல்லாம் தவளைக்குப் பொருத்தமான ஒரு பெயரைக் கூற, அவர்கள் முகவரியுடன் பணியாளர்கள் அதைக் குறித்துக் கொண்டனர். தினமும் அமைச்சரவை கூடி பெயர்களைப் பரிசீலித்தது. கடைசியில் தகரப்பட்டி பூமாலை என்பவர் தெரிவித்த "குரட்டையூர் பெருஞ்சத்தன்" என்ற பெயரே பொருத்தமானது என்று முடிவு செய்தது. தங்கப் பதக்கம் வழங்கி தகரப்பட்டி பூமாலை சிறப்பிக்கப்பட்டார்.


குரட்டையூர் பெருஞ்சத்தனுக்கு என்று மன்னர் பக்கத்தில் அமர ஒரு சின்ன சிங்காதனம் செய்யப்பட்டது. பட்டு மெத்தை வைத்து ஒரு அழகிய பல்லக்கு தயார் செய்யப்பட்டது. அது நீந்தி விளையாட ஒரு சின்னக் குளம் வெட்டப்பட்டது. அதைக் கவனித்துக் கொள்ள தனியாகப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டனர். பெருஞ்சத்தன் எத்தனை முறை குதித்தது, அதன் அளவு எத்தனை அது எழுப்பிய சத்தம் எத்தனை தூரத்திற்குக் கேட்டது என்பதை எல்லாம் அவர்கள் குறித்துக் கொண்டு மன்னரிடம் தெரிவித்து மகிழ்வித்தனர்.

இந்த நிலையில் மன்னர் அமைச்சரவையைக் கூட்டினார். மனத்தில் நடுக்கத்துடன் அமைச்சரும் பிரதானிகளும் போனார்கள்.

"அமைச்சரே, நமது குரட்டையூர் பெருஞ்சத்தனின் பெருமைகளைப் புகழ்ந்து கவிதைகள் எழுதும்படி நமது அரசவைக் கவிஞர்களுக் குத் தகவல் அனுப்புங்கள். பெருஞ்சத்தன் எனது நண்பனாக இங்கு வந்து நாற்பது நாட்கள் ஓடி விட்டன. இன்னும் பத்து நாட்கள் போனால் பொன் விழா. அதைக் கொண்டாட சிறப்பான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். பெருஞ்சத்தனை விட அதிக சத்தம் எழுப்பக்கூடிய தவளைக்கும் அதிக தொலைவு தாண்டக்கூடிய தவளைக்கும் பொற்கிழி வழங்கப்படும் என்று அறிவியுங்கள்" என்று மன்னர் உத்தரவிட்டார்.



அமைச்சர் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். மன்னரின் உத்தரவைக் கேட்ட புலவர்கள், சொல்லிக்காது தவளைப் பட்டணத்தை



விட்டு ஓடி விட்டனர். மக்களெல்லாம் ஆளுக்கு ஒரு தவளையைப் பிடித்துக் கொண்டு அரண்மனைக்குப் படையெடுத்தனர். நாட்டில், எந்தப் பணிகளும் நடைபெற வில்லை. எல்லோரும் தவளைகளைப் பிடித்து வந்து பொற்கிழி வாங்குவதில் போட்டி போட்டு முனைந்தனர்.

பெருஞ்சத்தனோடு போட்டியிட வந்த தவளைக் கூட்டத்தைக் கண்டதும், கரம்கார வேலர் தன்னையே மறந்தார்.

நாட்டை விட்டு மற்ற கவிஞர்களோடு ஓடிப் போன அரசவைக் கவிஞர் ஒரு காட்டில் தங்கினார். அந்தக் காட்டில் மாடு மேய்த்து வந்த சிறுவன் சின்னான் புத்திசாலி. கல்வி யறிவு இல்லை என்றாலும் அனுபவ அறிவு மிக்கவன். அவ்வளவு புலவர்கள் கூட்டமாக வந்திருந்தது அவனுக்குத் திகைப்பாக இருந்தது. தன் குடிசைக்கு அவர்களை அழைத்துச் சென்று உபசரித்து விசாரித்தான். அரசவைக் கவிஞர் எல்லாவற்றையும் கூறினார்.

"இப்படிப் படித்த அறிஞர்கள் எல்லாம் நகரத்தை விட்டுக் கிளம்பி வந்து விட்டால் நாடு என்னாகும்? நீங்கள் எல்லோரும் இங்கேயே இருங்கள். அந்த மதி கெட்ட மன்னனை நான் வழிக்குக் கொண்டு வந்து உங்களை அழைத்துப் போகிறேன்" என்று கிளம்பினான் சின்னான்.

தனக்கு முன்னால் வந்து நின்ற சின்னானை மன்னர் கரம்காரவேலர் வியப்போடு நோக்கினார்.

"மன்னவா, பெருமைமிக்க உங்கள் தவளை நண்பர் குரட்டையூர் பெருஞ்சத்தனை விட உயரத்திலும் நீளத்திலும் அதிகமாகக் குதித்துக் காட்டும் தவளையைக் கொண்டு வந்தால் என்ன பரிசளிப்பீர்கள்?"

மன்னர் பெரிதாகச் சிரித்தார.

"இலட்சக்கணக்கான தவளைகளாலும் இதுவரை தோற்கடிக்க முடியாத என் பெருஞ்சத்தனை வெல்லக்கூடிய தவளையும் கூட உலகத்தில் இருக்கிறதா?"

"இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டினால்?"

"அறிவித்தபடி பொற்கிழி தருகிறேன்"

"எனக்குப் பொற்கிழி வேண்டாம்."

"சரி, நீ என்ன கேட்கிறாயோ அதைத் தருகிறேன்."

மன்னரிடம் உறுதிமொழி வாங்கிக் கொண்டான் சின்னான். சின்னான் கொண்டு வந்த தவளைக்கும், பெருஞ்சத்தனுக்கும் குறிப்பிட்ட நாளில், பெருந்திரளான மக்களுக்கிடையே போட்டி தொடங்கியது.

முதலில் சின்னானின் தவளை எடுத்து வரப்பட்டது. அது இரண்டு முழ உயரம் குதித்தது. மூன்று முழுத் தொலைவு தாண்டியது.

'கடகட'வென்று சிரித்த கரம்கார வேலர், "பூ! இது என்ன பிரமாதம். என் பெருஞ்சத்தன் இந்த மாதிரி இரண்டு பங்கு தாவிக் காட்டுவான்" என்றார் பெருமிதத்துடன்.

பலத்த ஆரவாரத்திற்கு இடையே பெருஞ்சத்தன் எடுத்து வரப்பட்டது. அதைத் தரையில் வைத்த மன்னர் உசுப்பி விட்டார். சர்வ சாதாரணமாக மிக எளிதாக மூன்று முழும் தாண்டிக் குதிக்கும் பெருஞ்சத்தன் அன்று என்னவோ பாவம், ஒரு முழும் தாண்டக்கூட மிகவும் சிரமப் பட்டது! மன்னரின் முகம் கலக்கத்தால் வியர்த்துக் கொட்டியது.

"பரவாயில்லை மன்னா. உங்கள் பெருஞ்சத்தனுக்கு இன்னொரு வாய்ப்புத் தருகிறேன். மறுபடி குதித்துத் தாண்டச் சொல்லுங்கள்" என்றான் சின்னான்.

மன்னர் மறுபடி முயன்றார். இந்த முறை அரைமுழ உயரம் கூட பெருஞ்சத்தனால் தாண்ட முடியவில்லை.

"சின்னான், என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன். உனக்கு என்ன வேண்டுமோ கேள். ஒப்பந்தப்படி கண்டிப்பாகத் தருகிறேன்" என்று பணிந்தார் மன்னர்.

"எனக்கு எந்தப் பரிசும் வேண்டாம். நீங்கள் தவளைப் பைத்தியத்தை விட வேண்டும். அரசாங்கப் பணிகளில் ஈடுபட்டு மக்களுக்கு நல்வாழ்வு தரப் பாடுபட வேண்டும்."

இந்தவரை தனது தன்மானத்தைப் பாதிக்கும் எதையும் கேட்காது விட்டானே என்று மன்னருக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

"பெருஞ்சத்தனை என்ன பண்ணுவது?"

"இனி இதைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். தவளைகள் இருக்க வேண்டிய இடம் குளம் குட்டைகளே. அரண்மனை அல்ல" என்று அதைக் கையில் தூக்கிக் கொண்டு கிளம்பினான் சின்னான்.

அரண்மனை வாயிலில் அமைச்சர் இரகசியமாக சின்னானை வழிமறித்தார்.

"சின்னான், இந்த நாட்டைப் பேரழிவில் இருந்து காத்த பெருமை உனக்கே உரியது. உனக்கு என்ன வேண்டும்? பொற்கிழியையே உதறி விட்டு வந்து விட்டாயே!"

"எனக்கு எதுவும் வேண்டாம். மன்னர் தவறு செய்தால் அதை இடித்துக் காட்டித் திருத்துவது உங்கள் கடமை என்பதை மறவாதீர்கள். அவர் விருப்பத்திற்கெல்லாம் தாளம் போட்டால் இந்தக் கதிதான்."

"பெருஞ்சத்தனை எப்படி உன்னால் தோற்கடிக்க முடிந்தது?"

கையில் பிடித்து வைத்திருந்த பெருஞ்சத்தனைத் திருப்பிக் காட்டினான் சின்னான்.


குதிக்கப் பேருதவியாக இருக்கும் அதன் பின்கால்கள் இரண்டிலும் மிளகின் அளவுக்கு இரண்டு வெள்ளை உருண்டைகள்!

"இவை சுவிங்க உருண்டைகள்" என்று சிரித்தான் சின்னான்.

"இனிப்பு கொடுக்கிறியே என்ன விசேஷம்?"

"இன்று என்னோட இறந்த நாள்."

- எஸ். தட்சணாமூர்த்தி.





"என்ன ராமு பொங்கல் வாழ்த்து அனுப்ப உன்னோடு சண்டை போட்டவங்க அட்ரஸ் எல்லாம் வாங்கி இருக்கே."

"ஸ்டாம்ப் ஒட்டாமல் அனுப்பிப் பழி தீர்க்கத்தான்."

- வாண்டுதாசன்.

நியா மெட்டாள்?

பூவை அமுதன்

அரையாண்டுத் தேர்வு முடிந்ததும் விடுமுறையில், கௌதம் தன் அம்மம்மா ஊருக்குச் சென்றிருந்தான். தன் அம்மாவுக்கு அம்மாவான பாட்டியை அவன் அம்மம்மா என்றுதான் குறிப்பிடுவான். அவர்கள் வீட்டில் எல்லோருமே அப்படித்தான் கூப்பிடுவார்கள். அப்பாவுக்கு அம்மாவை அப்பம்மா என்பார்கள்.

அம்மம்மாவின் ஊரைச் சுற்றிலும் பச்சைப் பசேலென்று எங்கும் நெல் வயல்களும் வாழைத் தோட்டங்களும் தென்னந் தோப்புகளுமாக இருக்கும். அந்தச் சின்ன ஊருக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை பஸ் கூட வந்து போகும்.

பஸ் வரும் சாலை குறுகலாகவும், பஸ் வந்து போனால், அது ஓடுவதே தெரியாதபடி ஒரே புழுதி மண்டலத்தை எழுப்புவதாகவும் இருக்கும்.

ஊருக்கு மேற்கேயிருக்கும் அந்தக் கல் ரோட்டிலே இரட்டை மாட்டுக் கட்டை வண்டிகள் தான் அதிகமாகப் போகும். அந்த வண்டிகளையெல்லாம் பார்க்கப் பார்க்கப் கௌதமுக்கு வேடிக்கையாக இருக்கும்.

அந்தச் சாலையிலே ஓரிடத்தில் ஓரமாக ஒரு சுமைதாங்கியிருந்தது. பலகை போல அகலமான இரண்டு கற்பாறைகளை நட்டு, அவற்றின்மேல் கொஞ்சம் கூடுதலான அகலமுள்ள கற்பாறை பொருத்தப்பட்டிருந்தது.


அந்த வழியில் செல்கிறவர்கள் சற்று நேரம் அதன் மேல் அமர்ந்து விட்டுச் செல்வார்கள். சிலபேர் தங்கள் தலையிலும் தோளிலும் சுமந்து வரும் மூட்டை, பை போன்ற சுமைகளை அதன் மேல் இறக்கி வைத்து, இளைப்பாறிவிட்டுச் செல்வார்கள்.

கௌதம், அம்மம்மா ஊருக்குப் போனால், அடிக்கடி அங்கே போய், அந்தச் சுமைதாங்கியின் மேல் ஏறி அமர்ந்து கொள்வான். வருகிறவர்கள் போகிறவர்களை வேடிக்கை பார்ப்பான். கட்டை வண்டிகளைப் பார்ப்பதில் அவனுக்கு மட்டில்லாத மகிழ்ச்சியாக இருக்கும்.

சில சமயம் ஏதோ ஒரு பஸ்ஸோ காரோ புழுதியைக் கிளப்பிக் கொண்டு வரும். சுமை தாங்கியின் மேல் உட்கார்ந் திருக்கும் கௌதமின் முகமெல்லாம் பவுடர் போட்டதைப் போல் தூசு படிந்து விடும்.

அன்றைக்கு அவன் காலையிலேயே தனியாக கல் ரோட்டுக்குப் போய் விட்டான். சுமை தாங்கியின் மேல் உட்கார்ந்து கொண்டான்.

சட்டை போடாத ஓர் ஆள் சைகிளை வேகமாக மிதித்துக் கொண்டு போனான். அந்தச் சைகிள் குண்டும் குழியுமாக இருந்த அந்தக் கல்ரோடில் கட்டை வண்டி போலவே சத்தம் போட்டுக் கொண்டு போனது.



சிறிது நேரத்தில் ஒரு பையன் அந்தப் பக்கமாக வந்தான். அவனுக்குக் கௌதம் வயது தான் இருக்கும். அவன் உடம்பிலும் சட்டையில்லை. தொளதொளவென்று இருந்தது கால் சட்டை அது வழுக்கி விடாமலிருக்க இடுப்புக்கு மேலே கறுப்புக் கயிரைப் போட்டு இறுக்கிக் கட்டியிருந்தான். அவன் கையிலே ஒரு வெட்டுக் கத்தியிருந்தது.

கௌதம் அமர்ந்திருந்த சுமை தாங்கிக்குப் பக்கமாகச் சாலை ஓரத்திலே ஒரு வேப்ப மரம் வளர்ந்திருந்தது. பெரிய மரம்தான். அதன்

ஒரு கிளை தாழ்வாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அது முழுக் கிளையாக இல்லை. ஏற்கெனவே பாதி வெட்டப்பட்டிருந்தது.

கத்தியோடு வந்த பையன் கௌதமைப் பார்த்தான். ஒரு மாதிரியாகச் சிரித்தான். அடுத்த நிமிஷமே கத்தியை எடுத்தான். தொங்கிக் கொண்டிருந்த கிளையை வெட்டினான்.

"தம்பி! இதை ஏன் வெட்டுகிறாய்?" என்றான் கௌதம் எழுந்து நின்று.

"என் வெள்ளாட்டுக் குட்டிக்குத் தீனி வேணும். வேப்ப இலையைக் குட்டி நல்லாத் தின்னும்" என்றான் அந்தப் பையன்.

"பச்சை மரத்தை வெட்டலாமா?"

"பாவம்தான். எனக்குத் தெரியுமே! ஆனா, யாரோ ஏற்கெனவே வெட்டிச் சாய்ச்சிருக்காங்களே? மீதியைத் நானே நான் வெட்டறேன்?" என்றான் அவன்.

"ஊரெல்லாம் மரம் வளர்க்கணுங்கிறாங்க. நீ மரத்தை வெட்டறியே?" என்றான் கௌதம்.

நான் ஒன்னும் மரத்தை வெட்



டலே.. தொங்கிக் கிட்டிருக்கிற கிளையைத் தான் கழிக்கறேன். என் ஆட்டுக்கும் தழை வேணுமில்லே?"

"உன் ஆட்டுக்காக, ஊருக்கெல்லாம் நிழல் கொடுக்கிற மரத்தைக் கொஞ்சம் கொஞ்சமா வெட்டலாமா? தப்பு செய்யறே..! கேட்டால் முட்டாள் தனமா பேசறே" என்றான் கௌதம் சற்றுக் கோபமாக.

"நீ பட்டணத்துத் தம்பி.. இப்படித் தான் பேசுவே. உனக்கென்ன தெரியும்?" என்று பழிப்பது போல் இரண்டு கைகளையும் விரித்துக் காட்டிப் பேசினான் அந்தப் பையன்.

"சொன்னால் உனக்குக் கோபம் வருது. யோசிச்சுப்பார். வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கணுமின்னு சொல்றாங்க. நீ என்னடான்னா ரோட்டிலே வளர்ந் திருக்கிற மரத்தை வெட்டறே! ரோடும் ரோட்டிலே இருக்கிற மரமும், அரசாங் கத்துக்குச் சொந்தம். அதை யாரும் அழிக்கவோ சிதைக்கவோ கூடாது. அப்படிச் செய்தால் அது குற்றம். பிடிச்சி ஜெயில்லே போட்டுடுவாங்க" என்று பய முறுத்தும் பாணியில் பேசினான் கௌதம்.

"எல்லாம் எனக்கும் தெரியும். நானும் இந்த ஊரிலே மூனாவது வரைக்கும் படிச் சவன்தான்" என்று சொல்லிக் கொண்டே அவன் பக்கத்தில் வந்து சுமைதாங்கியின்மேல் அமர்ந்தான்.

"தம்பீ! இதை நான் எதுக்கு வெட்டினேன் தெரியுமா?" என்று அவனே கேட்டான்.

"அதுதான் சொன்னியே... ஆட்டுக் குட்டிக்கின்னு..." என்று வெறுப்பாகச் சொன்னான் கௌதம்.

"அதுக்காக மட்டுமில்லே... கேளு... நேத்து சாயந்திரம் ஒரு பெரியவர் ஒரு சின்ன அரிசி மூட்டையைத் தூக்கிக் கொண்டு இந்த வழியா வந்தார். மூட்டையை இந்தக் கல்லுமேலே இறக்கி வச்சிக் கொஞ்ச நேரம் இளைப் பாறினாரு. அப்புறமா பழையபடி தலை மேலே தூக்கி வச்சிக்கிட்டுத் திரும்பி ரோட்டிலே இறங்கி நடக்கப் போனாரு. அவ்வளவுதான்... தொங்கிக் கிட்டிருந்த தில்லே... இந்தக் கிளை, இதிலே அவர் தலை மேலே இருந்த மூட்டை பட்டு, அப்படியே மூட்டையோடு தள்ளாடிக் கீழே விழுந் திட்டாரு. நான்தான் ஓடி வந்து தூக்கினேன். பாவம்... கடைசியா... அவர் நடக்க முடியாமே நடந்து போனாரு. பார்க்கப் பரிதாபமா இருந்திச்சு. இந்தச் சுமைதாங்கி பாரத்தை இறக்கி வச்சிக் களைப்பாற உதவுது. இந்த வெட்டுப்பட்ட கிளை, முட்டி மோதிக் கீழே தள்ளுது. அதனாலேதான் இதை ஒட்ட வெட்டிடணம்னு நேத்தே நினைச்சேன். தம்பி... ஒன்னு உதவற போது, இன்னொன்னு தடுக்கக் கூடாது இல்லையா? நாமயாருக்கும் உதவலேன்னா பரவாயில்லே... உபத்திரவம் கொடுக்கிற மாதிரி இருக்கக் கூடாது இல்லையா...?"

அந்தப் பையன் பேசிக் கொண்டேயிருந்தான். அதிர்ந்து போய் விட்டான் கௌதம். அவனைப் போய் முட்டாள் என்று நினைத்துக் கொண்டேனே என்று தனக்குள்ளேயே எண்ணி வெட்கப்பட்டான். மூன்றாவது படித்தவன். அந்தச் சூழ்நிலையை வைத்து எப்படிச் சிந்திக்கிறான் என்று ஆச்சரியப்பட்டான்.

அதைவிட ஆச்சரியமாக இருந்தது, அடுத்து அவன் செய்த செயல்!



உட்கார்ந்து சாப்பிட முடியாத டேபிள் எது?

"டைம் - டேபிள்"

- கு.காந்திராசு

"தம்பீ! உன்பேர் என்ன?"

"கௌதம்."

"என் பேரு என்ன தெரியுமா...? பிச்சை!" கௌதம் கேட்காத போதே அவன் சொன்னான்.

"இப்படிப் பேரு வச்சதனாலேதான் நான் உயிரோடு இருக்கேனாம். எனக்கு முன்னாடி பிறந்த அண்ணன் அக்கா வெல்லாம் ஒரு வருஷம் கூட உயிரோடு வாழலியாம். அதான், ஆண்டவன் போட்ட பிச்சைன்னு எனக்கு இந்தப் பேரு வச்சிருக்காங்க" என்று சொல்லிக் கொண்டே, கௌதம் பக்கத்தில் வைத்திருந்த புத்தகத்தைத் தானாகவே எடுத்துப் பிரித்தான்.

அது ஆங்கிலக் கதைப் புத்தகம். படங்கள் நிறைய இருந்தன. பிச்சை ஆர்வத்தோடு பக்கங்களைப் புரட்டினான்.

"உனக்கு இங்கிலீஷ் தெரியுமா!" என்று கேட்டான் கௌதம்.

"படிக்கத் தெரியாது. ஆனால் இந்தப் படங்களைப் பார்த்துக் கதையைத் தெரிஞ்சுக்குவேன்...?"

"உன்னால் முடியுமா...? சொல்லு பார்க்கலாம்?" என்று அவனை ஆச்சரியத்தோடு பார்த்துக் கேட்டான் கௌதம்.

பிச்சை அந்தப் படங்களைச் சற்று நேரம் வரை உற்றுக் கவனித்து விட்டுத் தனக்குத் தோன்றியதைக் கூறினான். அவன் சொன்னது ஏறக்குறைய சரியாகத் தான் இருந்தது.

"உன்னைப் போய் நான் முட்டாள் என்று நினைச்சேனே...! நான் தான் முட்டாள்" என்றான் கௌதம்.

"நீயும் முட்டாள் இல்லை... நானும் முட்டாள் இல்லை. புரிஞ்சிக்கிட்டா எல்லாரும் புத்தசாலிதான்" என்றான் பிச்சை.

"நீ என்ன செய்யறே...? படிக்கலியா?" என்று பரிவோடு கேட்டான் கௌதம்.

"நான் படிக்கலே.. படிச்சது போதுமுன்னு நின்னிட்டேன். அப்பாவோடு விவசாயம் பார்க்கறேன். ஆடு மாடுகளை மேய்க்கிறேன். ஏர் உழுவேன். வண்டி ஓட்டுவேன். வீட்டு வேலை எல்லாம் செய்வேன்..." அவன் சொல்லிக் கொண்டேயிருந்தான். அதைக் கேட்க கௌமுக்குக் கஷ்டமாக இருந்தது.

"நமக்கெல்லாம் இது படிக்கிற வயசு!" என்றான் மெதுவாக.

"அப்பா அம்மா கூடப் படிக்கத்தான் சொன்னாங்க. என்னாலேதான் முடி யல்லே."

"ஏன்? உனக்குப் படிக்க இஷ்டம் இல்லையா?"

"இஷ்டம் இல்லையாவது...? நான் நல்லாத்தான் படிச்சிக் கிட்டிருந்தேன். அப்பாவுக்கு ஓயாத இருமல். ஒண்டிக் கட்டையா உழைக்கிறாரு. அவருக்கு ஒத்தாசையாயிருக்கத்தான் படிப்பை விட்டிட்டேன். இங்கே ஊரிலே ஒரு அண்ணன் இருந்தாரு. அவர் ராத்திரியிலே எல்லாருக்கும் படிப்புச் சொல்லித் தருவாரு. அவருக்கு வெளியூரிலே நல்ல வேலை கிடைச்சிட்டது. போயிட்டாரு."

பிச்சையின் பேச்சில் கவலை தெரிந் தது. கௌதம் மௌனமாக யோசித்துக் கொண்டிருந்தான்.

"பிச்சை! நான் இன்னும் பத்து நாளைக்கு இந்தப் புளுகன் பட்டியிலே என் அம்மம்மா வீட்டிலே இருப்பேன். நான் உன் கூடவேயிருந்து, எனக்குத் தெரிஞ்ச இங்கிலீஷை உனக்குச் சொல்லித் தரட்டா?" என்று ஆர்வத்தோடு கேட்டான் கௌதம்.


"எனக்குச் சந்தோஷமாயிருக்கு. நல்லா சொல்லிக்கொடு. கத்துக்கறேன். ஆனால் இந்த ஊரு பேரைச் சரியாச் சொல்லு இது புளுகன்பட்டியில்லே. புளியம்பட்டி. முன்னெல்லாம் இந்த ஊரிலே நிறைய புளிய மரங்க இருந்ததாம்" என்று இருத்தினான் பிச்சை.

"அடடே! புளியன்பட்டிதான் புளுகன் பட்டியா மாறிப் போச்சா?"

"பேச்சிலே அப்படி மாறிட்டது. ஆனா, இந்த ஊரிலே யாரும் புளுகறது இல்லை" என்று சொல்லிச் சிரித்தான் பிச்சை.

"ஈச் ஒன் டீச் ஒன்... அப்படின்னு இங்கிலீஷிலே சொல்லுவாங்க. படிச்சவங்க ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு ஆளுக்காவது சொல்லிக் கொடுக்கணுமாம்" என்றான் கௌதம்.

"தெரியாதவங்க, தெரிஞ்சவங்களைக் கேட்டுக் கத்துக்கணும். நான் கத்துக் கறேன்" என்றான் பிச்சை மகிழ்ச்சியுடன்.



"எங்க அப்பா ரொம்ப சிக்கனக்காரர்."

"அப்படியா!"

"ஆமாம். டாட்டா காட்டுறதா இருந்தாக்கூட, பெருவிரலை மட்டும்தான் ஆட்டுவாரு...."

-நெல்லை அருணா

எங்கள் ஊரில் நடந்தது!

மனகல என்ன இருக்கு?

நான் பத்தாவது முடித்து பல மாதங்களாகி விருந்தன. வீட்டில் சும்மாயிருக்கும் நேரத்தில் டியூஷன் நடத்தி வருகிறேன்.

அதில் ரமேஷ் என்ற மூன்றாம் வகுப்புப் படிக்கும் ஒரு சுட்டிப்பையன். அவன் கணிதத் தில் மக்கு. ஒரு சமயம் நாலுடன் இரண்டைக் கூட்ட வேண்டிய மனக் கணக்கு. "இரண்டை மனசில் வச்சிக்க. இனிமே மூன்றில் இருந்து கூட்டு" என்று விளக்கிப் புரியவைத்தேன். அடுத்தது இரண்டையும், ஆறையும் கூட்ட வேண்டிய கணக்கு. "இப்போது மனகல என்ன இருக்கு?" என்று கேட்டேன்.உடனே அவன், "டியூஷன் எப்ப விடுவீங்கன்னு இருக்கு" என்று சொன்னானே பார்க்கலாம்.

த.ஆனந்தன், வியாசர்பாடி.

முன்னதாக

ஒரு நாள் காலை எல்லோரும் பள்ளியில் கூடியிருந்தோம். எங்கள் வகுப்பாசிரியர் (ஆங்கில ஆசிரியர்) எங்களை ஆங்கிலக் கட் டுரை எழுதச் சொன்னார். எல்லோரும் எழுதிக் காட்டினோம். சந்திரன் எனும் மாணவன் ஆசிரியர் முன் மண்டியிட்டுக்கொண்டு நோட் டைக் காண்பித்தான். "ஆசிரியர் முன்பு இப் படியா மண்டியிட்டுக் கொள்வது? தவறில் லையா?" என்று கேட்டார் ஆசிரியர். உடனே சந்திரன் "ஐயா, என் கட்டுரையில் ஏதாவது தவறிருக்கும். நீங்கள் மண்டியிடச் சொல்வீர்



கள். அதைவிட நானே முன்னதாக மண்டியிட் டுக் கொள்ளலாமே என்றுதான் மண்டியிட்டுக் கொண்டேன்" என்றான். எல்லோரும் சிரித்தோம்.

த.விஜயராஜ், சோழன்மாளிகை

கருவாட்டின் விலை

எங்களது டியூஷன் சார், பண்டைய இந்தியா வின் வளங்களை அடிக்கடி எடுத்துரைப்பார். ஒருமுறை மீனவப் பெண் ஒருத்தி கருவாடு களைக் காய வைத்து கொண்டு இருந்தாள் என் றும் அப்பொழுது அந்தக் கருவாட்டை காகம் ஒன்று எடுக்க வந்தது என்றும் அந்தப் பெண் காதில் இருந்த ஓர் தங்க பாம்படத்தை எடுத்து வீசிக் காகத்தை

விரட்டியதாகவும் கூறினார். இதைக் கூறிவிட்டு "இதில் இருந்து என்ன தெரிகிறது?" என்று கேள்வி கேட்டார். உடனே மாணவர்கள் பாண்டியன், சதீஷ், சீனுவாசன், ஜெயன் ஆகிய நால்வரும் ஒரு மித்த குரலில் "அந்தக் காலத்தில் தங்கத்தை விட கருவாட்டின் விலை அதிகம் சார்" என்று கூறினர். ஆசிரியர் கோபத்துடன் தலையில் அடித்துக் கொண்டாலும் அடக்க முடியாது சிரித்து விட்டார்.

சே.காளிச்சரன், சாத்தனூர்.

கேமராவால் சுடு

எங்களுக்கு ஆங்கில வகுப்பு. ஆசிரியர் பாடம் நடத்தினார். அதில் Shoot with camera என்பதை தமிழில் விளக்குங்கள் என்று கேட்டார். யாருக்கும் தெரியவில்லை. அதனால் அவரே "உதாரணத்திற்கு Shoot with gun என்றால் துப்பாக்கியால் சுடுதல்" என்றார். உடனே ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து "Shoot with camera என்றால் கேமராவால் சுடு" என்றானே பார்க்கலாம்! ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

எம்.எஸ்.பெருமாள் , சித்தம் பூண்டி

என்ன தண்டனை?

எங்கள் தமிழாசிரியர் எல்லோருடைய பெயரையும் இனிஷியல் உட்பட சேர்த்துத்தான் அழைப்பார்.





ஒரு நாள் பா.சுமதி என்ற மாணவியிடம் ஆசிரியர் கேள்வி கேட்க அதற்கு சுமதி பதில் தெரியாமல் விழிக்க, அருகில் அரைத் தூக்கத்தில் இருந்த மல்லிகா என்ற மாணவியை எழுப்பி "பா.சுமதியை என்ன செய்யலாம் மா.மல்லிகா?" என்று கேட்டார். தூக்கம் கலையாமல் இருந்த மல்லிகாவுக்கு பா.சுமதி என்ற பெயர் 'பாசுமதி' என்ற அரிசியின் பெயரைப் போல் ஒலிக்க "பிரியாணி செய்யலாம் ஐயா" என்று பதில் கூற வகுப்பே சிரிப்பலையில் மூழ்கியது.

எஸ். தட்சணா மூர்த்தி, நாகலூர்.

ஆந்தை முழி

எங்கள் வகுப்பில் ஒரு மாணவன் நன்றாகப் படிக்க மாட்டான். ஆசிரியர் அவனுடைய பெற்றோரை அழைத்து வரச் சொன்னார். மறு நாள் அவன் தன் அம்மாவைக் கூட்டிக் கொண்டு வந்தான். ஆசிரியர் அவரிடம் "உங்க பையன் எது கேட்டாலும் திருதிருவென விழிக்கிறான். நாளை கல்வி அலுவலர் வருகிறார். அவர் கேட்கும்போது இப்படியே முழித்தால் என்ன ஆவது?" என்று முறையிட்டார். அதற்கு அந்தம்மா "நீங்கள் இன்ஸ்பெக்டரை முந்திக் கொண்டு பையனிடம் 'ஆந்தை எப்படி முழிக்கும்' என்று மட்டும் கேளுங்கள்" என்றாரே பார்க்கலாம். ஆசிரியர் உட்பட எல்லோரும் சிரித்து விட்டோம்.

பெருமாள், சேலம்


தூக்கலாப் போடு!

என் சித்தப்பா டீக்கடை வைத்துள்ளார். இவர் ஜோக் சொல்வதில் வல்லவர். பொதுவாக இவர் அடிக்கும் ஜோக்குகளைக் கேட்கவே பல பேர் வருவார்கள். ஒரு நாள் ஊரில் இருந்து மாமா வந்திருந்தார். அவர் அதிகமாக இனிப்பு சாப்பிடுவார். நான் டீக் கடைக்குச் சென்று "சித்தப்பா சித்தப்பா.. மாமா வந்திருக்கார் சர்க்கரையை சற்றுத் தூக்கலாகப் போடுங்கள்" என்றேன். சித்தப்பா என்ன செய்தார் தெரியுமா? சர்க்கரையை எடுத்து 'ஸ்பூனை' தலைக்குமேல் உயர்த்தி பாலுடன் சேர்ந்த ஜக்கைக் கீழே தாழ்த்தி, உயரத்தில் இருந்தபடி ஸ்பூன் சர்க்கரையைப் போட்டார். இதை வீட்டில் வந்து உடனே சொல்லி விட்டிருந்தால் பரவாயில்லை. எல்லோரும் காபி குடிக்கும் போது சொல்லவே, காப்பியைத் துப்பி விட்டு சிரித்தோம்.

இராம. ஜெயகாந்தன், துத்திப்பட்டு.

அருமை!

நான் ஏழாம் வகுப்பு படித்து வருகிறேன். என் தங்கை இரண்டாம் வகுப்பு. அன்று பள்ளிக்கு விடுமுறை. தங்கைக்கு தமிழ்ப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். டிக்டேஷன் போடும்போது, எருமை என்று எழுதச் சொன்னேன். தங்கையோ எருமை என்று எழுதுவதற்கு பதிலாக Aருமை என்று எழுதினாள்.





அனைவரும் சிரித்தோம். தங்கை மட்டும் ஏன் சிரிக்கிறோம் என்று தெரியாமல் விழித்தாள். பிறகு "ஏன்? இதுவும் எருமைதானே? ஏன் இப்படி எழுதக் கூடாது?" என்று கேட்டாள்.

"நான் எருமை எழுதச் சொன்னது தமிழில். அதனால் முழுக்கத் தமிழ் எழுத்துக்களிலேயே எழுத வேண்டும்." என்று விளக்கினேன்.

சி.கணேஷ் குமார், வைத்தீஸ்வரன் கோயில்.

எது இல்லையோ

என் தாத்தா, தங்கைக்குப் பிரகலாதன் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தார். கதை முடிந்த பின் தங்கையைப் பார்த்து "கடவுள் உன் முன் வந்தால் அவர் கிட்ட நீ என்ன கேட்பே?" என்று கேட்டார். அதற்கு என் தங்கை, "தாத்தா! கடவுள் என் முன் வந்தால் லட்ச லட்சமாய்ப் பணம் கொடுன்னு கேட்பேன்" என்றாள். உடனே தாத்தா, "போடி முட்டாள்! பணத்தையா கேட்கிறது? கடவுளே! நல்ல அறிவைக் கொடு, புத்தியைக் கொடுன்னு கேட்கக் கூடாது?" என்று கேட்டார். அதைக் கேட்ட தங்கை, "தாத்தா, யார் யாரிடம் எது இல்லையோ அதைத் தானே கேட்பாங்க? என்னிடம் பணம் இல்லை. அதனால் அதைக் கேட்கிறேன். உங்களுக்கு வேணுங்கறதை நீங்க கேளுங்க" என்றாள். தாத்தா திகைத்து விட்டார்!

ஜி.செல்வி, தர்மபுரி.



அமுதனும், வினோத்தும் எட்டாம் வகுப்பு படிக்கும் நல்ல நண்பர்கள். இருவருமே படிப்பிலும், விளையாட்டிலும் படுசுட்டிகள்.

ஆனால், அமுதனிடம் பெரிய கெட்ட பழக்கம். நாயையோ, பூனையையோ, அணிலையோ மற்ற உயிரினங்களையோ கண்டால் உடனே கல்லை எடுத்து அடிப்பான். அவை வலி தாங்காமல் துடி துடித்து ஓலமிடுவதைக் கண்டு கைதட்டி மகிழ்ச்சியடைவான்.

அமுதனை மாற்ற பெற்றோரும், நண்பர்களும் எத்தனையோ முயன்றார்கள். உயிர்களைச் சித்திரவதை செய்வது பாவம். அப்படிச் செய்யக் கூடாது. அவை நம் ஆதரவை அண்டி உயிர் வாழ்பவை. அவைகளிடம் அன்பாக இருக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் கூறிப் பார்த்தார்கள். தமிழாசிரியர் தண்டனை கூடக்

வலி எப்படி இருக்கும்?

கொடுத்துப் பார்த்தார். ஆயினும் அமுதனை மாற்ற யாராலும் முடியவில்லை.

ஒரு நாள் வினோத்திடம் மேப் டிராயிங் போட கலர் பாக்சைக் கேட்க அமுதன் அவன் வீட்டுக்குச் சென்றான். வினோத் வீட்டின் முன் அறையில் தன் பூனைக் குட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

அமுதன் தான் வந்த காரணத்தைக் கூறி கலர் பாக்ஸைக் கேட்டான்.

"உட்காருடா, இதோ கொண்டு வரேன்" என்று கையில் இருந்த பூனைக் குட்டியைக் கீழே விட்டுவிட்டு உள்ளே போனான் வினோத்.

அந்த அழகான பூனைக் குட்டி "மியாவ்" என்று தன் சின்ன வாயைத் திறந்து குரலெழுப்பி அவனிடம் நட்பு முறை காட்டியது. ஆனால் அமுதனா இதையெல்லாம் கண்டு மகிழ்பவன்!

பூனையைப் பார்த்துவிட்ட அமுதனால் சும்மா இருக்க முடியவில்லை. அருகிலிருந்த கனமான பால்பாயிண்ட் பேனாவை எடுத்து பூனையின் காலில்

தன் முழு பலத்தையும் திரட்டி வேகமாக அடித்தான். அடிபட்ட பூனை தீனமாகக் கத்தியபடி வீட்டுக்குள் சென்றது. அமுதன் கைகொட்டிச் சிரித்தான்.

பூனை தீனமாகக் கத்துவதைக் கேட்ட வினோத், இது அமுதனின் வேலையாகத்தான் இருக்க வேண்டும் என்று ஓடோடி வந்தான்.

“உயிர்களை நேசிக்கத் தெரியாமல் ஏன்டா இப்படி வதைக்கிறே? இப்படிப் பண்றது பாவம்னு உனக்குத் தோன்றவே இல்லையா? நீ வரப் போறது தெரிஞ்சிருந்தா, என் பூனையை மறைச்சு வெச்சிருப்பேன். நீ மாறவே மாட்டாயா?” என்றான் வினோத். பூனையின் தீனமான ஓலம் அவன் கண்களைக் கலங்க வைத்திருந்தது.

சிரித்துக் கொண்டே கலர் பாக்ஸை அவனிடமிருந்து வாங்கிக் கொண்ட அமுதன், டாடா காட்டிவிட்டு நகர்ந்தான். இரும்பு கேட்டைத் திறக்கும் சத்தமும், தொடர்ந்து “அம்மா, ஐயோ!” என்ற குரலும் கேட்டது. கத்தியது அமுதனேதான்!

வினோத் ஓடிச் சென்று பார்த்தான். முன்பக்கம் தள்ள வேண்டிய இரும்பு கிரில் கேட்டைப் பின்பக்கம் வேகமாகத் தள்ள, அது அதே வேகத்தில் திரும்பி வந்து மோதியிருக்கிறது. அமுதனின் நெற்றியில் சரியான அடி! புடைத்துக் கொண்டுவிட்டது!

“அமுதா, இத்தனை பெரிய மண்டையில் நெற்றியில் அடி பட்டதற்கே இப்படி மாய்ந்து வலி தாங்காது கத்துகிறாயே! உன்னிடம் தினமும் வதைபடும் நாய், பூனை எல்லாம் வலி தாங்காமல் எவ்வளவு துடிதுடித்திருக்கும் என்பதை நினைத்துப் பார்” என்றான் வினோத்.

அமுதன் வெட்கித் தலைகுனிந்தான். “வினோத், என்னை மன்னித்துவிடு. இனிமேல் எந்த உயிரினத்தையும் துன்புறுத்த மாட்டேன். எனக்கு நன்றாக உறைத்துவிட்டது. வலி என்பது எப்படி இருக்கும் என்பதை நான் நன்கு உணர்ந்து விட்டேன்” என்றான் கண்ணீருடன்.

அவன் பேசுவது உண்மையே என்பதை அவன் விட்ட கண்ணீர் உறுதிப்படுத்தியது.

— ஜே. பலராமன்



என்ன பண்ணுவே?

"வீட்டுக்கணக்கைச் செய்யாதவர்கள் எழுந்திருங்க!"- பிரம்பைக் கையில் எடுத்தவாறே உத்தரவிட்டார் கணக்கு ஆசிரியர் கணேசன்.

அவர் கண்டிப்பானவர். அதனால் எல்லோரும் மறக்காமல் வீட்டுக் கணக்கைச் செய்து வந்திருந்தனர். ஆனால், அதற்கு விதிவிலக்காக வழக்கம் போல் கோபி மட்டும் வீட்டுக் கணக்கைச் செய்யவில்லை. ஆனாலும் தைரியமாக எழுந்து நின்றான்.

"வகுப்பு முடியும் வரை வெளியில் நில்!" திட்டியவாறே பிரம்பால் கோபியை விளாசினார் ஆசிரியர். அடியை வாங்கிக் கொண்டு வெளியே சென்று நின்றான்.


வீட்டுப்பாடங்களைச் செய்யாமல் வருவது, படிக்காமல் வருவது, பக்கத்திலுள்ள மாணவர்களைச் சீண்டுவது, ஆசிரியரையும், மாணவர்களையும் கேலி செய்வது, பரீட்சையில் 'பிட்' அடிப்பது அனைத்தும் கோபிக்குத் தண்ணீர் பட்ட பாடு. அவனைத் திருத்த ஆசிரியர்கள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் நீரில் நனைந்த பட்டாசுகளாய் போயின. கண்டித்தும், தண்டித்தும் கூட எந்தவிதப் பயனும் இல்லை. கோபியின் லீலைகள் வெற்றி நடை போட்டு வளர்ந்தன.

ஆங்கில வகுப்பு தொடங்கியது!

ஆங்கில ஆசிரியர் புதிதாக மாற்றலாகி வந்திருந்தார். அவர் வகுப்பிற்குள் பிரவேசித்ததுமே நண்பர்களிடம் அவர் வழுக்கைத் தலையர் என்று கிண்டல் பண்ணினான் கோபி.

கோபியின் கிண்டலை ஆசிரியரும் கேட்டார். ஆனால் அவர் ஒன்றும் கண்டு கொள்ளவில்லை.

அது நவம்பர் மாதம். மாதத்தேர்வு ஆரம்பித்திருந்தது. ஆங்கிலப் பரீட்சை. கோபியின்



வகுப்பிற்கு மேற்பார்வையாளராக ஆங்கில ஆசிரியரே வந்திருந்தார். கோபிக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவர்தானே எதையும் கண்டு கொள்ள மாட்டார்?

வினாத்தாள்களும், விடை எழுதுவதற்கான தாள்களும் கொடுக்கப்பட்டன. வினாத்தாளைப் பார்த்த கோபிக்கு ஏக மகிழ்ச்சி. அவன் துண்டுக் காகிதத்தில் எழுதி வந்திருந்த கவிதை, கேள்விபதில்கள், கடிதம் அனைத்துமே வினாத்தாளில் கேட்கப்பட்டிருந்தன! தைரியமாகத் துண்டுப் பேப்பரை எடுத்து பார்த்துப் பார்த்து எழுதினான். ஆசிரியரும் அதைப் பார்த்தார். ஆனால் கண்டு கொள்ளவில்லை. ஒன்றும் சொல்லாமல் இருந்துவிட்டார்.

மாதத் தேர்வுகள் முடிந்து பள்ளி ஆரம்பித்திருந்தது. ஆங்கில ஆசிரியர் விடைத்தாள்களை இன்னும் திருத்தாததால், அன்றைய வகுப்பைப் பொழுது போக்காகக் கழிக்க நினைத்தார். ஒவ்வொரு மாணவனாக எழுப்பி,

"எதிர்காலத்தில் என்ன வேலை பார்க்க ஆசை!" என்று கேட்டார். எல்லாரும் கூறிக் கொண்டே வந்தனர். கோபியின் முறை.

"நான் ஆசிரியராக ஆசைப்படுகிறேன் சார்" என்றான் கோபி பெருமையாக.

"ரொம்ப மகிழ்ச்சி கோபி. என்னைப் போல நீயும் ஆசிரியராக ஆசைப் படுவதைப் பற்றிப் பெருமைப் படுகிறேன்," என்று தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார் ஆசிரியர்.

தொடர்ந்து "ஆமாம் கோபி, உன் வகுப்பில் உன்னைப் போலவே ஒரு கிண்டல்கார மாணவன், நீ என்னைக் கிண்டல் பண்ணினதைப் போலவே அவனும் உன்னைக் கிண்டல் பண்ணுகிறான். தேர்வில் நீ பிட் அடித்தது மாதிரியே பிட் அடிக்கிறான் என்று வைத்துக் கொள். நீ என்ன பண்ணுவே? என்னை மாதிரி கண்டும் காணாம இருந்துடுவியா? இல்லே அவனைத் தண்டித்துத் திருத்துவியா?" என்று கேட்டார்.

கோபி அதிர்ந்து நின்றான். தலை வலியும் வயிற்று வலியும் தனக்கு வந்தால்தானே தெரியும்? "சார் என்னை மன்னிச்சுடுங்க. இனிமே நல்லவனா இருப்பேன்" என்றான் கண்கள் பனிக்க.

- சுப. சிவராஜா

7. எதிர் பாராதது

கிருத்திகைக்கு முதல் நாள். சனிக்கிழமை. அன்று இரவு படுக்கும்போது ராஜா சந்தோஷமாக இருந்தான். நாளையோடு இந்தக் கிராமத்து வாழ்க்கை முடிந்து விடுகிறது. நினைக்கும் போதே நெஞ்சம் எல்லாம் இனித்தது அவனுக்கு.

ஆனால், காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே... உடம்பை அசைக்கக் கூட முடிய வில்லை. கை கால்கள் எல்லாம் ஒரே குடைச்சல்... ஒரே வலி.... ஜுரம்... வாந்தி வேறு... கோவிலுக்கு வழக்கமாகச் செய்ய வேண்டிய பணிகளைக் கூட அவனால் செய்ய முடியவில்லை. குருக்கள் ஐயாவிடம் சொல்லி விட்டு மெதுவாகத் தன் வீட்டிற்கு வந்து அப்படியே பாயில் படுத்துக் கொண்டு விட்டான்.

புரண்டு 'புரண்டு படுத்தும் உடல் வலி குறைய வில்லை. தூக்கமும் வர வில்லை. கண்களில் ஒரே எரிச்சல். நேரம் ஆக ஆக, உடம்பு கொல்லனின்

த. ஜானகி

உலைக்களம் போல் கொதிப்பதை உணர்ந்தான். வாயில் எட்டிக்காய்க் கசப்பு...! தாங்கமுடியாத குளிர் வேறு. பெரிய பாறாங்கல்லைச் சுமப்பது போன்று தலையில் பாரம்.

இன்றைக்கு என்று பார்த்து இப்படி வந்து விட்டதே! என்ன செய்வது? தாகம் தொண்டையை என்னவோ செய் கிறது. நாக்கிலே வரட்சி. மெதுவாக நடந்து போய் ஒரு சிங்கிள் டீ சாப்பிட்டால் கொஞ்சம் நன்றாக இருக்கும்.

தனக்குள் எண்ணியபடி மெதுவாக எழுந்தான். சமாளித்த படி நடக்க ஆரம்பித்தான். காலை வெயில் குளிருக்கு இதமாக இருப்பது போலத் தோன்றினாலும் கண்ணிற்குள் மசமசவென்று என்னவோ. தலை கிர் கிர் என்று சுற்றுவது போல் இருந்தது. தட்டுத் தடுமாறி சண்முகத்தின் டீக் கடையை அடைந்து பெஞ்சியில் உட்கார்ந்தவன் மறுவினாடி மயங்கி அப்படியே சாய்ந்து விட்டான்.

டீ போட்டுக் கொண்டிருந்த சண்முகம் பதறிப் போய் ஓடி அருகில் வந்தான். ராஜாவைத் தாங்கிப் பிடித்து



2வது சாவி

பெஞ்சியின் மீதே படுக்க வைத்தான். "நம்ம ஊரு டாக்டர் மேஜர் ஐயாவை உடனே கூட்டிகிட்டு வா! விஷயத்தை அவர்கிட்டே சொன்னா அவரே வந்துடுவாரு" என்று கடைப் பையனுக்கு உத்திரவு போடவே அவன் சிட்டாகப் பறந்தான்.



"கிரிகெட்—ன்னாலே நம்ப கோபுவிற்கு அலர்ஜியாம்!''
"அதிலேயும் 'டெஸ்ட்'— மேட்ச்சுன்னு வருதே!''
— கே.சோமசேகர்

கண் விழித்துப் பார்த்த ராஜா, தான் மேஜர் வீட்டு ஹால் பக்கம் உள்ள அறையில் படுத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான். மெதுவாக எழுந்து உட்கார முயன்றான். முடியவில்லை. உடம்பெங்கும் ஒரே வலி...

"அண்ணே! எழுந்திருக்காதீங்க... தாத்தா ஊசி போட்டிருக்கிறார். நீங்க கண் விழிச்சா ஹார்லிக்சும் இந்த மாத்திரையையும் தரச் சொல்லியிருக்கார்"என்று கூறியபடி சந்தீப் மாத்திரையோடும், டம்ளரில் ஹார்லிக்சோடும் ராஜா படுத்திருந்த கட்டிலுக்கு அருகில் வந்தான். மாத்திரையை முழுங்கி விட்டு, ஹார்லிக்சைக் குடித்த ராஜாவுக்கு பேசக் கூடக் கஷ்டமாக இருந்தது. ஆயாசத் தோடு கண்களை மூடிக் கொண்டான்.

ராஜா மீண்டும் கண் விழித்தபொழுது அறையில் இருள் பரவி இருந்தது. ஹாலில் உள்ள கடிகாரம் ஆறுமுறை இசையோடு ஒலித்து ஓய்ந்தது.

"சந்தீப்! ராஜா என்ன செய்யறான்னு பார். கஞ்சி கொண்டு வரேன்."

மீனாட்சி அம்மாள் கூறுவது காதில் தெளிவாக விழுந்தது. மறுவினாடி அவன் படுத்திருக்கும் அறைக்குள் சந்தீப் நுழைந்து ஸ்விட்சைப் போடும் ஒலி கேட்டது.

குபீரென்று வந்த ஒளிக்கு ஏற்ப கண்களை மூடித்திறந்து அட்ஜஸ்ட் செய்தபடி சந்தீப்பைப் பார்த்தான் ராஜா.

"உடம்பு எப்படி இருக்கு அண்ணே? காலையிலே எழுந்திருக்கும் போதே எப்ப உடம்பு சரியாக இல்லையோ, உடனே நேரா நம்ப வீட்டுக்கு வந்திருக்கலாம் இல்யாண்ணே? என்னை வரச்சொல்லி யார்கிட்டேயாவது சொல்லி அனுப்பி இருந்தாக்கூட உடனே வந்திருப்பேன் இல்லே?'' என் றான் சந்தீப் உண்மையான கவலையுடன்.

பதில் சொல்ல நினைக்கும் பொழுது மீனாட்சி அம்மாள் கஞ்சிப் பாத்திரத்தோடு உள்ளே நுழைந்தாள்.

''உடம்பு எப்படி இருக்கு ராஜா? இன்னிக்கு உனக்கு கஞ்சியும் ஹார்லிக்சும் தான் கொடுக்கணும்னு தாத்தா சொல்லியிருக்காரு. இந்தா கஞ்சி. பால் போட்டுக் கொண்டு வந்திருக்கேன்... குடி''

டம்ளரை நீட்டினாள் மீனாட்சி அம்மாள். கஞ்சி இளம் சூட்டில் இருந்தது. மெதுவாக உட்கார்ந்து கொண்டு கஞ்சியைக் குடித்தான். தான் மயங்கி விழுந்தது, மேஜர் வந்து ஊசிபோட்டது, சைக்கிளில் தன்னை உட்கார வைத்துப் பிடித்துக் கொண்டே சைக்கிளைத் தள்ளியபடி சண்முகம் மேஜர் வீட்டிற்குத் தன்னைக் கூட்டிக் கொண்டு வந்து படுக்கையில் போட்டது எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அவன் நினைவிற்கு வந்தது.

"என்னால ஒங்களுக்கு எல்லாம் ரொம்ப கஷ்டங்க" என்றான் ஆயாசத்தோடு.

"இதிலே என்னப்பா கஷ்டம்? மனிதனுக்கு மனிதன் சமயத்திலே உதவி செய்ய வேண்டாமா?"

அப்பொழுதுதான் மேஜர் அங்கு இல்லை என்பதை உணர்ந்தான்.

"அம்மா ஐயா எங்கே?"

"இன்னிக்கு கிருத்திகை இல்லையா? அதனால விராலி மலை முருகன் கோவிலுக்குப் போயிருக்கார். மத்தியானம் அவர் உன்னைப் பார்க்கறப்போ... நீ தூங்கிக்கிட்டிருந்தே... அதனால தொந்திரவு செய்ய வேண்டாம்னு சந்தீப் கிட்டே மருந்தைக் கொடுத்து விட்டுப் போனார். சாயந்திரம் வந்து நான் பார்த்துக்கறேன்னு சொன்னார். இந்நேரம்

மலையிலிருந்து திரும்பிக் கொண்டிருப்பார்."

ராஜாவின் உடலில் மின்சாரம் பாய்ந்தாற் போல் ஒரு துடிப்பு. போட்ட திட்டத்தின்படி இந்த நேரத்தில் இந்நேரம்...இந்நேரம்... மணி அங்கு காத்துக் கொண்டிருப்பான். ஆனால்...ஆனால்... என்னால்தான் போக முடியலே! இந்த முறையும் தோல்வி தானா?

வெறுப்போடு கண்களை மூடிக் கொண்டான் ராஜா. அன்று சனிக் கிழமை காலை நேரம்.

"அண்ணே! இனிமே... நீங்க வழக்கம் போல சாப்பிடலாம்னு தாத்தா சொல்லி விட்டார். இன்னிக்கு நானும் உங்களோடு சேர்ந்து டிபன் சாப்பிடப் போறேன். இந்தாங்க..."

சந்தீப் தட்டை நீட்டினான். ஆவி பறக்க மல்லிகைப் பூ நிறத்தில் நான்கு இட்லிகள். அதன் மீது சர்க்கரை, நெய்."

"தொட்டுக்க சட்னி, சாம்பார் இல்லைன்னு பார்க்கறீங்களா? இன்னும் இரண்டு நாளைக்கு சாப்பாட்டிலே காரம் அதிகம் சேர்க்க வேண்டாம் என்று தாத்தா சொன்னார். உங்களுக்காக நானும் இன்னிக்கு சட்னி போட்டுக் கலை... என் தட்டையும் பாருங்க."

ராஜா தன் தட்டையும் பார்த்தான். அதை எடுத்து வந்து நின்ற சந்தீப்பையும் பார்த்தான். பார்த்துக் கொண்டே இருந்தான்.

இந்த ஒரு வாரத்தில்.

"அண்ணே! இந்தாங்க வெந்நீர்..."

"தம்பி... இன்னிக்கு கஞ்சிக்கு தொட்டுக்கொள்ள நார்த்தாங்காய் ஊறுகாய்... காரம் போடாதது- நல்லா இருக்கும் குடி."

"ராஜா! நான் ஒரு ஹோமியோ பதி டாக்டர். உனக்கு என்ன, மத்த டாக்டர் மாதிரி கசப்பு மருந்தா கொடுக்கிறேன்? சப்பி சப்பி சாப்பிடு... இனிக்கும்... சீக்கிரம் குணமாயிடும்?..."

"அண்ணே! இந்தாங்க ஹார்லிக்ஸ்..."

"தம்பி... கஞ்சியிலே ரசம் போட்டுக் கொண்டு வந்திருக்கேன். என்ன... அரை டம்ளர் போதுமா...? ஊஹூம்...





"அப்பா அதோ போறானே அவன்தான் என் பேனா நண்பன்."

"ஆச்சர்யமா இருக்கே! அவன் உன் கிளாஸ்தானே?"

"ஆமாம். நான் பேனா எடுத்துட்டுப் போகாத போதெல்லாம் அவன் கொடுத்து உதவுவான்."

- வாண்டுதாசன்



"லேடீஸ் கிரிக்கெட் மேட்ச்ல யார் எவ்வளவு ஜோரா விளையாடினாலும் யாருக்குமே மேன் ஆஃப் தி மேட்ச் கிடைக்காதுடா."

"ஏண்டா?"

"உமன் ஆஃப் தி மேட்ச்தான் கிடைக்கும்!"

– சீர்காழி விரேவதி



"வெய்யிலுக்கும் மழைக்கும் அஞ்சாத செடி எது...?"

"தெரியலையே...!"

"குடை மிள்காய்ச் செடிதான்!"

– சீர்காழி வி.ரேவதி

வயிற்றைக் காயப்போடாதே... இந்தா... மடக் மடக்குன்னு அப்படியே குடிச்சிடு."

"என்ன ராஜா! சின்னப்பையன் மாதிரி ஊசி போட்டுக் கொள்ள மாட்டேங்கறே? அப்புறம் எப்படிக் காய்ச்சல் இறங்கும்? கஷ்டமா இருக்குன்னு சொல்றாயா– அப்ப இடுப்பிலேயே போட்டு விடுகிறேன்."

இந்த ஒரு வாரமாக இரவு பகலாக மாற்றி மாற்றித் தனக்குப் பணிவிடை செய்த சந்தீப், முகம் சுளிக்காது நேரா நேரத்திற்கு கஞ்சி, காப்பி, என்று வைத்துக் கொடுத்து அன்போடு உபசரித்த மீனாட்சி அம்மாள், மாற்றி மாற்றி மருந்துகள் கொடுத்து ஜுரத்தை விரட்ட மேஜர் எடுத்துக் கொண்ட அக்கறை, சாத்துகுடிப் பழங்களும், பிஸ்கெட்டும் கொண்டு வந்து கொடுத்து தன்னை அடிக்கடி பார்க்க வந்த சந்தீப்பின் நண்பர்களின் பரிவு, இது போன்ற அனுபவத்தைத் தன் வாழ்நாளில் ஒரு முறை கூட அவன் அனுபவித்ததில்லை. இந்தப் புதிய அனுபவம் தன் உள்ளத்து இரும்புக் கதவுகளை இலேசாக அசைத்து விட்டதை உணர்ந்தான் ராஜா. ஏன் இப்படி! இதுதான் அன்போ... இல்லை பாசமோ...

"என்ன அண்ணே! இட்லியைத் திங்காம புதிசாக இன்னிக்குத்தான் என்னைப் பார்க்கிற மாதிரி பார்த்துக் கொண்டிருக்கீங்க?"

"ஓ... அதுவா... ஒண்ணுமில்லே... இந்த ஒரு வாரமா... நீங்க செஞ்ச உதவிய நெனச்சுப்பார்த்தேன்... எனக்கு உடம்பு இப்ப நல்லா இருக்கு...தாத்தா கிட்டே சொல்லிட்டுப்புட்டு எனக்குன்னு கொடுத்திருக்கிற வூட்டுக்குப் போகலாம்னு பார்க்கறேன்."

சொன்னபடி மறுநாளே ராஜா கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள வீட்டிற்கு வந்து விட்டான்."

அன்று மதியம் சந்தீப் ரசம் சாதம், தயிர் சாதம் கொண்டு வந்து கொடுத்தான்.

அடுத்த நாள் மாலை.

"அண்ணே! இந்தாங்க சமயபுரம் மாரியம்மன் கோவில் பிரசாதம். எனக்கு லீவு தானே? எங்க தாத்தாவோட நண்பரோட குடும்பம் பூரா எங்க வீட்டுக்கு வந்திருக்காங்க. அவங்களோட நானும் சமயபுரம் போனேன். உங்களுக்கு காய்ச்சல் வந்த பொழுது நீங்க சீக்கிரம் குணம்



அடையணும்னு மாரியம்மனை வேண்டிக் கொண்டேன். உங்க பேர்லே அர்ச்சனை கூடச் செய்தேன். உம். இந்தாங்க..."

மாவிளக்கு, வாழைப்பழம், விபூதி, குங்குமம் நிரம்பிய தட்டை சந்தீப் பிடமிருந்து வாங்கிக் கொண்ட பொழுது ராஜா தன் பாலைவன உள்ளத்தில் சில மணக்கும் பனித்துளிகள் விழுவதை உணர்ந்தான்.


மறுநாள் இரவு.

"கிருத்திகை அன்னிக்கு நாம இரண்டு பேரும் விராலிமலைக்குப் போறதாக திட்டம் போட்டிருந்தோம். உங்களால வரமுடியாம போய்விட்டது இல்லையா? இன்னிக்கு உங்க பேர்லே அர்ச்சனை செய்து பிரசாதம் கொண்டு வந்திருக்கேன். எங்க முருகன் கிட்டே என்ன வேண்டிக் கொண்டேன் தெரியுமா? அடுத்து வரப்போகிற கிருத்திகை அன்றைக்கு ராஜா அண்ணனும் என்னோடு சேர்ந்து வர நீதான் அருள் செய்யணும்னு" என்றான் சந்திப்.

புயல் வீசிக் கொண்டிருக்கும் உள்ளத்தில் இனியதென்றல் தயங்கி - தயங்கி எட்டிப் பார்த்துக் கொண்டே வீசுவது போன்ற ஓர் இனிய உணர்வை ராஜா உணர்ந்தான்.

ஏன் என் மனது -மாறிக் கொண்டே வருகிறது? இல்லை இல்லை இது பிரமை. நான் பழைய ராஜாவேதான். பட்டிக் காட்டானாக நடிக்கும் அதே ராஜா தான்.

நிமிர்ந்து நம்பிக்கையோடு உட்கார்ந்து கொண்டான்.



"மாதங்களில் சிறந்தது எது?"
"மே மாதம் சார்."
"ஏன் அப்படிச் சொல்கிறாய்?
அந்த மாசம் முழுசுமே ஸ்கூலுக்கு லீவு சார்."

– ஜி.புவனேஸ்வரி,
அரக்கோணம்.

மறுநாளைக்கு மறுநாள். இரவு எட்டு மணி இருக்கும்.

"டொக்-டொக்" என்று கதவு தட்டப்படும் ஒலி கேட்கவே பாயில் படுத்துக் கொண்டிருந்த ராஜா எழுந்து வாசல் கதவைத் திறந்தான்.

வந்தது சந்தீப். டைகரும் அவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்தது.

"அண்ணே! ஸ்ரீ ராமர் நம்ப நாட்டை ஆண்டபொழுது ஜனங்கள் எல்லாம் கதவைச் சாத்திக் கொள்ளவே மாட்டார்களாம். ராத்திரியும் திறந்து வைத்துக் கொண்டுதான் துங்குவாங்களாம். ஏன் தெரியுமா?"

"வூட்டுக்குள்ளார ரொம்ப புழுக்கமா இருந்திருக்கும். காற்று நல்லா வரணும்னு தொறந்து வெச்சிருக்கலாம்."

"மழை காலத்திலே பனிகாலத்திலே கூடக் கதவை திறந்துவைத்துக் கொண்டு தான் தூங்கினாங்களாம். ஏன் தெரியுமா? நாட்டிலே திருடர் பயமே இல்லையாம். அதே மாதிரியான ராம ராஜ்ஜியத்தைத்தான் நம்ப காந்தித் தாத்தா. கிராம ராஜ்ஜியமாகக் கொண்டுவர வேண்டும் என்று ஆசைப்பட்டார். நம்ப கிராமத்திலே திருட்டுப் பயம் கிடையாது... இனிமே நீங்க கதவைச் சாத்திக்காதீங்க நாங்க அடிக்கடி தட்டினா...கதவே கீழே விழுந்து விடும். பழைய காலத்து வீடு இல்லையா?"

"சரி தம்பி! என்ன வேணும்?"

"இந்தாங்க சாத்துக்குடிப் பழம். ஊரிலேந்து பாட்டியோட தம்பி வந்திருக்கார். அவர் வாங்கிக் கொண்டு வந்தது. சாப்பிடுங்க."

பழத்தைக் கொடுத்து விட்டுச் செல்லும் சந்திப்பையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் ராஜா.


அப்பொழுது...

கொல்லைப் பக்கக் கதவு தட்டப்படும் ஒலி கேட்கவே, சுய உலகிற்கு வந்தான். வாசல் கதவை தாழ்ப்பாள் போட்டான். கொல்லைக் கதவைத் திறந்தான். மணி புயல் வேகத்தில் உள்ளே நுழைந்தான்.


மணி உள்ளே நுழைவதை ஓர் உருவம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தது.

(தொடரும்)

கோழிக்கு வழி காட்டுங்கள்




10000000



குறில் நெடிலைச் சேருங்கள் - போட்டி

குறில் நெடில் என்றதுமே "இலக்கணமா?" என்று பின் வாங்காதீர்கள். நீங்கள் நாள்தோறும் சாதாரணமாகக் காணும் பொருள்களை வைத்துத் தான் இந்தப் போட்டி அமைக்கப்பட்டுள்ளது. 'கலை' என்றால் என்ன? அழகு உணர்வுடன் பார்க்கும், செய்யும் திறமை என்பதுதானே? இதில் 'க' குறில். இந்தக் குறிலை "கா" என்று நெடில் ஆக்கிப் பாருங்கள். காலை என்று வரும் இல்லையா? இதற்கு காலைப் பொழுது என்றும் பொருள் வரும். அல்லது நடக்க உதவும் உறுப்பான காலை என்றும் பொருள் உண்டு இல்லையா? கலைக்கும், காலைக்கும் எத்தனை வேறுபாடு! இதே அடிப்படையில் தான் இந்தப் போட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் மொத்தம் 24 படங்கள் இருக்கின்றன. இவைகளில் 12, குறில் எழுத்து முதலில் வருபவை. இந்தக் குறில் எழுத்து நெடிலானால் என்னவாகும் என்பதை மீதி 12 படங்கள் காட்டும். இவைகளைப் பார்த்து வகைப்படுத்தி கீழே உள்ள கட்டத்தில் எழுதி, கூப்பனையும் பூர்த்தி செய்து அனுப்பவும் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. அயல்நாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள உறவினர் அல்லது நண்பர் ஒருவரது முகவரியைத் தர வேண்டும்.

குறில்	நெடில்

குறில் நெடிலைச் சேருங்கள் - போட்டி

பெயர்: ....

வயது: ....

முகவரி: ....

....


....


....


பின்கோடு: ....

முடிவுதேதி 28.2.95

தவறு என்ன கண்டுபிடி




THE BIRTH OF MICKEY MOUSE!
GOKULAM
The monthly magazine for children
Write to
GOKULAM, 47 Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Madras - 600 097.
for a subscription.
96 pages for just Rs. 5!
FEBRUARY '95 ISSUE!
BUY YOURSELF A COPY TODAY!


"உன்னுடைய நாய்க்கு ஏன் முடிகவறு போட்டிருக்கே?"
"ராத்திரி திருடனைப் பார்த்து பயந்திடுச்சி."
- இஞ்சிக்கொல்லை எஸ். விஜயகுமார்.
"கடைக்காரரே ஞாயிற்றுகிழமை நிறைய இருக்கிற காலண்டர் ஒன் றைத் தாங்க."
- வாண்டுதாசன்.
"ஏண்டா, குமார் முப்பதுக்கு அடுத்து முப்பத்தி ஒண்ணுன்னு எழுதாம திரும்பவும் ஒண்ணுன்னு எழுதியிருக்கிறியே..?"
"அப்படித்தான் சார் எங்க வீட்டு காலண் டரில் எழுதியிருக்கு."
- எ. செல்வராஜ்.
"சித்தப்பாவுக்கு பிடித்த மாதம் எது?"
"'சித்தி'ரை!"
- ஜி. ஆர். மகேஷ்.
"ஏன் இந்தக் கழுதை திடீர் திடீர்னு காலை இழுத்து உதைக்குது?"
"ஒண்ணுமில்லே! 'காத்தே கற்றுக் கொள்ளுங்கள்'ங்கற புத்தகத்தை தின்னு புடுச்சு, அதான்."
- ஈரோடு கே. பி. ஜவஹர் சசிகுமார்.



ரத்தினபுரி ரகசியம்

கதை: **வாண்டுமாமா** சித்திரம்: **செல்லம்**

பண்டைய நாகரிகங்களைப் பற்றி மேல்நாட்டவர் அக்கறையோடு ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆனால் ஆசியாவின் புராதனம் பற்றி எவரும் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை. அப்படியே யாராவது ஆராய முற்பட்டாலும் அவர்கள் கவனம் சீனாவின் பக்கமே செல்கிறது. சீனர்களுக்கும் முற்பட்ட நாகரிகம் நம் பாரத நாகரிகம். ஆனால் அதை வெளிச்சம் போட்டுக் காட்ட வெளிநாட்டவர் விரும்புவதில்லை. நாமும் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அதன் விளைவு, பல உன்னத மான ரகசியங்கள் மறைக்கப்பட்டு மறக்கப்பட்டுவிட்டன.

புராதன எகிப்தியர்கள் இறந்தவர்களின் உடல் கெடா மல் மூலிகைக் கட்டுப் போட்டு, மம்மிகளாக்கிப் பாது காத்ததாகப் படிக்கிறோம். இந்த 'மம்மி' முறை நமக்குத் தெரியாதா? தெரியும். தசரதன் இறந்து ராமன் காட் டுக்குப் போனபின் அவரது ஈமக்கடன்களைச் செய்ய, கேகய நாட்டிலிருந்து பரதன் வரும் வரை, அவரது உடல் கெடாமல் எப்படி வைத்திருந்தார்கள்? மூலிகைகளைக் கொண்டு தயாரித்த நெய்யிலிட்டுத்தானே! அது தெரிந்த



நமக்கு 'மம்மி' முறை தெரியாதா? இறந்தவர்களை மண்பாண்டங்களில் (தாழி) வைத்துப் புதைப்பது வழக்கம். இதுவும் மம்மியில் ஒருவகைதானே?

நீண்ட காலம் இறப்பின்றி வாழ அமிர்தம் உண்ண வேண்டும் என்பது நம் புராணங்களில் கூறப்பட்டுள்ளது. மூப்பை வென்று இளமையோடு யயாதி என்ற மன்னன் வாழ்ந்ததாக நம் இதிகாசம் கூறுகிறது. மூப்பை வெல்லும் - சாவை வெற்றி கொள்ளும் முறைகள் - காயகல்பம் - (மூலிகைகள்) நம் மூதாதையருக்குத் தெரிந்திருக்கிறது. மந்திரம் - கட்டுக்கதை என்ற நினைப்பை ஒதுக்கிவிட்டுச் சிந்தியுங்கள் இதுபற்றி.


கடல் கொண்ட குமரிக்கண்டம், துவாரகை பற்றி நாம் ஏதாவது ஆக்கபூர்வமாக ஆராய்ச்சி மேற் கொண்டிருக்கிறோமா? மேம்போக்காகத்தானே செயல்பட்டிருக்கிறோம்? உறையூர், மதுரை மண் மாரி பெய்து புதையுண்டது என்று இலக்கியங்கள் கூறுகின்றன. அதுபோல நம் பாரதத்தில் புதையுண்ட நாகரிகங்கள், நகரங்கள் எத்தனை எத்தனையோ. அப்படிப்பட்ட நாகரிகங்களின் கற்பனைக் கதையே இது. இமய மலைச்சாரலில் திரிசூல் என்ற ஒரு ராஜ்யத்தின் கதை.

திரிசூல் நாடு செல்வச் செழிப்போடு, படைபலத்தோடு, பகைவர்கள் அஞ்சும்படி விளங்கியது. அதன் மன்னர் திலீபன். அவரது தம்பி சகரன். ஏற்றமிக்க இச்சகோதரர்கள் நல்லாட்சி நடத்த, உறுதுணையாக விளங்கினார் கௌதம் என்ற அறிவாளி. ராஜகுருவும் அவரே - மந்திரியும் அவரே. சகலகலா வல்லவர். படைத் தலைவர் சேனாதிபதி - வீரசேனன், எதிரி நாட்டு உளவாளியாகச் செயல்படுகிறார் என்று மன்னர் திலீபருக்குத் தகவல் கிடைக்கிறது.


அதன் விளைவாக....




படை அணிவகுப்பைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பும் வீரசேனரை....
வாழ்க... வாழ்க... வீரசேனர் நீடுழி வாழ்க!
சேன நாயகரே! உம்மைக் கைது செய்கிறோம்.
குற்றம் சாட்டப்பட்டவர் உயர் அதிகாரியாதலால், மன்னரே விசாரணை செய்கிறார். சொற்ப சாட்சியங்களே, ஆனால் மோசமானவை
எதிரிகளுக்கு அனுப்பப்பட இருந்த நமது படைபல ரகசியங்களடங்கிய கடிதம் இவரது வீட்டில் கிடைத்துள்ளது.
மன்னர் தீர்ப்பு வழங்கினார்.
வீரசேனரே! நம் நாட்டைக் காட்டிக் கொடுத்த துரோகியாகி, விட்டீர். நீர் உம் வாழ்நாள் முழுதும் கைதிகள் முகாமில் சுரங்கத்தில் பணியாற்ற அனுப்பப் படுவீர்.
படை வீரர்முன்னிலையில் சேனாதிபதி வீரசேனரின் சன்னதுகள் அகற்றப்பட்டன.



கால்களில் சங்கிலி பூட்டி, சுரங்கத்தில் அடிமையாக வேலை செய்யலானார் சேனாதிபதி.
இதனிடையே கௌதமர் - ஒரு முக்கியமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார். அதை, சக ரனிடம் விளக்குகிறார்.
இளவரசே! இப்புதிய தாவரத்தின் அதிகமான தானியங்களைத் தரும்படியான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். வெற்றி பெற்றால் நாட்டில் உணவுப் பற்றாக்குறையே இருக்காது.
மீண்டும் கௌதமர் தாம் ஆராய்ச்சி மேற்கொண்ட செடியிடம் வந்தபோது....
என்ன ஆச்சரியம்! என் கனவு நினைவாகப் போகிறது. இது இரு மடங்கு வளர்ச்சி பெற்றுள்ளதே!
திருப்தியோடு கௌதமர் திரும்பியதும்... நன்கு முற்றிய அச்செடியின் விதைப் பை வெடித்து, விதைகள் காற்றில் பறந்தன.
அந்த விதைகளில் சில, ஒரு குடியானவனின் நிலத்தில் விழுகின்றன.




சில நாட்களில், தம் நிலத்தில் செழித்து வளர்ந்துள்ள புதுரகப் பயிரைக் கண்டு தம்பதிகள் பிரமிக்கின்றனர்.
இதுபோன்ற செடியை நான் பார்த்ததே இல்லை!
இதன் விதைகள் நம் குழந்தைக்கு ஊட்டம ளிக்கும்.
அப்புதிய தாவரத்தின் விதைகளால் தயாரான உணவை உண்ட நோயாளிக் குழந்தை, ஒரே மாதத்தில் விபரீதமான வளர்ச்சி பெற்றது.
இதென்ன அதிசயம்!
நோய் குணமாகாதா என்று கவலைப்பட்டோம். இப்போது இவன் வயதுக்கு அதீத வளர்ச்சி இது!
அவனை, தெருவில் குழந் தைகள் கல்லால் அடித் துத் துரத்தினர்.
பூதப் பையன் ஓடறதைப் பார்!
அம்மா! அம்மா! பசங்களெல் லாம் விரட்டறாங்க!
கண்ணே! தெருக் குழந்தை கள் உன்னை மீண்டும் துன்புறுத்தினார்களா?
விரைவில் தூங்கிப் போனான்
நாம் கண்காணாத இடத்துக் குப் போய்விட்டால் என்ன?
நகரத்தைவிட்டு, ஒரு மலையடிவாரத்தில் குடியேறி நிலம் திருத்திப் பயிரிட்டு வாழ்ந்தார்கள்.


அந்த மலைக்கு அப்பால் மகிஷான்கள் என்னும் எருமை இன நாடோடிக் கொள்ளைக் கூட்டத்தினர் வாழ்ந்து வந்தனர். திலீபரின் ஆட்சியை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மகிஷான்கள்.
திரிசூலைக் கொள்ளையடித்து, அவர்களை ஒழிக்க வேண்டும்.
மகிஷான் கொள்ளையர் திரிசூல் நாட்டில் ஊடுருவித் தாக்க -
நான் ஓர் அதிசயத்தைக் காட்டிவிட்டேன்...
அதிசயமா?
இந்தப் பயிரை என்னால் நம்ப முடியலியே?
எங்கள் மகனைப் பாருங்கள் மூன்று மாதங்களுக்கு முன் நோயாளி, இன்று?...
வியப்படைந்த மகிஷான்கள் யோசித்தனர்
அம்மா... ரொம்பத் தாகமா இருக்கு...
மற்றொரு விந்தை. இவன் தாகம் தீர, நதியே வறண்டு விடும்.
அவர்களை, தலைவரிடம் இழுத்துப் போனார்கள்.
இவர்கள் கூறுவது விசித்திரமாக உள்ளது.
சோதித்துப் பார்ப்போமே...!
மலைப் பகுதியில் வாழும் எலியைக் கொண்டு வந்தனர்.
அந்தத் தானியத்தை அதற்குக் கொடு.


சில நாட்களில் அந்த எலியை, சிரமத்துடன் பெரிய கூண்டுக்கு மாற்றினார்கள்.
இதுபோலப் பத்தாயிரம் எலிகளைத் திரிசூல் நாட்டுக்குள் விட்டால்? கற்பனை செய்து பார்!
ஓர் எலியையே கூண்டுக்கு வெளியே சமாளிக்க முடியலியே...!
தோழர்களே! திரிசூல் ராஜ்யத்தை அழிக்கும் ஆயுதம் இதோ! அவர்களை நம் முன் மண்டியிட வைப்போம்.
இதனிடையே - திரிசூல் ராஜ்யத்தின் கைதிகள் முகாமில் வெறுப்பை வளர்த்துக் கொண்டு வாழ்ந்த வீரசேனன் -
விடுதலை... அதன்பின் திரிசூல் சாம்ராஜ்யத்துக்கு அழிவு
மன்னர் திலீபனைப் பழிவாங்கத் துடித்த சேனாபதிக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது!
ஒழி!
ஐய்ய்ய்...யோ!
அடிமைக் கைதிகள் முகாமிலிருந்து வீரசேனன் தப்பி ஓடும் போது, அவனை வழிமறித்து நிறுத்துகிறது பறந்து வந்த அம்பு ஒன்று.
ஆஹ்...ஹ்!
வீரசேனரை மகிஷான்கள் சூழ்ந்து கொண்டனர்.
திரிசூல் ஆட்களை, தானே கொல்வதில் தலைவர் மகிழ்ச்சியடைவார்.


கைதியைத் தங்கள் தலைவன் முன்கொண்டு போய் நிறுத்தினார்கள், மகிஷான் வீரர்கள்
திரிசூல்வாசியே! உன் நாட்டுத் தலைநகர் குழப்பத்தினால் நாசமுற்று அழிவதைப் பார்க்க நீ உயிரோடிருக்க மாட்டாய்.
நில்... ஒரு வேண்டுகோள்.
என்ன அது?
திரிசூல் மன்னர் திலீபன், என் கண்முன்னால்கொல் லப்படுவ தைக் காண ஆசைப் படுகி றேன். அதன்பின் என் மரணத்தை நான் மகிழ்ச் சியோடு ஏற்கிறேன்.
நீ யார்? அடிமையின் தோற்றம், வீரனின் பேச்சு!
என் பெயரே வீர சேனன். திரிசூல் நாட்டின் முன்னாள் சேனாபதி. திலீபனைப் பழி வாங்கவே வாழுகிறேன்.
வெறுப்பினால் வெகுண்டவன் நல்ல கூட்டாளியாவான். உன் விருப்பம் நிறைவேறும். எங்கள் திட்டத்துக்கு உதவ வேண்டும்
அன்றிரவு வீரசேனரும் மகிஷான்களும் வியாபாரிகள் போல், திரிசூல் நகருக்குள் நுழைகிறார்கள் வண்டியோடு
சந்தைக்குக் காய்கறிகள் கொண்டு செல்கிறோம்.
போகலாம்...
இருள்சூழ்ந்த வீதிக்கு வந்தார்கள்
எலிகளை விடுவி!



வண்டியில் கூண்டிலடைபட்டிருந்த எலிக்கூட்டம் முண்டியடித்துக் கொண்டு வெளிப்பட்டு, மூடி அகற்றப்பட்ட கழிவுநீர்க் கால்வாய்க்குள் புகுந்து மறைந்தன.
வீரசேனருக்கு வியப்பு.
திரிசூல் நாட்டை இந்த எலிகள் எப்படி அழிக்கும்? இங்கு முன்பே நிறைய எலிகள் உள்ளனவே.
ஆ! இவை விசேஷமான எலிகள்!
முட்டாள் வாயை மூடு. இவனிடம் அந்த ரகசியத்தை கூறக் கூடாது.
இரண்டு நாட்களுக்குப் பின் நகரத் திடலில் சந்தை கூடியது. உச்சிப் போதில் அந்த விபரீதம் நிகழ்ந்தது.
இடிமுழக்கம் போன்ற பேரிரைச்சலுடன் ஏராளமான ராட்சத எலிகள் சந்தைக்கடைகளைத் தகர்த்துக் கொண்டு வெள்ளமாக வந்தன.
ய்ய்யீய்! அதோ பார்!
ஐயோ... ராட்சத எலிகள்! ஆவ்வ்வோ!
பீதியடைந்த மக்கள் சந்தைத் திடலுக்குக் காவலாக நின்ற திரிசூல் வீரர்களைத் தள்ளிக் கொண்டு வெளியேறி ஓடினர்.
அம்பெய்து கொல்.
வீரர்கள், ராட்சத எலிகளின் தாக்குதலைத் தாங்க முடியாமல் பயந்து ஓடினர்.


தெருக்கள் வெறிச்சோடிப் போனதும் எலிக் கூட்டம் தானியக் கிடங்கை நோக்கிப் படை எடுத்தது. சிறிது நேரத்தில் கிடங்கு காலி.
விடியும் வேளையில் நகரைச் சூறையாடிய எலிக்கூட்டம், பாதாளச் சாக்கடைக்குள் போய்ப் பதுங்கின. மக்கள் அரண்மனையை முற்றுகையிட்டனர்.
எலிகளை ஒழிக்க ஏதும் செய்ய மாட்டாரா? மன்னர்
எங்களுக்கு உணவுகொடு
மன்னர் ஒழிக!
மன்னர் திலீபன் மக்களின் கோபத்தையும் கூச்சலையும்பார்த்தார்
ஏதாவது செய்தாக வேண்டும் விரைவாக. கௌதமரே உங்கள் உதவியையே எதிர் பார்க்கிறேன்.
மகாராஜா...
தந்திரமும் வேகமும் சாமர்த்தியமும் உள்ள இந்த எலிகள் கண்ணியில் சிக்காது. ஆராய்ச்சிக்கு அவகாசம் கொடுங்கள்.
அண்டை நாட்டுக்கு அரசியல் காரியமாகச் சென்றிருந்த மன்னரின் தம்பி சகரன், நாடு திரும்பிய போது-
ஏன் மக்கள் இப்படி ஊரை விட்டு ஓடுகிறார்கள். இவர்கள் பீதிக்கு என்ன காரணம்...
...ஓடாமல் என்ன செய்வது? எங்கிருந்தோ படையெடுத்து வந்த ராட்சத எலிக் கூட்டம் ஊரில் எதையும் விட்டு வைக்கவில்லை... நாங்கள் இரண்டு நாளாகப் பட்டினி.




குழப்பமடைந்த சகரனை எலிக் கூட்டம் சூழ்ந்து கொள்ளுகிறது
ஒன்று இறந்தால் பத்து வருகிறதே... இவற்றிடமிருந்து தப்ப...
...ஒரே வழி அகழிச் சுவர் மீது தாவி ஏறி...
நல்லவேளை தப்பினேன்.
அரண்மனைக்குள் மன்னரின் இருப்பிடத்தை நோக்கி ஓடினான்.
புரட்சியாளரும் எதிரிகளும் நகரை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள் மகாராஜா. உடனே இங்கிருந்து போய் விடுங்கள்.
இல்லை. நான் இங்கேயே தங்கி, விதியின் முடிவை ஏற்பேன்.
இந்த எலிகளை எப்படி அழிப்பது என்று என் அறிவிற்கு எட்டவில்லையே...
திரிசூல் நகருக்கு வெளியே நகரமாந்தர் பீதியோடு வெளியேறிப் போவதைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான் தளபதி வீரசேனன்.
திலீபா, உன் மக்கள் உன்னை விட்டு ஓடுகிறார்கள். விரைவில் விரோதிகள் உன்னை அரியணையிலிருந்து இழுத்துத் தள்ளுவார்கள்.
அப்போது கூட்டத்திலிருந்து ஒரு குரல் - வீரசேனன்....! என் மகன் வீரசேனன்தானே நீ?
அம்மா...!
உன்னைமீண்டும் பார்ப்பேன் என்றே நினைக்கவில்லை. உன்னை தண்டித்து காரங்கத்துக்கு அனுப்பினார்களே!
அம்மா... என்னோடு வா, பத்திரமாக வாழலாம். என் நண்பர்கள் மகிஷான்கள் இருக்கிறார்கள்.
மகிஷான்கள் உன் நண்பர்களா! அடப்பாவி. தாய்நாட்டுக்குத் துரோகமிழைத்து - குடும்பத்துக்கு அவப்பெயர் ஏற்படுத்தியது போதாதா? நான் இன்னும் உயிரோடிருக்கிறேனே, ஐயோ!




இப்படிக் கூறிவிட்டுக் கூட்டத்தோடு தடுமாறியபடி நடக்கலானாள் அந்தத் தாய்.
அம்மா...!
என்ன காரியம் செய்தேன்? ஏன் இப்படிச் செய் தேன்?
மகிஷான்களின் ரகசியப் பதுங்கு மிடத்துக்கு வருகிறார் வீரசேனர்.
வீரசேனரே, திரிசூலின் விரோதிகள் நகரை நெருங்கிக் கொண்டிருக் கிறார்கள்.
தோழரே, அந்த எலிகளைப் பற்றிக் கூறுங்கள். அவை எனக்குப் புதிராகவே உள்ளன
நீர் எனக்கு நெருக்கமான வனாகி விட்டீர். அதன் ரக சியத்தை உமக்குக் கூறுவ தில் தவறில்லை. கேளுங்கள்...
விசேஷ தானியத்தை எலிகள் தின்று வளர்ந்த கதையை மகிஷான்களின் தலைவன் கூறியதும்
இதுபற்றி என்ன நினைக்கிறீர்
நான் அறிந்து கொள்ள வேண்டியதனைத்தும் நீ கூறி விட்டாய்.
அடுத்த விநாடி அந்தக் கூரிய கொம் புக் கோப்பை, வேகமாக மகிஷான் தலை வன் கழுத்தில் இறங்கியது.



வீசப்பட்ட ஈட்டிகளின் தாக்குதலிலிருந்து வீரசேனன் லாகவ மாகத்தப்பி...
விடியும் வேளையில் திரிசூல் நாட்டை அடைந்து அரண்மனை ஆலோசனைக் கூடத்தினுள்ளும் புகுந்து விட்டான்.
இந்த ஈனன் உங்களோடு பேசவேண்டுமாம்
யார் நீ- உனக்கு என்ன வேண்டும்.
அலங்கோல அடிமையின் உடையில் இருந்தவனை யாருக்கும் அடையாளம் தெரியவில்லை.
ஒரு காலத்தில் திரிசூலின் படைத் தளபதியாக இருந்த வீரசேனன் நான்.
அந்தத் துரோகி நீதானா? வெட்டிப் போடு அவனை!
விடு அவனை. இங்கு ஏன் வந்தாய்?
விந்தை எலிகளின் ரகசியம் அறிந்து நகரைக் காப்பாற்ற வந்தேன்.
விஷயம் முழுவதையும் கூறினார் வீரசேனர்.
அடக்கடவுளே! விசேஷ வளர்ச்சி பெற நான் மேற்கொண்ட அந்தத் தாவரத்தினால் ஏற்பட்ட விபரீதமா இத்தனையும்? அதன் விதைகள் காற்றில் பரவி...
ஆமாம்... ஒரு குடியானவனிடமிருந்து அந்த விதையின் ரகசியத்தை மகிஷான்கள் அறிந்து கொண்டு மலைஎலிகளை இப்படி வளர்த்து உலவ விட்டுள்ளனர்.
அந்த மலை எலிகளுக்குக் குடிக்க தாராளமாக நீர் வேண்டும். இல்லாவிடில்...
நிஜம்தான்... வேகமாகப் பெருகி வளரும் அவற்றின் உயிர் அணுக்களுக்கு நீர் தேவை.. இதையே அவற்றை அழிக்கும் ஆயுதமாகப் பயன் படுத்தி விடலாம்.



உணவு தேடி மலை எலிக்கூட்டம் வெளியே வருமுன் திரிசூல் வீரர்கள் துரிதமாகச் செயல்பட்டனர்.
நகரில் உள்ள நீர் நிலைகள்-நீர் ஊற்றுக் குழாய்களை நாசமாக்குங்கள். நீர்த் தேக்கங்களில் நீரைக் குடிக்க முடியா தபடி விஷத்தை கலக்கி விடுங்கள்
அரண்மனை மற்றும் நகரின் நீர்த் தொட்டிகள் அனைத்தும் விஷமூட்டப்பட்டது.
காலையில் அவற்றுக்கு நீர் அருந்த ஒரே ஒரு இடம் மட்டுமே இருக்கும். அது...நதி!
தங்கள் மறைவிடங்களி லிருந்து தாகவெறியோடு வெளிப்பட்ட மலை எலி கள் நீர் நிலைகளை மோப்ப மிட்டன.
நகரிலுள்ள நீர், குடிக்கப் பயனற்றது என்று உணரவே, எலிக்கூட்டம் அனைத்தும் நகரை விட்டுக் கிளம்பின.
ஆற்றை நோக்கிப்படை யெடுக்கின்றன. இனி அவற்றை யாரா லும் தடுக்க முடியாது.
திரிசூல் நிதியின் வேகத்தில்-ஆழத்தில் அத்தனை எலிகளும் விழ ஆற்றுவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.



மன்னர் திலீபனும் ராஜகுரு கௌதமரும் அரண்மனை உப்பரி கையிலிருந்து அந்தக் காட்சியைக் கண்டு கவலையை உதறி னார்கள். கடைசி எலியும் ஆற்றோடு போயிற்று அவற்றின் தீராத தாகமும் தீர்ந்து, மீளாத உலகுக்குப் போய்ச்சேர்ந்தன
திடீரென்று..
எலிகளின் ஆபத்தொழிந் தது... அதோ புரட்சிக் கும்பல் மகிஷான்களின் படை 'நகரை நோக்கி வருகிறது.
பல பகுதிகளிலிருந்தும், இரையைத் தேடி வரும் பருந்தைப் போல, எருமை இனமக்கள் கூட்டம் சமவெளியில் வந்து கூடின.
மன்னர் திலீபன் தம்படைகளுடன் கோட்டை யிலிருந்து வெளிப்பட்டு சமவெளிக்குக் கிளம்பினார்- மகிஷான் களைச் சந்திக்க.


நகரினுள் நுழைய முடியாதபடி குதிரைப்படை அரண்கட்டி நிற்கும் காட்சியைக் கண்ட மகிஷான்களின் நம்பிக்கை தளர்ந்து போயிற்று.
திலீபரே, உமது நகரம் ராட்சத மலை எலிகளின் படை எடுப்பினால் நாசமாகி விட்டதை நான் அறிவேன். இந்த நாடகம் பலிக்காது. சரணடைந்துவிடும்.
அமைதியாகப் பதிலளித்தார் மன்னர் திலீபன்.
எலிகளை அழித்து விட்டோம். சரணடையும் பேச்சுக்கே இடமில்லை.
விரோதிகளின் படையணியில் முணுமுணுப்புகள் எழுந்தன
கேட்டியா? திரிசூல் எலிகளை அழித்து விட்டதாமே.
இந்த நெஞ்சுறுதி யாருக்கு வரும்?
இத்தகைய தீரரை ஏன் விரட்ட வேண்டும்? எனக்கு விருப்பமில்லை!
அற்புதம் நிகழ்ந்தது. தாக்குதலை எதிர்பார்த்துத் தயாராக இருந்த திரிசூல் வீரர்களின் கண் முன்னே, புரட்சிப்படைகள் திரும்பிச் சென்றன. போராட்டத்தைக் கைவிட்டார்கள்.
(தொடரும்)

ரோஜா


வண்ண வண்ண ரோஜா
வாசம் மிக்க ரோஜா
எங்கள் தோட்ட ரோஜா
ஈடே இல்லா ரோஜா

நேரு அணிந்து கொண்ட
நல்ல மென்மை ரோஜா
பாரில் எவரும் விரும்பும்
பட்டு மென்மை ரோஜா

மாலை யாகிக் கழுத்தில்
மணக்கும் நல்ல ரோஜா
காலை யிலே பார்த்தால்
கவிதை பாட வைக்கும்!

- இரா. லிங்கேஸ்வரன்.







பலூன்

பையன் ஒருவன் வந்தனன்
பலூன் ஒன்றை வாங்கினேன்
பையப் பைய ஊதினேன்
பானை போல ஆனது

பானை போல ஆனதை
பலமாய் மேலும் ஊதினேன்
யானை வெடியாய் வெடித்தது
ஐயோ நடுங்கிப் போனேனே!

- தா. நீலகண்டன்


அளவு

அழகு கொஞ்சும் நிலவது
ஆகா யத்தில் நீந்துது
அழகு மிக்க அல்லியும்
அதனைப் பார்த்துச் சிரிக்குது

வானில் தோன்றும் சூரியன்
விரைந்து விரைந்து ஓடுது
மனதை அள்ளும் தாமரை
மயங்கி மயங்கிச் சிரிக்குது

உண்மை அன்பை உணரவே
உயரம் அளவு கோலில்லை
அன்பு மனம் ஒன்றுதான்
அளவு இதை உணருவீர்!

- ஏரிப்பட்டறை இ. எஸ். லலிதா.





மகிழ்ந்திடுவேன்

அடிக்க வந்தால் பறந்திடுவேன்
அரிக்க வைத்து ஓடிடுவேன்
துடிப்பாய் இசையும் எழுப்பிடுவேன்
தூக்கம் வராது செய்திடுவேன்!

ஊசியை உடம்பில் போட்டிடுவேன்
உயரே பறந்து தப்பிடுவேன்
காசு வாங்கவும் மறந்திடுவேன்
கொடிய நோயை வழங்கிடுவேன்

காதில் இரகசியம் சொல்லிடுவேன்
கண்ணில் பறந்து தடவிடுவேன்
போதும் என்றே யாவரையும்
போக வைத்தே மகிழ்ந்திடுவேன்!

- எஸ். சரவணன்.



வாழ்ந்திடுவோம்!

நாட்டைப் போற்றி வாழ்ந்திடுவோம்
நலங்கள் பெருக வாழ்ந்திடுவோம்
வீட்டைப் போலவே நாட்டினையும்
வாங்க வாங்க ஏற்றிடுவோம்!

நல்லவர் சொன்ன அறிவுரைகள்
நாளும் ஏற்று நடந்திடுவோம்
பொல்லா தெல்லாம் விலக்கிடுவோம்
பாரில் உயர்ந்து வாழ்ந்திடுவோம்.

பேதம் எத்தனை எழுந்தாலும்
பேசியே நாங்கள் முடித்திடுவோம்
சோதனை என்றே எண்ணாமல்
சோதரர் போலே வாழ்ந்திடுவோம்!

- கி. கணேஷ்ராம்.



கற்றுக் கொள்

உலகம் பரந்தது உணர்ந்து கொள்
உண்மை பேசக் கற்றுக் கொள்

பண்பு என்பதை அறிந்து கொள்
பணிவாய் இருக்கக் கற்றுக் கொள்

சுத்தம் எதுவெனக் கற்றுக் கொள்
சுறுசுறுப் புடனே இருந்து கொள்

ஒழுக்கம் உயர்வு புரிந்து கொள்
உயர்வாய் வாழ்ந்திடக் கற்றுக் கொள்

- பி. துக்கையண்ணன்.



பாரினைக் காக்கும்

தந்தையும் தாயும் இறையென்போம்
தூய மறை என்போம் - இவை
எண்ணும் எழுத்தும் கண்ணென்போம்
எமக்குப் பண் என்போம். - இவையே
உறுதியும் உழைப்பும் விழியென்போம்
உயர வழி என்போம் - இவையே
பொறுமையும் உண்மையும் ஒளியென்போம்
பெருமை நெறி என்போம் - இவையே
அமைதியும் அடக்கமும் பாதையென்போம்
ஆன்றோர் மொழி என்போம் - இவையே
ஈகையும் இசையும் குணமென்போம்
இணைஇலா இன்பம் என்போம் - இவையே
எளிமையும் இனிமையும் ஏணியென்போம்
ஏற்றத்தின் தோணி என்போம் - இவையே
பணிவும் துணிவும் துணையென்போம்
- இவையே
பாரினைக் காக்கும் விதி என்போம்.

- சு. பூங்காவனம்.

காலண்டர்

கண்ணைக் கவரும் காலண்டர்
கடைகள் எங்கும் வந்தாச்சு
வண்ண வண்ண வகைகளிலே
வாங்கச் சொல்லி மயக்குது!

தேசத் தலைவர் படமுண்டு
தெய்வ வகைகள் பலஉண்டு
பாசம் பொங்கும் குழந்தைகள்
பற்பல கோணப் படமுண்டு

அரசியல் தலைவர் அதிலுண்டு
அன்பு நடிகர்கள் பல உண்டு
சரித்திரம் படைத்த சான்றோரின்
சீரிய படங்கள் அதிலுண்டு

இந்து கிருத்துவப் பண்டிகைகள்
இசுலாம் சொல்லும் திருநாட்கள்
வந்து புறப்படும் ரயில்விவரம்
வரிசை போட்டு அதிலுண்டு

- மேலப்பாதி நாகராஜ்





கூடுங்கள்

சிறுவர் எல்லாம் வாருங்கள்
சிரித்து ஒன்று கூடுங்கள்
ஒற்று மையாய் வாருங்கள்
உலகை வென்று காட்டலாம்.

வன் முறையை வெறுத்திட
வந்து ஒன்று கூடுங்கள்
அன்பு காட்டி உயர்ந்திட
அழகுக் கரம் நீட்டுங்கள்.

உழைப்பின் பெருமை உரைக்கவே
உடனே ஓடி வாருங்கள்
வாழ்த்தி உலகை உயர்த்திட
வந்து இங்கே கூடுங்கள்.

- சிவ. கலாதரன்.

சர்க்கஸ்


சர்க்கஸ் நல்ல சர்க்கஸ்
சொக்க வைக்கும் சர்க்கஸ்
பார்க்கப் பார்க்க ஆசை
பாலர் விரும்பும் சர்க்கஸ்

சிறுவர் செய்யும் வித்தை
சிலிர்த்து வியக்க வைக்கும்
குலுங்கிச் சிரிக்க வைக்கும்
கோமா ளியின் ஆட்டம்

சிங்கம் புலி யானை
சீறிப் பணிந்து நிற்கும்
அந்த ரத்தில் ஆடும்
ஆட்டம் அயர வைக்கும்

கலையை வளர்க்கும் சர்க்கஸ்
கடின வித்தை சர்க்கஸ்
விலை கொடுத்துப் பார்க்க
வாங்கள் இன்றே போவோம்!

- எஸ். ராஜலட்சுமி





குஜராத் மாநிலத்தில் 'பதேலி' என்ற சிற்றூர். அதுதான், அந்தச் சிறுவனின் பிறந்த ஊர். அங்கிருந்து ஐந்தாறு கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு நகரம். 'பல்சார்' என்று பெயர். அங்கு, 'பாப் அவா பாப்' என்று ஒரு உயர்நிலைப் பள்ளி. பதேலியிலிருந்து தினசரி நடந்து வந்துதான், அவன் அங்கு படித்து வந்தான்.

ஒருநாள் காலையில், பள்ளியில் நுழைந்ததுமே, நெருக்கமான நண்பர்கள் இரண்டு மூன்று பேரை அழைத்தான். "மாதாந்திரத் தேர்வு

சதம் போடும் சீலர்!

களில், நம் வகுப்பின், குறிப்பிட்ட சில மாணவர்கள் மட்டும், எல்லாக் கேள்விகளுக்கும், மிக நன்றாக விடை எழுதி, அதிக மதிப்பெண்களைப் பெறுகிறார்களே... அந்த ரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டேன்டா..." என்றான்.

மணி அடித்தது. அனைவரும் வகுப்புக்குள் சென்றனர். வகுப்பாசிரியர் வந்து வருகைப் பதிவு எடுத்தார். உடனே அந்தச் சிறுவன் எழுந்து நின்றான்.

"என்ன வேண்டும் உனக்கு...?"

"வகுப்பை விட்டு வெளியேற வேண்டும்..." எனக் கூறிவிட்டு, ஆசிரியரின் பதிலை எதிர்பார்க்காமலே, வெளிநடப்புச் செய்து விட்டான் சிறுவன். அவனுடன் அந்த இரண்டு மூன்று பேரும் கூடச் சென்று விட்டனர்.

'அவர்கள் ஏன் வெளியேறினார்கள்...?' என்று வகுப்பாசிரியரிடம் குழப்பம். அவரும் எழுந்து வெளியில் வந்தார். அவர்களைப் பார்த்து, "என்ன வேண்டும் உங்களுக்கு? ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்...?" என்றார்.

"ஐயா, ஒரு முக்கியமான செய்தி..." என்ற அந்தச் சிறுவன், ஆசிரியரை மட்டும் தனியாக அழைத்துப் போய், எல்லா விவரத்தையும் சொன்னான்.

ஆசிரியர் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார். பிறகு சொன்னார். "தம்பி, போகட்டும். இனி ஒருபோதும் அப்படி நடக்காது. அதற்கு நான் உத்தரவாதம். நீ உன் நண்பர்களை அழைத்துக் கொண்டு உள்ளே வா..."

அவருடைய உறுதிமொழியை ஏற்று, மாணவர்கள் வகுப்புக்குள் வந்தனர். சிறுவனின் நண்பர்கள் அவனிடம் வற்புறுத்திக் கேட்டனர். "யாரடா அந்தத் தப்பைச் செய்தவர்...?"

"அதை மட்டும் கேட்காதீர்கள். அது யார் என்பது வெளியில் தெரிந்தால்,

ஜானகி மணாளன்

நிச்சயம் அவருடைய கௌரவம் பாதிக்கப்படும். அதற்கு மட்டும்' நான் இடம் தர மாட்டேன்..." என்று கூறி மறுத்து விட்டான் சிறுவன்.

சிறுவனின் பள்ளி வாழ்வில் நடந்த அந்த முதல் போராட்டம், பிற்காலத்தில் அவனது வாழ்வில் நிகழப் போகும் பல அறப் போராட்டங்களுக்கு முன்னோடியாக அமைந்தது.


1905 ஆண்டு, பிரிட்டிஷார் வங்காளத்தை இரண்டாகப் பிரித்தனர். அதை எதிர்த்து நாடு முழுவதும் கிளர்ச்சிகள் நடந்த போது அச் சிறுவனுக்குப் பத்தே வயது. அந் நிகழ்ச்சி அவனைப் பெரிதும் பாதித்தது. அவனும் தன் எதிர்ப்பை வெளிப்படுத்த விரும்பினான். எப்படித் தெரியுமா?

சில மாணவர்களை ஒன்று திரட்டினான். "ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சபதத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். இறுதி வரை அதன்படி நடக்க வேண்டும்" இதுதான் அவனது வேண்டுகோள்.

இதன்படி, அச் சிறுவன் மேற்கொண்ட சபதம் என்ன தெரியுமா?

"இன்று முதல் என் வாழ்நாள் முழுவதும் தேனீர் அருந்த மாட்டேன்" மகாபாரத பீஷ்மர் போன்று இன்றும் அவர் தனது சபதத்தைக் காத்து வருகிறார்.

இந்திய விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தது. பிரிட்டிஷ் அரசு பால கங்காதர திலகரைச் சிறையில் அடைத்தது. அதை எதிர்த்து நாடெங்கும் மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சிறுவன் படித்து வந்த 'பாப் அவா பாப்' பள்ளி மாணவர்களும் அதில் கலந்து கொண்டனர். அப்போது அவனுடைய வயது 14 தான். அவன் அதில் மிகுந்த தீவிரம் காட்டினான். அது மட்டுமா?



சில நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு ஒரு உறுதி எடுத்துக் கொண்டான். "இனி ஒருபோதும் அந்நியப் பொருள்களைப் பயன்படுத்த மாட்டேன்."

இன்றுவரையில், சிறுவன் அந்த உறுதியை மறவில்லை. காந்தி வழியில் கதராடையையே அணிகிறார். அவர் பயன்படுத்தும் எல்லாப் பொருள்களும் சுதேசியே!

அவர் இளைஞனாக இருந்த போது ஒரு முக்கிய நிகழ்ச்சி. அவருடைய மைத்துனருக்கு வெளியூரில் திருமணம். அதற்கு அவர் போகவில்லை.

தெரிந்தவர்கள் கேட்டனர்.

"நான் அதைப் பகிஷ்கரித்து விட்டேன்... அவர்கள் நிறைய வரதட்சணை வாங்குகிறார்கள். வாங்குவது தவறு

ன்று எடுத்துச் சொன்னேன். கேட்கவில்லை. ஆகவே, நான் அதில் கலந்து கொள்ளவில்லை. வரதட்சணை வாங்கும் எந்த ஒரு திருமணத்திலும் இனி ஒரு போதும் நான் நிச்சயம் கலந்து கொள்ள மாட்டேன். அவர்களுடைய அழைப்பை உதாசீனம் செய்வேன்..."

அந்தச் சபதத்தையும் அவர் இன்றும் காப்பாற்றி வருகிறார்.

பள்ளிப் படிப்பை முடித்த அந்த இளைஞர், பம்பாய் வில்சன் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார்.

1918ல் அவருக்கு வேலை கிடைத்தது. வட்டார வளர்ச்சித் துறையில் துணை கலெக்டர் ஆனார். அப்போது ஒரு நிகழ்ச்சி.

கலெக்டர் அக்கிராம மக்களின் குறைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். இடையில் வலிய நுழைந்த இளைஞரான துணைக் கலெக்டர், மக்கள் கருத்தைக் கலெக்டருக்கு விளக்கினார். அது கலெக்டருக்குப் பிடிக்கவில்லை.

"நீங்கள் ஏன் இப்படிப் பண்பு தெரியாமல் நடந்து கொள்கிறீர்கள்?"


"எதைக் குறிப்பிடுகிறீர்கள் ஐயா...?"

"மேலதிகாரிகளுக்கு நீங்கள் தரும் மரியாதையா இது? மக்களுடன் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் குறுக்கிட்டுப் பேசுகிறீர்களே? இது சரியா?"

அதற்கு அவர், "ஐயா, நான் இந்த வட்டாரத்தின் வளர்ச்சி அதிகாரி. என் மக்களின் குறைகளை, நீங்கள் புரிந்து கொள்ளும்விதத்தில் எடுத்துச் சொல்வது என் கடமை. நீங்கள் மக்களிடம் அவர்களுக்குப் புரியாத இந்துஸ்தானியில் பேசினீர்கள். மக்கள் உங்களுக்குப் புரியாத குஜராத்தி மொழியில் பதிலளித்தனர். எனவே, நான் இடையில் புகுந்து மக்களின் கருத்தை உங்களுக்கு மொழி பெயர்த்துச் சொன்னேன். இது எப்படித் தவறாகும்?" என்று வாதிட்டார்.

கடைசியில், கலெக்டர்தான் பணிந்து போக வேண்டியதாயிற்று.

அரசுப் பணியில் இருக்கும்போதே, தகுந்த சமயம் வரும் போது நாட்டு விடுதலை இயக்கத்தில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பினார். அவ்



''வசந்த காலம் என்பது என்ன?''

''கோடை விடுமுறை விடறாங்களே, அந்தக் காலம்தான் சார்!''

- சீர்காழி. வி. ரேவதி

வாய்ப்பு 1930ல் வந்தது. அரசுப் பதவியை ராஜினாமா செய்தார். வரிகொடா இயக்கத்தில் பங்கேற்றார். அரசு அவரைக் கைது செய்து சிறையிலடைத்தது. அவர் குடும்பம் அல்லல் பட்டது. காந்திஜி கூட அவரை மீண்டும் அரசுப் பணியில் சேருமாறு கேட்டுக் கொண்டார். ஆனால், அவர் மறுத்து விட்டார்.

நாளடைவில் குஜராத் வட்டாரக் காங்கிரஸ் செயலாளர் ஆனார். அவர் பலமுறை சிறை புகுந்தார். 1936 ஆம் ஆண்டு முதன் முதலாக அவர் நேருஜியைச் சந்தித்தார். அதே ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடந்தது. சூரத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று வருவாய்த் துறை அமைச்சரானார். அப்போது பம்பாயில் மதுவிலக்கை அமல்படுத்தினார். பிற்பாடு பதவி துறந்தார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்குகொண்டு மறுபடி சிறை புகுந்தார். பின்னர் மீண்டும் அமைச்சரான அவர் 1947 விடுதலையின் போது துணை முதல்வராக இருந்தார். 1952 முதல் பொதுத் தேர்தலுக்குப் பிறகு குஜராத் முதல்வரானார். 1956ல் அவர் மத்திய நிதி அமைச்சரானார். அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சி அவருடைய கொள்கைப் பிடிப்பை வெளிப்படுத்தியது.

'எங்கள் நாட்டுக்கு விஜயம் செய்யுங்கள்' என்று இங்கிலாந்து பிரதமரிடமிருந்து அழைப்பு வந்தது. அப்போது ஒரு தர்மசங்கடம். வெளிநாடு போவதென்றால் தடுப்பு ஊசி போட்டுக்



பரீட்சை வருகுது!

பரீட்சை வருகுது; பரீட்சை
வருகுது!
பார்த்துப் படியுங்க! - இனி
உறக்கம் சோம்பல் உதவா தென்று
ஒதுக்கி வையுங்க!

ஆர்வத் துடனே காலையில்
எழுந்து
அமைதியாய்ப் படியுங்க! - எந்தத்
தேர்விலும் நல்ல மதிப்பெண்
பெற்றுத்
தேர்ச்சி கொள்ளுங்க!

ஓர்மனத் துடனே பாடத் தோடு
ஒன்றிப் படியுங்க! - வாழ்வில்
சீர்பெற எண்ணித் தினமும்
உழைத்தால்
வெற்றி உண்டுங்க!

அ. சுப்பையன்.

கொள்ள வேண்டும். அவரோ ஊசியே போட்டுக் கொள்ள மாட்டார். நாட்டு வைத்தியம்தான்! எதை விட்டுக் கொடுப்பது? ஊசியையா அல்லது வெளிநாட்டு வாய்ப்பையா?

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார். இங்கிலாந்து பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினார். "ஊசி போட்டுக் கொள்ளாமல் வர அனுமதித்தால், நான் தங்கள் நாட்டுக்கு வருகிறேன்; இல்லையெனில் வர இயலாது..."

கடைசியில் அனுமதி கிடைத்தது. வெளிநாடு போய் வந்தார்.

பிற்பாடு ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்த போது, அவர் நமது நாட்டின் பிரதமர் ஆனார். இப்போது புரிந்து கொண்டிருப்பீர்களே இவர் யாரென்று?

இந்தியாவின் முதுபெரும் முன்னாள் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய்தான் அவர். பிறப்பு 1896 பிப்ரவரி 29. அது லீப் வருடம். எனவே அவருடைய பிறந்த நாள் 4 ஆண்டுகளுக்கு ஒரு தடவைதான் வரும். இந்த ஆண்டு 1995 லீப் வருடமல்ல. எனவே பிறந்த நாள் வராது. இருப்பினும் இவ்வாண்டு அவர் வாழ்வில் முக்கியமானது. காரணம், இது அவருடைய நூறாவது பிறந்த நாள் வரும் ஆண்டு.


இவ்வாண்டு முழுதும் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு, அடுத்து ஆண்டு 100 வயது நிறைவு விழா!

தேசாயின் தந்தை ராம்சோஜி. தாய் வாஜியா. மணிபென் என்பார்கள். மனைவி பெயர் சுஜ்ரா.

தேசாய் ஒரு சிறந்த பக்திமான். உண்மையான காந்தியவாதி. நிர்வாகத் திறமை மிக்கவர். நற்குணக்குன்று. நல்லொழுக்க சீலர். நேர்மையின் சிகரம். தியாகத்தின் திருவுரு. அஞ்சாநெஞ்சர். கண்டிப்பு மிக்கவர். அத்துடன் பிடிவாத குணமும் கோபமும் கூட நிறைய உள்ளவர்.

1991 ஆம் ஆண்டு அவருக்கு 'பாரத ரத்னா' உயர் விருது வழங்கப்பட்டது. வயதில்தான் முதியவரே தவிர, இந்த நூறு வயதிலும் உடல் ஆரோக்கியத்திலும், உள்ளத் திண்மையிலும் அவர் இன்றும் இளைஞர்தான்.

ஒவ்வொரு இந்தியனும் அவரது நல்வாழ்வைப் பின்பற்ற வேண்டியது மிக மிக அவசியம்.



தேடி வந்த தரிசனம்

அரசன் ஒருவன் மாறு வேடம் பூண்டு பல சிற்றூர்களைப் பார்வையிட்டு வந்தான்.

ஒருநாள், ஒரு சிற்றூரில் ஒரே ஓர் பெண் மட்டும் மரநிழலில் அமர்ந்து கூடை முடைந்து கொண்டிருந்தாள். மாறுவேடத்தில் வந்த அரசன் அவளை நெருங்கி, "அம்மா! நீ மட்டும் தனித்து இருந்து கூடை முடைந்து கொண்டு இருக்கிறாயே! வேறு ஒருவரையும் இந்தக் கிராமத்தில் காணோமே! அவர்கள் எல்லோரும் எங்கே போய் இருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

"அரசனைத் தரிசிக்கப் போய் இருக்கிறார்கள். அவருக்கு நாளை பிறந்த நாளாமே?" என்று பதில் சொன்னாள் அந்தப் பெண்.

"அப்படியானால் நீ மட்டும் ஏன் போகவில்லை?" என்றான் அரசன்.

"செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து முடிக்காமல் சோம்பேறிகள்தான் அரசனைத் தரிசித்துப் பரிசு வாங்கப் போவார்கள்" என்று மறுமொழி சொன்னாள் அந்தப் பெண்.

"அரசரைத் தரிசிப்பதால் உனக்குப் பயன் ஒன்றும் கிட்டாது என்பது உன் கருத்தா?"

"பயன் கிட்டுமோ கிட்டாதோ, அதை நான் அறியேன். எனக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை உதறித் தள்ளி விட்டு ஒருநாள் வேலையைப் பாழ்படுத்திக் கொண்டு அரசரைக் காணச் செல்வது, உழைப்பை உதாசீனம் செய்வதாகாதா?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

அவள் இப்படிச் சொன்னதும், அரசன் ஆனந்தமடைந்தான். அவள் கையில் ஒரு பொன் நாணயத்தைக் கொடுத்து, "பெண்ணே! இந்தப் பொன் நாணயத்தை நான் தந்த பரிசாக வைத்துக் கொள். அரசனைத் தரிசிக்கச் சென்றவர்கள் திரும்பியதும் அரசன் வந்து உன்னைத் தரிசித்து உனக்குக் காணிக்கை செலுத்தி விட்டுப் போனான் என்று அவர்களிடம் சொல்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டு திரும்பினான்.

— பாத்திமா மின்சா மன்சீர்.

வாசகர்களின் கேள்விகள் ஏதாவது இருக்குமா?

● மகாபாரதத்தில் வரும் கர்ணன் என்ற பெயர், காரணப் பெயரே என்று என் நண்பரின் தந்தை கூறுகிறார். சொந்தப் பெயர் என்ன என்று கேட்டாலும் தெரியவில்லை என்கிறார். எது உண்மை?

– ரா. மாணிக்கராஜ், சிதம்பரம்.

பிறக்கும்போதே காதுகளில் (கர்ண) அணியுடன் பிறந்தவன் என்பதால்தான் கர்ணன் என்று அழைக்கப்பட்டான். இது காரணப் பெயர் என்பதோடு, மிகவும் பிரபலமாகி விட்ட பெயரும் கூட. கர்ணனின் இயற்பெயர் வசுசேனன் என்பது.



● கார்களுக்குப் பெயர் வைக்கும்போது அந்த மாடலைக் கண்டுபிடித்தவரின் பெயரைத்தானே வைக்கிறார்கள்?

– வா. மதுமதி, நாகை.

எல்லாமே அப்படி என்று எடுத்துக் கொள்ள முடியாது. செவர்லெட், ஃபோர்டு, ஹொண்டா போன்றவைகளுக்கு வேண்டுமானால் மாடலைக் கண்டுபிடித்தவரின் (கம்பெனி) பெயர் என்பது பொருந்தும். பிளைமூத் கார் (Plymouth) 1620 இல் மெசச்சூசெட் நகருக்கு வந்து இறங்கிய முதல் அமெரிக்கப் பயணிகளைச் சிறப்பிக்கும் வகையிலும், கேடிலாக் (Cadilac) கார், அதே பெயர் கொண்ட ஒரு நகர அமைப்பாளரைக் கௌரவிக்கும் வகையிலும் பெயரிடப்பட்டவை.

● அமெரிக்காவில் உள்ள டிஸ்னிலேண்ட் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

– வா. முனிவேல் பாண்டி, மதுக்கரை.

கலிபோர்னியாவில் உள்ள டிஸ்னிலேண்ட் 1955 ஆம் ஆண்டு ஜூலை 17 ஆம்தேதி ஆரம்பிக்கப்பட்டது.

● கிராமபோன் இசைத்தட்டை யார் கண்டுபிடித்தார்கள்?

– பா. குணசுந்தரி, புழல்.

எமிலி பெர்லினர் (Emili Berliner) என்ப

வரே முதல் கிராமபோன் இசைத் தட்டைக் கண்டுபிடித்தார்.

● புதைகுழியில் உள்ள மணலுக்கு, அதில் சிக்கிக் கொள்பவர்களை இழுத்துக் கொள்ளும் மந்திர சக்தி எப்படி ஏற்படுகிறது?


- கா. பவானி, ஸ்ரீமுஷ்ணம்.

புதைகுழியை ஆங்கிலத்தில் Pond of quick sand என்பார்கள். இதில் உள்ள மணல் மிகவும் மிருதுவானது; மென்மையானது. இந்த மணலைவிட கனமான பொருள்கள் அல்லது மனிதர்கள் இதில் விழுந்தால், கனம் தாங்காமல் இது விலகிக் கொள்கிறது. இதைத் தவிர இதற்கு, இதில் விழுபவரை இழுத்துக் கொள்ளும் மந்திர சக்தி என்று தனியான சக்தி எதுவும் இல்லை. இந்த மென்மையான மணல் எப்படி உருவாகிறது என்பதே கேள்வி. மழை நீர் தேங்கல், ஆற்றின் போக்கில் மாற்றம் போன்ற நிகழ்ச்சிகளால் இத்தகைய சன்ன மணல்கள் ஒரே குழியில் திரள்கின்றன. இவைகளுக்கு அடியில் நீர் இருக்கும்.

விப்ஜியார் (Vibgyor) என்று வானவில்லைக் குறிப்பிடும்போது கூறுகிறார்களே? இதற்கு என்ன பொருள்?

- இ. எல்லம்மாள்,
போச்சாம்பாளையம்.

ஏழு வண்ணங்களை Violet, Indigo, Blue, Green, Yellow, Orange and Red என்பவற்றையே இது குறிக்கும்.





● தீப்பெட்டிகளைச் சேகரிப்பவர்களுக்கு என்று ஒரு பெயர் இருக்கிறதாமே, அது என்ன?

- நா. தேவசகாயன்,
பாளையம்கோட்டை.

தீப்பெட்டி சேகரிப்பவர்களை Cumyxaphists என்று அழைக்கிறார்கள்.

● மக்கள் விரும்பி உண்ணும் விலங்குகளில் கொலஸ்ட்ரால் இல்லாத மாமிசம் கொண்ட விலங்கு அல்லது பறவை உண்டா?

- மா. பொன்னுத்தாய், மதுரை - 7.

ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்கான கங்காருவின் மாமிசத்தில் கொலஸ்ட்ரால் இல்லையாம். free from கொலஸ்ட்ரால் என்ற இதை விளம்பரப்படுத்துகிறார்கள்.

● London Bullion Rate என்று தங்கத்தின் உலக மார்க்கெட் விலையைக் குறிப்பிடுவது போல் வைரத்தின் விலையை எங்கு நிர்ணயிக்கிறார்கள்?

- தூ. நந்தகோபால், புதுவை - 1.

கேளுங்கள் சொல்லப்படும்

சேரநம்பி

வைரத்தின் மதிப்பை உலக மார்க்கெட்டுக்கு முடிவு செய்வது ஆம்ஸ்டர்டாம் நகரில். இது ஹாலந்தில் இருக்கிறது.

● எல்லா வரிக் குதிரைகளின் உடம்பு வரிகளும் ஒரே மாதிரித்தான் இருக்குமா?

- கா. முத்தலிப்,
ராணிப்பேட்டை.

இருக்காது. வரிக் குதிரைகளின் உடம்பில் உள்ள வரிகள் ஒன்றுபோல் இருக்காது. நமது கைவிரல் ரேகைகளைப் போல!

● இஸ்திரிப் பெட்டியின் அடிப்பாகம் மட்டும் ஏன் பளபளப்பாகவே அமைக்கப்படுகிறது?

- தா. மஞ்களா, வேலூர்.

பளபளப்பான உலோகப் பகுதி, வெப்பத்தை அதிவிரைவில் இழந்துவிடாது. எவர்சில்வர் தம்ளரில் வைக்கப்படும் காப்பி சீக்கிரம் ஆறுவதில்லையே? இதே அடிப்படையில்தான் இஸ்திரிப் பெட்டியின் அடிப்பாகமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

● கவிமணி அவர்கள் குழந்தைகளுக்காக எழுதுவதற்கு முன்பாகவே பாரதியார் குழந்தைகளுக்கு எழுதிவிட்டாரா?

- து. பெரியநாயகம், தரங்கை.

இருவரும் சமகாலத்தவராக வாழ்ந்ததாலும், கவிமணிக்கு முன்பே பாரதியார் மறைந்துவிட்டதாலும் இப்படி ஓர் எண்ணம்





ஏற்பட்டுவிட்டது. கவிமணி அவர்கள் சிறுவர் பாடல்களை எழுதி (அச்சான) ஆண்டு 1901. பாரதியின் புதிய ஆத்திச்சூடி 1914 ஆம் ஆண்டிலும், பாப்பா பாட்டு 1915 ஆம் ஆண்டும்தான் வெளிவந்தன. எனவே, இருவரில் குழந்தைப் பாடல்களை முதலில் எழுதத் தொடங்கிய பெருமை கவிமணி அவர்களையே சாரும்.

● அமெரிக்க ஜனாதிபதி லிங்கன், நம் ராஜீவ் காந்தியைப் போல் பொதுக் கூட்டத்திற்கு வரும்போதுதான் சுட்டுக் கொல்லப்பட்டாரா?

- மா. முருகையன், சித்தமனூர்.

இல்லை. நகைச்சுவை நாடகங்களை விரும்பிப் பார்க்கும் லிங்கன், நாடக அரங்கில் 'Our American Cousins' என்ற நகைச்சுவை நாடகத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும் போதுதான் சுடப்பட்டார்.

● அதிக எண்ணிக்கையிலான கைரேகைகளைப் பதிவு செய்து வைத்துள்ள அமைப்பு எது?

- பா. பார்த்தசாரதி,
திருச்சுழி.

F. B. I. என்ற நிறுவனம்தான் அதிக எண்ணிக்கையிலான கைரேகைகளைப் பதிவு செய்து வைத்துள்ளது. கைரேகை ஆராய்ச்சியாளர்களுக்கும் துப்பறிபவர்களுக்கும் இது கருவூலம்.

● விமானத்தில் பயணம் செய்கையில் குழந்தை பிறந்தால் அது எந்த நாட்டின் மேல் பறந்து கொண்டிருக்கிறதோ அந்த நாட்டைச் சேர்ந்தது என்று என் அண்ணா கூறுகிறார். உண்மைதானா?

– மா. பூமணி, திருச்சூர்.

முற்றிலும் உண்மையே! விமானப் பயணத்தின் போது பிறக்கும் குழந்தை, அது எந்த நாட்டின்மேல் பறந்து கொண்டிருக்கும் போது பிறந்ததோ, அந்த நாட்டின் குடிமகன். இப்படி ஓர் உலகச் சட்டம் இருக்கிறது!

● ''அப்பாக்குட்டி குட்டி மகன் சுப்பாக் குட்டி, சுப்பாக் குட்டி மகன் கண்டெலியாம்'' என்று ஒரு நகைச்சுவைப் பாடலைச் சமீபத்தில் ஒலிநாடாவில் கேட்டேன். இது குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் பாடல்தானே?

– கா. மு. சிவராஜ பிள்ளை,
கொழும்பு – 2.

இது குழந்தைக் கவிஞரின் பாடல் அல்ல. எத்தனையோ தலைமுறைகளாக வாய்வழியாக வழங்கிவரும் சிறுவர்க்கான பழம் பாடல்.

● புலவர் அ. அகமது பஷீர் என்பவர் எழுதிய ''குழந்தை இலக்கியம்'' என்ற புத்தகம் எங்கே கிடைக்கும்?

– பா. அன்வர் பாட்சா, செஞ்சி – 2.





'குழந்தை இலக்கியம் – திறனாய்வு' என்ற தலைப்பில்தான் புலவர் அ. அகமது பஷீர் என்பவர் ஒரு நூலை எழுதியுள்ளார். இது 1978 இல் வெளியானது. J.C.A. வெளியீட்டகம், 200, காயிதே மில்லத் சாலை, சென்னை – 5 என்ற முகவரிக்கு எழுதிக் கேட்கவும். நூலாசிரியர் திருவல்லிக்கேணி, சென்னை – 5 இல் உள்ள கெல்லட் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி புரிந்தவர். அதனால் அங்கே எழுதிக் கேட்டால் தெரியலாம்.

● கோகுலத்தின் கௌரவ ஆசிரியரை எங்கள் பள்ளி ஆண்டு விழாவுக்குப் பேச அழைத்தால் வருவாரா?

– கா. ரங்கதுரை,
சிவகாசி.

அது நீங்கள் அழைக்கும் நாளையும், அவரது பணிகளையும் பொறுத்தது.

● அமுதசுரபி ஆசிரியர் விக்கிரமன் அவர்கள் சிறுவர்களுக்காகவும் எழுதியிருக்கிறாரா?

– மா. தாமோதரன்,
கோவை – 2.

பொற்காலத்தின் கதை என்ற நூல் வரிசையும், தண்ணீர் பாப்பா என்ற நாவலும் விக்கிரமன் அவர்கள் குழந்தைகளுக்காக எழுதியவையே.

ஒன்றுக்காவது

விநோத் பத்தாம் வகுப்பு மாணவன். படிப்பிலும் விளையாட்டிலும் படு கில்லாடி. இவ்வளவு சிறப்புகளைப் பெற்ற விநோத்துக்கு ஒரே ஓர் கெட்ட பழக்கம். அதுதான் பொய் பேசுவது. விநோதின் திருவாயைப் பொய்யாற்றின் பிறப்பிடம் என்றே சொல்லலாம். அந்த அளவுக்குக் கட்டுபாடின்றி; தங்குதடை இன்றிப் பொய்யை அள்ளி வீசுவான் விநோத். அதில் குறிப்பிடத்தக்கது என்ன தெரியுமா? அத்தனையும் நம்பும்படி இருக்கும்!

தமிழாசிரியரிடம் தனது பாட்டனாரின் ஒன்று விட்ட சகோதரர்தான் தமிழ்த் தாத்தா உ.வே.சா என்று அவர் நம்பும்படி கதை விட்டு அவருடைய நன்மதிப்பைப் பெற்றான்!

வகுப்பாசிரியரிடமோ, தனது மாமா லண்டனில் இருந்து அனுப்பிய அற்புதப் பேனா என்று பாரிமுனை பிளாட் பாரத்தில் வாங்கிய பேனாவை அன்பளிப்பாகத் தந்து அவர் மனதைக் குளிர்வித்தான்!

மாணவர்களையும் விட்டு வைப்பதில்லை. உள்ளூர்ப் பொருட்களை எல்லாம் வெளிநாட்டுப் பொருட்கள் என்று அளப்பான். மாணவர்கள் மத்தியிலும் விநோத்துக்கு ஏகப் பட்ட நண்பர்கள்.

புளுக ஆள் கிடைக்கவில்லை என்றால், விநோத் நண்பர்களிடமே தன் திறமையைக் காட்டி அவர்களைத் தர்ம சங்கடத்தில் சிக்க வைத்து மகிழ்வான். அவன் என்னதான் பொய் பேசுவான் என்பதே கிடையாது. அந்த அளவுக்கு எல்லாத் துறைகளைப் பற்றியும் அவனுக்கு விவரம் தெரிந்திருந்தது. கற்பனை வளம் இருந்தது.

விநோத்தின் புளுகுணித் தனத்தை எப்படியாவது நிறுத்த அவன் பெற்றோர்களும் ஆசிரியர்களும், நண்பர்களும் படாத பாடு பட்டுத் தோல்வி கண்டனர்.

ஒரு நாள், தன் வீட்டில் பாடங்களை எழுதிக் கொண்டிருந்தான் விநோத்.

"விநோத் கண்ணா, சமையலுக்கு மிளகாப் பொடி இல்லைடா. சைக்கிளை எடுத்துட்டு கடைக்குப் போய் வாங்கிட்டு வாடா" என்று கெஞ்சலாகக் கேட்டாள் அம்மா.

"இன்னிக்கு ரேடியோவில் செய்தி கேட்கலையா? இன்னும் அரை மணியிலே புயல் வரப் போகுதாம். மணிக்கு நூறு கி.மீ. வேகத்தில் புயல் காத்து அடிக்கப் போகுதாம். அதனால இன்னிக்கு மிளகாப் பொடி இல்லாமயே குழம்பு வச்சுடு."



இதுவும் விநோத்தின் புளுகுணித் தனங்களில் ஒன்றுதான் என்பதைப் புரிந்து கொண்ட அம்மா, தானே வாங்கி வரக் கிளம்பினாள். "வீட்டையாவது பத்திரமாகப் பாத்துக்கோடா'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டாள்.

விநோத்தின் வீட்டிற்கு அருகில் கடைகள் அவ்வளவாகக் கிடையாது. மளிகைக் கடைக்குச் செல்ல வேண்டுமானால் பஸ்ஸில்தான் போயாக

வேண்டும். அம்மா கிளம்பி, சரியாக ஐந்து நிமிடங்களில் வானம் இருண்டது. விநோத்தின் பொய் நிஜமானது. மழை 'ஜோ'வென்று கொட்டத் துவங்கியது.

விநோத்தின் அம்மா கொட்டும் மழையில் வெளியே போவதை பிரேமும், முகேஷும் பார்த்தனர். இருவரும் விநோத்தின் வகுப்பு நண்பர்கள். விநோத்தை மாற்ற வாய்ப்புக் காகக் காத்திருந்த அவர்கள் சட்டென்று ஒரு திட்டத்தைப் போட்டனர்.

விநோத் வீட்டுக் கதவை வேகமாகத் தட்டினான் பிரேம். நிதானமாக வந்து கதவைத் திறந்தான் விநோத்.

"என்ன பிரேம்! இந்த நேரத்தில் திடீர் விஜயம்?" என்று கேட்டுக் கொண்டே



நினைத்தாயா?

உள்ளே அழைத்தான் விநோத்.

"விநோத், 56-ஏ பஸ், மரத்தில் மோதி ஐம்பது பேர் படுகாயமாம். கடை வீதியில் சொன்னாங்க. உங்கம்மா 56-ஏவில் போறதைப் பார்த்தோம். அதனால்தான் உன்னிடம் சொல்ல வந்தேன்" என்றான் முகேஷ்.

"மழை பெய்ததால் மீட்புப் பணி துவங்கவில்லை" என்று சொன்னான் பிரேம்.

"பயணிகள் பிழைப்பது கஷ்டம் தானாம்" என்று தொடர்ந்து அடுக்கினான் பின்னாலேயே வந்த முகேஷ்.

விநோத்துக்கு தலையே வெடித்து விடும் போலிருந்தது. அம்மாவின் நிலையை எண்ணி அவன் நடுங்கினான்.

"நீங்க சொல்வது உண்மையா?" என்று தழுதழுத்த குரலில் நண்பர்களைக் கேட்டான்.

"ஆம்" என்று தலையசைத்தான் முகேஷ்.

விநோத்தின் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. அவன் கண்ணீரை ஒருகை ஆதரவாகத் துடைத்தது. அந்தக் கையின் சொந்தக்காரர் வேறு யாருமல்ல. விநோத்தின் அம்மாவேதான்!

"இவங்க சொன்னதை நானும் கேட்டுகிட்டு தானிருந்தேன் விநோத். எனக்கு ஒன்றும் ஆகவில்லை" என்று மகனைத் தேற்றினாள் அம்மா.

"பிரேமும் முகேஷும் சொன்ன ஒரு பொய்க்கே இப்படி ஆடிப் போயிட்டியே! நீ இப்படிச் சொன்ன பல பொய்கள் பல பேரை எப்படியெல்லாம் பதைபதைக்க வைத்திருக்கும் என்பதை என்றைக்காவது நினைத்துப் பார்த்திருக்கியா?" என்று அமைதியாகக் கேட்டாள் அம்மா.

தாயின் கேள்வி விநோத்தை சிந்திக்க வைத்தது. அவன் கண்களில் மறுபடி கண்ணீர்.

"அம்மா, இனிமேல் பொய்யே பேச மாட்டேன்" என்று உண்மையாகவே கூறினான் விநோத்.

விநோத்தைத் திருத்தியதில் ஆனந்தமடைந்தனர் நண்பர்கள்.

— பி.கே. தேவ்நாத்

உடற்பயிற்சி அதிகமானால் மாரடைப்பு வருமா?

கேட்கிறாரு டாக்டர்?

என். வெங்கடேசன், தேவபாண்டலம்.

என் நண்பனுக்கு இரண்டு பற்கள் முன் பக்கமாக நீட்டிக் கொண்டு அசிங்கமாக உள்ளன. அவை உட்பக்கமாக அமுங்குவதற்கு மருத்துவரீதியில் ஏதாவது ஒரு வழி கூறுங்கள், டாக்டர்.

நண்பனுக்கு பற்கள் மட்டும் முன்னோக்கி நீண்டிருந்தால் பல் மருத்துவரிடம் காண்பித்து 'கிளிப்' போட்டு நேர் செய்து விடலாம். ஒரு வேளை மேல்தாடை எலும்பு வளர்ந்து பற்கள் முன்பக்கமாக நீட்டிக் கொண்டிருந்தால், அதைச் சரிசெய்ய பிரத்யேகமாக ஒரு அறுவை சிகிச்சை தேவைப்படலாம். நீண்டிருக்கும் தாடை எலும்பை நவீன அறுவை சிகிச்சை மூலம் குறுகலாக்கி 'பிளேட்-ஸ்க்ரு' (Plate and Screw) மூலம் முறுக்கி இணைத்து விடுவார்கள். இதனால் தாடையுடன் நீண்டிருக்கும் பற்கள் உள்ளே சென்று விட, பற்களின் அமைப்பும் முக அமைப்பும் சீராகி விடும்.

சி. ரேவதி, மேலையூர்.

மாட்டுப் பாலைக் காய்ச்சாமல் அப்படியே குடிக்கலாமா? அப்படிக் குடித்தால் தீங்கு ஏதும் ஏற்படுமா?

மாட்டுப் பாலைக் காய்ச்சி ஆறவைத்துக் குடிப்பதே நல்லது. காய்ச்சாமல் அப்படியே குடித்தால் மாட்டுக்கு இருக்கும் நோய்கள் மனிதனுக்கும் பரவக்கூடிய அபாயம் ஏற்படும். முக்கியமாக 'Bovine Tuberculosis' என்று அழைக்கப்படுகிற ஒருவித 'காசநோய்' காய்ச்சாத பால் வழியாக மனிதர்களுக்குப் பரவுகிறது.





ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர் - I.

தீயினால் ஏற்பட்ட தழும்பை மாற்ற முடியுமா, டாக்டர்?

முடியும்! 'ஒட்டறுவை சிகிச்சை' (Plastic Surgery) மூலம் தீப்புண்ணால் ஏற்பட்ட தழும்பை முற்றிலும் மாற்றி விடலாம்.

எஸ். நாகராஜன், மேலப்பாடி.

உடலில் எந்த நிலைமை ஏற்பட்டால் நோயாளிக்கு டாக்டர் 'குளுகோஸ்' ஏற்றுவார்?

உணவு உண்ண இயலாத நிலைமை, உடம்பிலிருந்து நீர்ச்சத்தும் தாது உப்புக்களும் வெளியேறிய நிலை, தொற்றுநோய்க் கிருமிகளின் பாதிப்பு காரணமாக இரத்தத்தில் நச்சுநிலை (Toxaemia) ஏற்படுதல், விஷக்கடிகள் பாதிப்பு போன்ற நிலைமைகளில் நோயாளிக்கு மருத்துவர்கள் குளுகோஸ் ஏற்றுவார்கள். பொதுவாக நெடுநாள் பட்டினி, உண்ணாவிரதம், வாந்தி, வயிற்றுப்போக்கு, காலரா, சீதபேதி, அதிர்ச்சி,

— மதி...

டாக்டர் கு. கணேசன்

அதித காய்ச்சல், குடல் அடைப்பு, குடலில் நீர்த் தேக்கம், மயக்கம், மிகையான தீப்புண், வெப்பத் தாக்கு (Sunstroke) போன்றவற்றால் பாதிக்கப்படு பவர்களுக்கு 'குளுகோஸ்' ஏற்ற வேண்டிய அவ சியம் ஏற்படும். சில அறுவை சிகிச்சைகளின் போதும் நோயாளிகளுக்கு குளுகோஸ் ஏற் றப்படுவதுண்டு.

எம். செந்தில் குமார், சென்றாம் பாளையம்.

உப்புச் சத்து அதிகமான பொருள் கள் எவை எவை?


சாதாரணமாக 'உப்புச் சத்து' என்று நாம் குறிப்பிடுவது 'சோடியம்' (Sodium) ஆகும். இது கீழ்க்காணும் உணவுகளில் அதிக அளவில் உள்ளது. உலர்ந்த பழங்கள், மீன், முட்டை, கோழி, இறைச்சி, பால், பிஸ்கட், பீட்ரூட், காரட், முள்ளங்கி, பச லைக்கீரை, உலர்ந்த திராட்சை... இன்னும் பல.

இ. சிவா, ஆலப்பாக்கம்.

'ஸ்கிஸோஃபெரினியா' என்றால் என்ன, டாக்டர்? இது எந்த வயதினருக்கு வரும்?

'ஸ்கிஸோஃபெரினியா' (Schizophrenia) என்பது மனச்சிதைவு நோயைக் குறிக்கும். சிறுவர் முதல் முதியோர் வரை எல்லா வயதினருக்கும் வரக்கூடிய மனம் தொடர் பான நோய் இது. பரம்பரை, உடலமைப்புப் பாதிப்பு, வளர்ப்பு முறைக் குறைபாடுகள், தகாத குடும்பச் சூழ்நிலை, வறுமை, இய லாமை, அதிர்ச்சி, தன்னம்பிக்கையின்மை, பாதுகாப்பற்ற உணர்வு, பெற்றோர் பூசல், பற்றற்ற வாழ்க்கை, எதிர்பாராத தோல்விகள், பலாத் காரம், பருவக் கொந்தளிப்பு பல காரணங்களால் மனச்சிதைவு நோய் வரக்கூடும்.





ப. கணேஷ்ராகவன், திருவொற்றியூர்.

ஹோலி பண்டிகையின் போது தூவப் படும் பல வண்ணப் பொடிகளால் கண் களுக்கு பாதிப்பு வருமா, டாக்டர்?

வண்ணப் பொடிகள் எதுவானாலும் அவை கண்களில் பட்டால் நிச்சயம் பாதிப்பு ஏற்படும். கண் அழற்சியில் தொடங்கி கண் பார்வை பாதிப்பு வரை பல ஆபத்துகள் அவற்றால் வரக்கூடும். எனவே, வெளிப்பொருள்கள் எதுவும் கண்களில் படாமல் பாதுகாத்துக் கொள்வதே கண்களுக்கு நல்லது.

சி. பூ. இனியவன், மேலவாசல்.

உடற்பயிற்சியை அதிகமாகச் செய்வதால் மாரடைப்பு வரும் என்பது உண்மையா, டாக்டர்?

உண்மைதான் இனியவன்! என்றாலும் இந் தக் கூற்று குழந்தைகளுக்கு, சிறுவர்களுக்கு, மற் றும் இளைஞர்களுக்குப் பொருந்தாது. 40 வய திற்கு மேற்பட்டவர்கள் அளவுக்கு அதிகமாக உடற்பயிற்சி செய்தால் 'மாரடைப்பு' (Exercise Induced Myocardial Infarction) வருவதற்கு வாய்ப்புள்ளது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்த மும் நஞ்சுதானே! தினமும் 40 நிமிடங்களுக்கு மேல் உடற்பயிற்சி செய்தால் ஆரோக்கியம் தரும் உடற்பயிற்சி கூட ஆபத்தாக மாறி விடு கிறது. எனவே, 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

“பெரிய்...ய கதிர்வேல்!

“**ச**ந்துரு, கொஞ்சம் வாயேன்”

அம்மாவின் குரல் ஹாலில் படித்துக் கொண்டிருந்த சந்திரனின் காதில் விழுந்தது. படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்து விட்டு, சமயலறைக்கு விரைந்தான். சந்திரனைப் பார்த்ததும் “இந்தா, போய் ரெண்டு தேங்கா வாங்கிட்டுவா” என்று பத்து ரூபாய் நோட்டையும் பையையும் நீட்டினாள், அம்மா.

சந்திரன் கடைக்குச் சென்றான். கடைக்காரர் சந்திரனின் அப்பாவுக்கு நெருங்கிய நண்பர். சந்திரனைக் கண்டதும் அவர், “சந்திரா, நல்ல சமயத்திற்கு வந்தே. என் அண்ணன் அவசரமா இன்னைக்கு வெளியூருக்கு போயிட்டார். அவர்தான் சாதாரணமா எனக்கு சாப்பாடு கொண்டு வருவார். இன்னிக்கு அவர் இல்லாததால எனக்கு சாப்பாடு வரலே. எப்படிப் போயிட்டு வரதுன்னு திண்டாடறேன். நல்லவேளையா நீ வந்திருக்கே. கொஞ்சம் இங்கேயே இருந்து கடையைப் பார்த்துக்க. நான் ஸ்கூட்டர்ல போயிட்டு அரை மணில சாப்பிட்டுத் திரும்பிடறேன்” என்று குழைந்தார்.

“அப்ப அம்மா கேட்ட தேங்காய்?”

“போகும்போது நான் கொடுத்துட்டுப் போறேன்.”

“சரி அங்கிள்” என்றான் சந்திரன்.

“நன்றி சந்திரா. வாடிக்கையா நம்ம கடைக்கு முறுக்குப் போடற பையன் இப்போ வருவான். அவன் முறுக்கு வேணுமான்னு கேட்டா, இருபத்தைந்து போடுன்னு சொல்லு. கண்ணாடி ஜாடியைக் கொடு. அவனே துடைச்சு அடுக்கி வைச்சுக் கொடுப்பான். பண்ணி ரெண்டு ரூபா கொடு” என்று புறப்பட்டார் கடைக்காரர்.

பதினைந்து நிமிடங்கள் சென்றதை பெரியதாக மாட்டியிருந்த கடிகாரம் காட்டியது. அப்போதுதான் சந்திரனின் மனதில் அந்தத் தீய எண்ணம் உருவானது. சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் இல்லை. கடைக்காரர் வருவதற்குள் நாலு கடலை பர்பிகளையாவது எடுத்துத் தின்றுவிட அவன் துடித்தான். ‘அவர் இல்லாத போது, அவருக்குச் சொந்தமானதை எடுப்பதும் திருட்டுத்தானே?’ என்று இடித்தது மனசாட்சி. ஆனாலும் கடலை பர்பி ஆசை மனசாட்சியை விழுங்கி விட்டது. வேகமாக கடலை பர்பி டப்பாவைத் திறக்க முயன்றான். அந்த நேரத்தில் கடைக்காரர் கூறியது போலவே, ஒரு சிறுவன் வந்தான். கையில் ஒரு சின்ன துணிப்பை. உடை எளிமையாக இருந்தாலும், சுத்தமாக இருந்தது. சுறுசுறுப்பாக, நேர்மையானனாகக் காணப்பட்டான். கடைக்காரர் குறிப்பிட்ட முறுக்குப் போடும் பையன் இவனாகத்தான் இருக்கும் என்று எண்ணிக் கொண்டான் சந்திரன்.

அண்ணே முறுக்கு வேணுமா? அந்தப் பெரிய அண்ணன் இல்லையா?” என்று அவனே கேட்டான்.

“வாங்க! நீங்கதான் அந்தப் பெரிய்...ய முறுக்கு வியாபாரியா?” என்று இண்டலடித்தான் சந்திரன்.”

சிறுவன் கண்டுக் கொள்ளவில்லை. காரியத்திலேயே குறியாக இருந்தான்.

“எத்தனை முறுக்கு வேணும் அண்ணே?”

“இருபத்தைந்து போடச் சொன்னாரு.”



“ஏன் அந்த போட்டோகிராபரை அடிச்சிட்டாங்களாம்!”

“செத்தவரை போட்டோ எடுக்கப் போய் வாய்தவறி, ‘ஸ்மைல் ப்ளீஸ்’ன்னுட்டாராம்!”

- கே. சோமசேகர்



பெரிய கண்ணாடி ஜாடியைக் கேட்டு வாங்கிக் கொண்ட சிறுவன், பரபரவென்று செயல்பட்டான். ஒரு நிமிடத்தில் முறுக்குகளை அழகாய் அடுக்கி ஜாடியைக் கொடுத்தான். கடைக்காரர் கூறியிருந்தபடி பன்னிரெண்டு ரூபாயை எடுத்துக் கொடுத்தான் சந்திரன்.

சந்திரன் கொடுத்த ரூபாய் நோட்டுக்களை எண்ணிப் பார்த்தான் சிறுவன். சரியாக இருபத்திரண்டு ரூபாய் இருந்தது! ஒரு பத்து ரூபாய் ஒட்டிக் கொண்டு போயிருந்தது!

''அண்ணே, பன்னிரண்டு ரூபாதான் கொடுக்கணும். இருபத்திரண்டு ரூபா கொடுத்துட்டிங்க'' என்று ஒரு பத்து ரூபாய் நோட்டை சந்திரனிடம் நீட்டினான் சிறுவன்.

ஒரு நிமிடம் சந்திரன் அதிர்ந்து போனான். இத்தனை ஏழ்மை நிலையில், தவறுதலாக ஒட்டிக் கொண்டு வந்த பத்து ரூபாய் நோட்டைத் திருப்பிக் கொடுத்து விட்ட இந்தச் சிறுவனின் நேர்மை எங்கே? கடைக்காரர் இல்லாத நேரத்தில் கடலை பர்பியைத் திருடித் தின்ன நினைத்த அவன் எங்கே!

''இந்தாங்க அண்ணே. சீக்கிரம் நோட்டைப் பிடிங்க.''

ரூபாய் நோட்டை சந்துருவின் கையில் திணித்து விட்டுக் கிளம்பினான் சிறுவன்.

''தம்பி உன் பெயர் என்ன?''

''பெரிய்...ய கதிர்வேல்'' என்று சிரித்தான் சிறுவன்.


''உண்மையாகவே நீ பெரிய்...ய கதிர்வேல் தான்'' என்றான் சந்துரு.

— பாலாஜி ஆதித்தன்

''பையன் ஏன் அழறான்?''

''ஏதோ, 'புட்டிப் பாலாமே?' - அது வேணுங்கிறான்!''

- கே. சோமசேகர்



சின்ன மீன்



சோப்புக் கட்டிகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கண்ணாடி ஷெல்பினுள் அடுக்கினான் ராமு. அது ஒரு மளிகைக் கடை. சாதாரண மளிகைக் கடை அல்ல. வாடிக்கையாளர்கள் தாங்கள் விரும்பும் பொருட்களைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் வசதி கொண்ட 'சூப்பர் மார்க்கெட்'.

"சீக்கிரம் அடுக்கிட்டு வந்து கஸ்டமர்களை கவனிப்பா...." முதலாளியின் குரல் ஓங்கி ஒலித்தது.

அவசர அவசரமாக சோப்புக்கட்டிகளை அடுக்கிவிட்டு, கஸ்டமர்களைக் கவனிக்கத் தொடங்கினான் ராமு.

"ராமு, அருமையான பேனா ஒண்ணு வேணும்!" என்று கேட்டுக் கொண்டே வந்தான் குமார். அவன் ராமுவின் நண்பன். பஞ்சாயத்துத் தலைவர் மகன். கான்வென்ட்டில் படிக்கிறான்.

அழகிய பெட்டிகளுக்குள் இருந்த பேனாக்களை மேஜை மீது பரப்பினான் ராமு.

ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்து விட்டு, "இதுதான் இருக்கா....? இல்லை இன்னும் வேற ஏதாச்சும் இருக்கா?" என்றான் குமார்.

"ரொம்ப விலை உசந்த பேனா ஒண்ணு இருக்கு" என்றவாறு குனிந்து பேனாப் பெட்டியைத் தேடினான், ராமு.

குமார், அக்கம் பக்கம் பார்த்துவிட்டு ஒரேயொரு பேனாவை எடுத்து மின்னல் வேகத்தில் கால்சட்டைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டான்.

முதலாளி இதை கவனித்து விட்டார். ஆனாலும் காணாதது போல் இருந்து விட்டார்.

பெட்டியைத் தேடி எடுத்த பின்பு, ஏதோ பார்ப்பது போல் பாவ்லா காட்டி விட்டு "வேண்டாம்... எடுத்து வச்சிடு!" என்று கூறி விட்டு வாசலில் காத்திருந்த காரில் ஏறிப் போய்விட்டான் குமார்.

அவன் போனதும் ராமுவை அழைத்தார் முதலாளி!

"இப்ப வந்துட்டுப் போனானே, குமார்– அவன் ஏதாச்சும் வாங்கினானா?"

"இல்லை முதலாளி!" என்றான் ராமு.


"அவன் ஒரு பேனாவை உனக்குத் தெரியாம எடுத்துக்கிட்டுப் போயிட்டான். நீ கவனிக்கலே. ஆனா நான் கண்டும் காணாமல் இருந்துட்டேன்...!"

"ஏன் முதலாளி! உடனே கையும் களவுமா பிடிக்காம ஏன் விட்டீங்க?" ஆவலை அடக்க முடியாமல் கேட்டான் ராமு.

"அவசரப்படாதே! அவன் சாதாரண வீட்டுப் பையனா இருந்தா கூப்பிட்டுக் கண்டிச்சிருப்பேன். அவனோ பஞ்சாயத்துத் தலைவர் பையன்...! அந்தப் பேனாவோட விலை பத்து ரூபாய்தான். ஆனால், அவர் மாதாமாதம் நம்ம கடையில்தான் மளிகைச் சாமான் வாங்குகிறார். பத்து ரூபாய் பேனாவுக்காக ரெண்டாயிரம் ரூபாய் வாடிக்கையை விட்டுவிட முடியுமா? ஏதோ அவனுக்கு நாம்ப ஒரு பரிசுப் பொருளைக் கொடுத்ததா நினைச்சுப்போம். அதான் பேசாம இருந் திட்டேன்! சின்ன மீனை விட்டு பெரிய மீனைப் புடிக்கர தந்திரம்தான் வியாபாரத்தின் உயர்நாடி" என்றார் முதலாளி.

ராமு அசந்து நின்றான்.

- கி. சிவா



வௌவால் வேணு!

காட்சி -1

(சுபாவின் வீட்டுக் கூடம். சுபா படித்துக் கொண்டிருக்க வேணு வருகிறான்)

சுபா: வா வேணு. என்னது திடீர்னு இந்தப் பக்கம் விஜயம்? நீ காரணம் இல்லாம வரமாட்டியே?

வேணு: காரணத்தோடதான் வந்திருக்கேன் சுபா. உன்னிடம் பாரதியார் கவிதைப் புத்தகம் இருக்கு இல்லையா? அதை ஒரு நாள் தாயேன். இரண்டு மூன்று பாடல்களை எழுதிக் கொண்டு பத்திரமா நாளைக்கே திருப்பித்தந்து விடறேன்.'

சுபா: ஐயையோ... அதை நான் யாருக்கும் தர மாட்டேன். அது எனக்குப் பரிசா வந்த புத்தகம். வேணுமானா, இங்கேயே எழுதிக்க. தரேன். வீட்டுக்குக் கொண்டு போகத் தரமாட்டேன்.

வேணு: பரவாயில்லை சுபா. நான் வேற யார் கிட்டயாவது கேட்டு வாங்கிக்கறேன். (மெதுவாக) பாலாஜி சொன்னது சரிதான்...

சுபா: என்ன வேணு! என்னமோ முணுமுணுக்கறே? சொல்ல நினைக்கிறதை சத்தமா சொல்லு?

வேணு: ஒண்ணுமில்லே. அந்த பாலாஜி சொன்னது சரிதான்னு சொன்னேன்.

சுபா:(ஆவலாக) எந்த பாலாஜி? அவன் என்ன சொன்னான்?

வேணு: ஐயோ அந்த சுபாவிடமா கேட்கப் போறே? அறுந்த கைக்கு சுண்ணாம்பு தராத கருணைக் கிழங்கு ஆச்சே? சுத்தப் பிசிநாரின்னு சொன்னான். நான்தான், சுபா அப்படியெல்லாம் இல்லைன்னு சொல்லிவிட்டு வந்தேன். கடைசியில அவன் சொன்னதே நிஜமாயிட்டுது. வரேன் சுபா.

சுபா: (கோபமாக) பாலாஜி அப்படியா சொன்னான்? நான் ஒன்றும் பிசிநாரி இல்லை. இரு புத்தகத்தைக் கொண்டு வந்து தரேன். நீ ரெண்டு நாள் என்ன, ரெண்டு வாரமே வேண்டுமானாலும் வச்சுட்டு பத்திரமா திருப்பிக் கொடு. (உள்ளே வேகமாகப் போகிறாள்)

வேணு: (தனக்குள்) அதுதானே பார்த்தேன். யாருக்கு எதெது ஓசா இருக்குன்னு தெரிஞ்சு அதை டைட் பண்ணிட்டா நம்ம காரியம் வெற்றிதான். (கை கூப்பி வேண்டிக் கொண்டு) அப்பா பாலாஜி, என் காரியத்தை முடிச்சுக்க ஒத்தாசையா இருந்த உனக்கு என் மனமார்ந்த நன்றிப்பா. சுபா கண்ணுல

மட்டும் பட்டுடாதே.

காட்சி -2

(பெருமாள் வீட்டுக் கூடம். பெருமாள் காத்தாடிக்கு சுங்கு கட்டிக் கொண்டிருக் கிறான். வேணு வருகிறான்)

பெருமாள்: அட வேணுவா! வாவா...

வேணு: பெருமாள், எங்க தெரு காத்தாடி அணிக்கும், பக்கத்துத் தெரு காத்தாடி அணிக்கும் இன்னிக்கு சாயங்காலம் போட்டி. என்னோட நூல் கண்டை கோபத்துல எங்கப்பா எடுத்துப் பத்த வைச்சுட்டாரு. அம்மா, காத்தாடியைக் கிழிச்சுப் போட்டுட்டாங்க. அதுனால உங்கிட்ட காத்தாடி, நூலைக் கடன் வாங்கிக் கிட்டுப் போகலாம்னு வந்தேன். இங்கே பார்த்தா, நீ விட்டுட்டிருக்கே. எப்படிக் இரவில் கேட்கிறது? அதுனால போறேன்.

பெருமாள்: வேணு, காத்தாடிப் போட்டின்னா, அவங்கவங்க சொந்தக் காத்தாடி, நூலை வைச்சுக்கிட்டுக் போட்டில கலந்துக்கறதுதான் நேர்மை.

வேணு: தர முடியாதுன்னு சொல்லி விட்டுப் போயேன். ஏன் இப்படி சுத்தி வளைச்சுப் பேசறே? அந்த அழகிரி சொன்னது சரியாத்தான் இருக்கு.

பெருமாள்: *(பதைபதைப்போடு)* எந்த அழகிரி? அந்த மேட்டுத் தெரு, காபிக் கடைக்குப் பக்கத்து வீட்டு அழகிரி தானே?

வேணு: அவனேதான்*(போகப் பார்க்கிறான்)*

பெருமாள்: இரு வேணு. அவனுக்கு எப்பவுமே என்னைப் பார்த்தா பொறாமை. கிரிக்கெட்டில் நான் நல்லா பௌல் பண்றேன்னு புகைச்சல். என் கையெழுத்து மணிமணியா இருக்குன்னு ஆசிரியர் எழுதிட்டார். பெருமாள் கையெழுத்து மாதிரி எழுதுன்னுவேற அவன்கிட்டே சொல்லிவிட்டார். இதுக்கெல்லாம் நான் என்ன செய்வது?

வேணு: அது அவனுக்குத் தெரியலையே?

பெருமாள்: வேணு, அந்த அழகிரி என்ன சொன்னான் என்னைப் பத்தி?

வேணு: வேண்டாம் பெருமாள். எனக்கு எதுக்கு வீண் பழி? இப்ப எல்லாத்தையும் கேட்டுப்பே. நாளைக்கே ரெண்டு பேரும் ஒன்னாயிடுவீங்க. எனக்குத்தான் கெட்ட பெயர்! வேணாம்பா. ஆளைவிடு.



பெருமாள்: ஐய, அந்த பிள்ளையார் காது அழகிரியோடு இனிமே சகவாசமே வச்சுக்க மாட்டேன்.

வேணு: நீ அவனைப் பிள்ளையார் காதுங்கறே. அவன் உன்னை பனங்காய் மண்டை பெருமாள்னு சொல்றான்!

பெருமாள்: *(ஆத்திரத்துடன்)* என் தலை கொஞ்சம் பெரிசா இருக்கு என்பதற்காக பனங்காய் மண்டைங்கறதா? ஒரு கணக்கு சுயமா போட வராது. என்னை சொல்லித்தரச் சொல்லி அரிப்பான்.

வேணு: நீ அவனை ஆங்கிலப் சொல்லித்தரச் சொல்லி மூட்டைப் பூச்சி மாதிரி தொணப்புவாயாமே?

பெருமாள்: *(ஆத்திரம் மறையாது,* அதையும் சொல்லிட்டானா? இன்னும் என்னென்ன சொன்னான்?

வேணு: என்னென்னமோ சொன்னான். அதையெல்லாம் சொல்லிண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. நீயோ,



காத்தாடியும் நூலும் தரமாட்டேன் னுட்டே. நான் வேற யாரிடமாவது கேட்டு ஏற்பாடு பண்ணிக்கணுமே? ஆளை விடு பெருமாள். பசிக்கறது.

பெருமாள்: நான் உனக்கு காத்தாடியும் நூலும் தரேன் வேணு. கவலையை விடு. என்னோடயே டிபன் சாப்பிடலாம் வா. அந்த அழகிரி இன்னும் என்னைப் பத்தி என்னென்ன சொன்னான் என்பதை மட்டும் விவரமா ஒண்ணுவிடாம சொல்லு. வா உள்ளே போகலாம்! (போகிறார்கள்)

வேணு: (தனக்குள்) அதுதானே பார்த்தேன். யார்யாருக்கு எந்த எந்த ஸ்குரு லூசா இருக்குன்னு தெரிஞ்சு அதை டைட் பண்ணினா நம்ப காரியம் வெற்றிதான். அழகிரி... நன்றியெல்லாம் உனக்குத்தான். நீ வாழ்க... பெருமாள் கண்ணுல மட்டும் பட்டுடாதே.

காட்சி -3

(வேணுவின் வீட்டுக் கூடம். வேணு படித்துக் கொண்டிருக்க, கோதையும், தேவியும், பாபுவும் வருகிறார்கள்)

வேணு: என்னடா இது! கோதை, பாபு, தேவி மூணுபேரும் ஒன்னா வந்திருக்கிங்க?

கோதை: காரணமாத்தான் வேணு. நம்ப பள்ளி மன மகிழ் மன்றத்துல சிறுவர் நாடகப் போட்டி அறிவிச்சிருக்காங்களே பார்த்தியா?

வேணு: பார்த்தேன். சிறந்த நாடகத்துக்குப் பரிசுகூட உண்டுன்னு போட்டிருந்தாங்களே? அது விஷயமாவா பார்க்க வந்திங்க? எனக்கு சிறுவர் நாடகம் எழுதவும் தெரியாது. நடிக்கவும் தெரியாது. ஆளைவிடுங்க.

தேவி: வேணு, உன்னால் முடியாமப் போனா என்ன? நீ மனசு வைச்சா எங்களுக்கு அது கிடைக்க உதவி பண்ணிடலாம்.

பாபு: ஆமாம் வேணு. சிறுவர்க்காக கதை எழுதும் புத்தூர் பொன்னப்பன் உங்க அண்ணனுக்கு நண்பர்தானே? உங்க வீட்டுக்கு அடிக்கடி வருவார்னு சொல்லுவியே? எனக்கு அவரோட ஆட்டோகிராப்பைக் கூட வாங்கித் தந்திருக்கியே? அவர் கிட்டே கேட்டு நடிக்க

ஏற்றதா ஒரு நல்ல நாடகத்தை எழுதித் தரச் சொல்லேன்?

வேணு: எல்லாம் உண்மைதான். ஆனால், இப்போ எங்க அண்ணனும் பொன்னப்பனும் கல்லூரியில் நேரில் பார்த்தால் கூடப் பேசிக்கிறது கிடையாது. நட்பு முறிஞ்சு போச்சு. அதனால அவரிடம் போய் எந்த உதவியையும் நான் கேட்க முடியாது.

கோதை: என்ன வேணு!உன்னை மலை மாதிரி நம்பிக் கொண்டு வந்தோம். இப்படிக் கைகழுவி விட்டுட்டியே?

வேணு: நான் என்ன செய்யறது?

பாபு, கோதை, தேவி: (மூவரும் ஒரே குரலில்)எங்களுக்கு அதெல்லாம் தெரியாது. எப்படியாவது நீதான் அவரிடம் ஒரு நல்ல நாடகத்தை எழுதி வாங்கித் தரணும்.

வேணு: (யோசித்து) உம்... சரி கவலையை விடுங்க. யார் யாருக்கு எங்கே ஸ்குரு லூசா இருக்குன்னு தெரிஞ்சுகிட்டா, அதை டைட் பண்ணி நம்ப காரியத்தை சாதிச்சுக்கலாம். அண்ணனோட நண்பராச்சேன்னு, தயக்கமா இருந்தது. இருந்தாலும் பரவாயில்லை. உங்களுக்கு நாடகம் கிடைச்சுட்டதாகவே நம்பி காரியங்களை கவனியுங்க.

பாபு, தேவி:(ஒரே குரலில்) வேணுவுக்கு

கோதை: ஜே ஜே!

காட்சி -4

(எழுத்தாளர் புத்தூர் பொன்னப்பன் வீட்டுக்கூடம். பொன்னப்பன் எழுதிக் கொண்டிருக்க, வேணு வருகிறான்)

வேணு: (வந்து கொண்டே) வணக்கம் அண்ணா?

பொன்னப்பன்: வேணுவா! வா வேணு. வீட்டுல உங்க அப்பா அம்மா அண்ணன் எல்லாரும் நலம்தானே? நீகூட இப்பவெல்லாம் என் வீட்டுக்கு வரதே இல்லையே?

வேணு: எனக்கு வரணும்னு ஆசை தான்னா. படிக்க ஏதாவது நல்ல புத்தகம் தருவீங்களே? ஆனா, அண்ணனை நினைச்சாத்தான் பயமா இருக்கு.

பொன்னப்பன்: போகக் கூடாதுன்னு அடிச்சானா?

வேணு: அப்படி நேரிடையாவா சொல்வாரு! இனிமே பொன்னப்பன் பெயரை யாராவது எடுத்தீங்கன்னா நடக்கறதே வேறேன்னு கத்தினாரு. அதோட உங்களுக்கு ரொம்ப முன்கோபமாம். நீங்க முசுடாம். இஷ்டம் இருந்தால் பேசிச் சிரிப்பீங்களாம். இல்லேன்னா விளக்கெண்ணெய் தானாம்.

பொன்னப்பன்: கேக் சாப்பிடறயா? குடிக்க என்ன வேணும்? காம்ப்ளானா? காப்பியா?

வேணு: ரெண்டும். அதுக்கு முதல்ல எனக்கு பள்ளியில நடிக்க ஏற்றதா ஒரு நாடகம் எழுதி தாங்கண்ணா.

பொன்னப்பன்: உனக்கு இல்லாததா வேணு? உள்ளே வா. (போகிறார்கள்)

வேணு:(தனக்குள்) பெரிய இலட்சிய எழுத்தாளர்னு பேரு. கடைசியில இப்படி ஸ்குரு கழண்ட கேசாவே இருக்காரே!ம்...இப்படி இருக்கற வரை நமக்கு நல்லதுதான்.

காட்சி -5

(பள்ளி மண்டபம். நாடக ஒத்திகை. பாபு, தேவி, கோதை, சுபா, பாலாஜி, பெருமாள், அழகிரி, எழுத்தாளர் பொன்னப்பன் ஆகியோர்)


வேணு: (வந்து கொண்டே) எல்லோருக்கும் வணக்கம். ரொம்ப நேரமா காத்திட்டு இருக்கீங்களா?

பாபு: ஆமாம் வேணு. இதுதானே இறுதி ஒத்திகை? நாளைக்கு மேடையில் அரங்கேற்றப் போகிறோமே?

வேணு: அட சுபா, பாலாஜி,

உனக்கு எப்பவுமே இப்படித்தான் திக்குமாடி?
இல்லேடி. பேசும்போது மட்டும்தான்.

—எஸ்.தட்சணாமூர்த்தி





பெருமாள், அழகிரிகூட வந்திருக்காங் களே...!(நடுங்குகிறான்)

பொன்னப்பன்: உங்க அண்ணன் ராஜா கூட வரும் நேரம்தான்.

வேணு: (மனதுக்குள்)என்னது! எல் லாத்துருவங்களும் ஒன்னா சேர்ந் திருக்கு! இந்த இடம் நமக்குப் பாதுகாப் பானது இல்லை. கிளம்பிட வேண்டியது தான். (உரக்க) அண்ணா, நாடகத்தின் இறுதி ஒத்திகையை இப்ப நான் பார்க் காட்டா என்ன? நாளைக்கு மேடை யேறும் போது பார்த்துக்கறேன். நீங்க எழுதின நாடகம்னா சிறப்புக்குக் கேட் கவா வேணும்? நான் வரேன். வேலை இருக்கு.

அண்ணன்: (வந்து கொண்டே) எல்லா வேலையையும் அப்புறம் வைச் சுக்க. நீ இப்ப பார்க்க வேண்டியதுதான் முக்கியம். நாடகத்தின் பெயர் என்ன தெரியுமா? வௌவால் வேணு.

கபா: ஒரு காலத்தில பறவைகளுக் கும், விலங்குகளுக்கும் போர் வந்துதாம் வேணு. அப்போ வௌவால் என்ன பண்ணித்தாம் தெரியுமா வேணு? பறவைகள் முகாமில் நடந்ததையும் கேட்டதையும் விலங்குகள் முகாமில் சொல்லிப் பயனடைந்ததாம். அதே போல, விலங்குகள் முகாமில் நடந்ததை யும் கேட்டதையும் பறவைகள் முகாமில் கூறி ஆதாயம் அடைந்ததாம். கடைசி யில் பறவைகளும் விலங்குகளும் அமைதியான பிறகு, வௌவாலின் மோசடித்தனத்தை அறிந்து விலங்கு களும் சேர்த்துக் கொள்ளாது, பறவை இனத்திலும் சேர்த்துக் கொள்ளாது அதை ஒதுக்கி விட்டனவாம்!

பெருமாள்: அந்த மாதிரி, இந்த நாடகத்துல வேணு என்ற ஒரு சிறுவன் வருகிறான். ஒருவரைப் பற்றி மற்றவர் என்ன கூறுகிறார் என்பதை, மற்றவரி டம் வந்து புறம் கூறித் தனக்கு வேண்டி யதைச் செய்து கொண்டு போகும் சுய நலம் மிக்க சிறுவன் அவன். இறுதியில் துன்பமடைந்து மனம் மாறுகிறான். வேணு, இப்போ நானும் அழகிரியும் மீண்டும் நண்பர்கள்.

சுதா: நானும் பாலாஜியும கூட நண பர்கள்.

பொன்னப்பன்: வேணு, நானும் உன் அண்ணனும் கூட பழையபடி நண்பர்களாகி விட்டோம்.

வேணு: இது எப்படி நடந்தது?

பொன்னப்பன்: உன் அண்ணனைப் பற்றி என்னிடமே புறம் கூறியதும் என் அறிவு வேகமாக வேலை செய்தது. தன் சொந்த அண்ணனைப் பற்றியே இப்படி புறம் கூறிக் குளிர்காயும் நீ, என்னைப் பற்றியும் மற்றவர்களிடம் புறங்கூறாமல் இருப்பாயா என்று எண்ணினேன். உடனே உன் அண்ணனிடம் நானே வலியச் சென்று பேசினேன். எங்கள் நட்பு முறியக் காரணமாக இருந்ததை நாங்களே பேசி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, நட்பைப் புதுப்பித்துக் கொண்டோம். உன் நண்பர்களிடம் பேசிப் பார்த்தேன். ஒருவரைப் பற்றி அவர் இல்லாத இடத்தில் இகழ்ந்து புகார் பேசி, ஆதரவைப் பெற்றுத் திரியும் கலநலம் மிக்கவன்தான் நீ என்பதை அறிந்து கொண்டேன். உன்னையே கதாநாயகனாக்கி நாடகமாக்கினால் என்ன என்று தோன்றியது. செய்துவிட்டேன்.

அண்ணன்: ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பழித்துக் குறைகூறுவதைத் திருவள்ளுவர் எத்தனை இழிவாகக் கருதுகிறார் தெரியுமா? இப்படிப்பட்ட இழிந்த குணமுடையவனையும் தாங்கும்படி எனக்குக் கடமை விதிக்கப்பட்டதே என்று பூமித்தாய் வருந்துகிறாளாம். திருவள்ளுவர் புறங் கூறாமைக்கு என்று ஒரு தனி அதிகாரத்தையே படைத்திருக்கிறார் என்றால் இது எத்தனை கொடிய குணம் என்பதை விளக்க வேண்டியதில்லை.

வேணு: (தலை குனிந்து) அண்ணா, என்னை மன்னித்து விடுங்கள். இனி யாரிடமும் நான் புறங்கூறமாட்டேன். திருந்தி விட்டேன்.

அறன் நோக்கி ஆற்றும் கொல் வையம் புறன் நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை?

(குறள் 189)

விரட்டும் அவன்!

குறிஞ்சிப்பாடி கணேசன்

கவிதா உள்ளே நுழையும்போதே அம்மா எச்சரித்தாள்.

"தபாலைப் பிரித்துப் பார்த்ததிலிருந்து அப்பா மிகவும் கோபமாக இருக்கிறார்! 'எங்கே அந்தப் பயல்?' என்று உன் அண்ணன் பாலனைக் கேட்டார். 'எங்கேயோ வெளியே போயிருக்கிறான்' என்றேன். கவனம்" என்றாள்" அம்மா.

"சரி இருக்கட்டும்மா. நான் கிட்டே போய் என்னவென்று கேட்கறேன்" என்று உள்ளே சென்றாள் கவிதா.

''உன் அண்ணன் பண்ணினதைப் பார்த்தாயாம்மா? ஐம்பதாயிரம் ரூபாய் செக்கை உறையிலிட்டு தபாலில் போடத் தந்தேன். என்ன செய்தானோ தெரியவில்லை. 'செக் வந்து சேரவில்லை. இதுதானா உங்க நாணயம்'னு கடுமையாகக் கடிதம் வந்திருக்கு. இவன் என்ன செய்தான்னே தெரியவில்லையே?" என்றார் அப்பா கவிதாவின் முகத்தைப் பார்த்தபடியே.

"ஐம்பதாயிரம் ரூபாயும் போனது போனதுதானா அப்பா?"

''இல்லையம்மா. அதைப் படாதபாடுபட்டு நிலைநாட்ட வேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே வெளியில் சென்றிருந்த பாலன் உள்ளே நுழைந்தான்.

''டேய் இங்கே வாடா" என்று இரைந்த அப்பா, "இருபது நாட்களுக்கு முன் ஒரு உறையை உன்னிடம் தந்து தபால் பெட்டியில் போடச் சொன்னேனே? போட்டியா?" என்று கனலாகக் கேட்டார்.

"ஓ... போட்டேனே!"

"உண்மையைச் சொல்லுடா!"

''போட்டேன் போலத்தான் இருக்கு."

"என்னடா சொன்னே?"—என்றவாறே அப்பா பாலனின் கையைப் பற்றினார்.

"சைக்கிளிலே வைத்துக் கொண்டு போகும் போது, வழியில் எங்கோ விழுந்து போயிட்டுது. அதுதான் சொல்லலே..." என்று இழுத்தான் பாலன்.

அவ்வளவுதான் 'படார்! படார்!' என இருமுறை அப்பாவின் விரல்கள் அவன் முதுகைப் பதம்பார்த்தன.

அம்மா வந்து தடுத்தாள்.

"இந்தக் கழுதை அப்போதே வந்து சொல்லி இருந்தால் அதற்கான ஏற்பாடு



களைச் செய்திருக்கலாம். அதை விட்டு விட்டு" என்று கத்தினார் அப்பா.

மறுநாளும் அப்பாவுக்கு ஒரு கடிதம் வந்தது. ஆனால், அந்தக் கடிதம் வருத்தம் தராதது. 'உங்கள் செக் வந்து சேர்ந்து விட்டது. ஆனால் நீங்கள் அதை அஞ்சல் பெட்டியில் போடவில்லை. மற்றவற்றை நான் நேரில் வந்து சொல்கிறேன்' என்று எழுதியிருந்தது.

இரண்டு நாள் கழித்து, சென்னை வணிகர் அப்பாவைத் தேடிக் கொண்டு வந்து விட்டார்.

வந்ததுமே அவர், "ஏழு, ஏழைபங் காளர் தெருவுக்குப் போய் ஒருவரைப் பார்க்க வேண்டும்! வாருங்கள்" என்று அப்பாவை அழைத்தார்.

அப்பாவுக்கு ஒரே வியப்பாக இருந்தது. அந்த வீடு அவர் அக்காவின் வீடு. ஏதோ கருத்து வேறுபாடு பெரிதாகிப் பேச்சு வார்த்தை கூட நின்று விட்டது. "அங்கு ஏன் போக வேண்டும்? நீங்கள் சந்திக்கின்ற அளவு பெரிய ஆட்கள் அங்கு யாரும் இல்லை" என்று கூறினார் அப்பா.

"நீங்கள் சொல்வது சரியாக இருக்கலாம். நான் அழைக்கின்றேன் வருகிறீர்களா? இல்லை நானே போகட்டுமா?' என்றார் சென்னை வணிகர்.

வேறு வழியின்றி அப்பா அவருடன் சென்றார்.

ஆட்டோவை விட்டிறங்கியதும் சென்னை வணிகர், வீட்டினுள் நுழைந்து, "அருட்சுடர் இருக்காரா அம்மா" என்று கேட்டார்.



தன் தம்பி வெளியில் நிற்பதையும் புதியவரான ஒரு முதியவர் தன் மகனைத் தேடிக் கொண்டு வந்திருப்பதையும் பார்த்தாள் பாலனின் அத்தை. பழைய விரோதம் காரணமாக புது வடிவில் தன் மகனுக்குத் தீமை செய்ய முயற்சிக்கிறார்கள் என்று நினைத்தாள் அந்த ஏழைத் தாய்.

"நீங்கள் யாரு என்று நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

"பயப்படாதீங்க. அருட்சுடர் உங்களுக்கு என்ன வேணும்? நன்மை பண்ணத்தான் நான் வந்திருக்கேன்."

"என் மகன்தான். பள்ளிக்கூடத்திலே படிக்கிறான்."

"மகிழ்ச்சி! பிள்ளையை நல்லாத்தான் வளர்த்திருக்கீங்க. எனக்கு வர வேண்டிய ஐம்பதாயிரம் ரூபாய் செக் இருந்த தபால் கவர் ரோட்டிலே விழுந்து

கிடந்ததை உங்கள் பையன் எடுத்து எனக்கு அனுப்பியுள்ளான்! இந்த விவரத்தை அவனே கவர் மேலே எழுதி இருக்கிறான்! அவன் நினைத்திருந்தால் அதைக் கிழித்தெறிந்திருக்கலாம். அல்லது குப்பையில் போட்டிருக்கலாம். 'இந்தக் கவரை ரோட்டில் கிடந்து எடுத்து அனுப்பியவர் க. அருட்சுடர், எண் ஏழு, ஏழைபங்காளர் தெரு, காயலூர்' என்று எழுத வேறு எழுதியிருக்கிறான். அவன் மட்டும் இத்தனை பொறுப்புணர்ச்சியோடு கவரை எடுத்து தபால் பெட்டியில் போடாது, கவரின் மேல் ஒட்டியிருந்த தபால் தலையை மட்டும் கிழித்து எடுத்துக் கொண்டு போயிருந்தால் என் கதி அதோகதி ஆகியிருக்கும்.



இவனுடைய பொறுப்புணர்வு மற்ற சிறுவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அதோடு இவனுடைய பொறுப்புணர்ச்சிக்கு நான் ஏதாவது பரிசு தர விரும்புகிறேன். இவன் எவ்வளவு படிக்கிறானோ அதுவரை ஆகும் செலவை நானே ஏற்றுக் கொள்ளப் போகிறேன் மறுக்காதீர்கள்". என்றார்.

அவர் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் அருட்சுடர் வீட்டில் நுழைந்தான்.

தங்களுடன் பகை பாராட்டிப் பேசாதிருக்கும் மாமா, தன் வீட்டின் வாயிலில் நிற்பதைக் கண்டு அவனுக்கு ஒரே திகைப்பு. ஆனாலும் 'உள்ளே வாங்க மாமா' என்று கூப்பிட்டான்.

அதைக் கவனித்து விட்ட சென்னை வணிகர், 'நீங்கள் அருளுக்கு மாமனா?' என்று கேட்பது போல் சைகை காட்டினார். "ஆம்" என்று தலையசைத்தார் அவரும்.

"இப்படிப்பட்ட பொறுப்புள்ள சிறுவனுக்கு தாய் மாமனாக இருப்பதைப் பற்றி நீங்கள் பெருமைப்பட வேண்டும். உள்ளே வாருங்கள்," என்று அழைத்தார் சென்னை வணிகர்.

"வா தம்பி உள்ளே" என்று அக்காவும் அழைத்தாள்.

"நம்ம பாலன்தான் அக்கா அதைக் கீழே தவற விட்டவன். எல்லாம் நல்லதா முடிந்து விட்டது" என்றார்.

அருட்சுடர் செய்த சிறிய நன்மையால் பழைய பகை தீர்ந்தது. படிப்பதற்கு உதவியும் கிடைத்தது.




கொட்டாங்குச்சி ஆமை!

கே. குப்புராஜ்

படத்தில் உள்ள ஆமையைப் பாருங்கள். இது முழுக்க முழுக்கக் கொட்டாங்குச்சியால் செய்யப்பட்டது. இதன் பாகங்கள் தலை, கழுத்து, உடல், கால்கள், வால் ஆகிய ஐந்து.

இதைச் செய்யத் தேவையானவை :

1. கண் இல்லாத ஒரு பெரிய கொட்டாங்குச்சி (உடல் பகுதிக்கானது)
2. கண் இல்லாத ஒரு சின்ன கொட்டாங்குச்சி (தலைப் பகுதிக்கானது)
3. 'ப' வடிவிலான ஒரு கொட்டாங்குச்சித் துண்டு (தலையையும் உடலையும் இணைக்க)
4. வாலாக ஒட்ட ஏற்ற கொட்டாங்குச்சித் துண்டு
5. ஒரு கனமான தபால் கார்டு (கால் பகுதிகளுக்கு)
6. பெவிகால்
7. கலர் பாக்ஸ், பிரஷ்
8. சிறிது உப்புக் காகிதம்




செய்யும் முறை :

இரண்டு கொட்டாங்குச்சிகளையும் சொர சொரப்பான தரையில் தேய்த்து வட்ட விளிம்பை சீராக்கிக் கொள்ளவும். உப்புக் காகிதத்தைப் போட்டுத் தேய்த்து மொழு மொழுப்பாக்கிக் கொள்ளவும். தலை உடலில் ஒட்ட வேண்டிய பகுதியை, 'ப' வடிவில் சிறிது வெட்டிக் கொள்ளவும். இதே போல் வால் பகுதிக்கும் சிறிது ஒட்டை விடவும். இதற்குப் பெரியவர்களின் உதவி தேவை. கத்தி அல்லது சிறிய ரம்பத்தைப் பயன்படுத்தலாம்.

கட்டுரையில் தரப்பட்டுள்ள கால் பகுதியை டிரேஸ் எடுத்து, அஞ்சலட்டையில் ஒட்டி 4 கால்கள் செய்து வைத்துக் கொள்ளவும். வால் பகுதிக் கொட்டாங்குச்சி சில்லை, தேய்த்துத் தேய்த்து அந்த வடிவத்திற்குக் கொண்டு வரவும். இது கஷ்டமாக இருந்தால் இதற்கும் தபால் அட்டையில் ஒரு வாலைச் செய்து கொள்ளவும்.

தலையையும் உடலையும் இணைக்கும் பகுதியான 'ப' வடிவ கொட்டாங்குச்சியை எடுத்து, ஒரு முனையை, தலையை ஒட்ட 'ப' வடிவில் வெட்டப்பட்டுள்ள பாகத்தில், உள்பக்கமாக பெவிகாலால் ஒட்டவும். இன்னொரு முனையை தலையின் உட்பக்கத்தில் ஒட்டி விடவும். ஒட்டும் போது தலைப் பகுதி, கொஞ்சம் தூக்கினாற்போல் வர வேண்டும். தரையோடு தரையாக இருக்கக் கூடாது. அதிகமாகத் தூக்கவும் கூடாது.



இதே போல் வால் பகுதியையும் ஒட்டி


விடவும். கால் பகுதிகளையும் ஒட்டி விடவும்.

இனி கலர் பாக்ஸைக் கொண்டு கவனமாக வண்ணம் தீட்டவும். உடல் பகுதி, தலை, வால், கால்கள் எல்லாவற்றுக்கும் பழுப்புக் கலர்.


உடல் பகுதிக்கு மட்டும், சீரில்லாத வட்ட வடிவில் கறுப்பு வண்ணத்தால் கோடு இடவும். இடையே சிவப்பு வண்ணத்தில் ய அல்லது ம எழுத்து வடிவில் வரையவும். இப்படிச் செய்தால் மிகவும் இயற்கையாக இருக்கும்.

வாலுக்கு பழுப்பு வண்ணமே போதும். கால் பகுதிகளில் விரலாக வரும்படி கறுப்பு வண்ணம் இடவும்.

தலைப் பகுதியில், கண்களுக்கு,



உட்பக்கத் தோற்றம்



மேல் தோற்றம்

பழுப்பு வண்ணத்திற்கு இடையே கண்களை வரையவும், அதற்கு நடுவில் பழுப்புப் புள்ளியாகக் கண் விழி.

வாய்க்கு, பழுப்புக்கு இடையே சிவப்பில் அரைசந்திர வடிவை வரையவும். இதற்கு நடுவில் கறுப்பில் சற்று நீளமாக வாய் ஒட்டை.

உடம்பும் தலையும் இணைந்திருக்க வேண்டும். இடைவெளி இருக்கக் கூடாது.

இதை வீட்டில் வரவேற்பு அறையில் வைக்கலாம். ரேடியோ, டீ.வி. பெட்டிகளின் மேல் வைக்கலாம். கண்காட்சியில் வைத்துப் பரிசைத் தட்டிச் செல்லலாம்.

இது குறித்து உங்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு உரிய தபால் தலையுடன் திரு கே. குப்புராஜ், பயிற்சியாளர், ஜவஹர் பால பவன், இராஜாஜி மண்டபம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002 என்ற முகவரிக்கு எழுதலாம்.

"உங்க அப்பா வையவே மாட்டாரா? அவர் பெயர் என்னடா?"

" 'வையா'புரி!"

- சீர்காழி சாமா சாமி



புகைப்படம் வெளியிடுங்கள்!

• உமாசங்கர் எழுதிய 'அந்த 200 ரூபாய்' திருட்டுப் புத்தியுள்ள சபலக் குழந்தைகளைக் கண்டிப்பாகப் பக்குவப்படுத்தும். - குமரலிங்கம் அ. வடுகநாதன், பட்டமங்கலம் வி. சந்திரா, சிதம்பரம் பா. சிவசாமி மற்றும் பலர்.

• RSVPக்கு சரியான விளக்கம் "Respondez Sil Vous Plait." சேரநம்பியை பெஞ்சி மேல் ஏற்றி, புகைப்படம் எடுத்து வெளியிடுங்கள்! - சிவகாசி, ம. நடராஜன், கங்கம்பட்டி மாத்தா சுபாஷிணி, சேலம் வா. சுந்தர், நாமக்கல் ஆ. வேலாயுதம், புவனராஜபுரி பொ. பெரியநாயகி, புதுபெருங்களத்தூர் சி.வி. ராஜாமணி, மற்றும் பலர்.

• டிசம்பர் இதழில் வெளியான "சுத்துவது எந்தத் தவளை?" கதை, தவளைகள் தோல் வாயிலாக மட்டுமே சுவாசிக்கும் என்ற நினைப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. இது தவறுதானே? - புத்தூர் மா. தங்கமணி, தென்பேரை வா. கோதை, மோகனூர் ரா. ஆரோக்கியசாமி மற்றும் பலர்.


(உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆக்சிஜனைத் தவளை தன் நுரையீரல், வாயின் உட்பகுதி, மேல் தோல் இவற்றின் வழியாகப் பெறுகிறது என்பதையும், நிலத்தில் இருக்கும் போது அது முற்றிலும் நாசியா லேயே சுவாசிக்கிறது என்பதையும் குறிப்பிட்டிருக்க வேண்டும். குறிப்பிட விட்டுப் போனது தவறே. இதைச் சுட்டிக்காட்டியவர்களுக்கு நன்றி. - ஆசிரியர்.)

• 'கனடாவைக் கலக்கிய கராத்தே புலி'யைப் படிக்கும்போதே, நாமும் ஏதாவது சாதனை புரிய வேண்டும் என்ற துடிப்பு ஏற்படுகிறது. தகவல்கள், சாதனைகள் அருமை. அவற்றை அழகாக வழங்கியிருக்கும் முறை அருமையிலும் அருமை. எழுதியவர் பெயரைப் போடுங்களேன் சார்! - சின்னாளப்பட்டி வெ. பெருமாள் ராஜு, காங்கேயம் தூ. பழனிவேல், மருதுப்பாளையம் கா. சிகாமணி, மேலகிருஷ்ணன் புதூர் பி. இராமகிருஷ்ணன், விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், மேலப்பாதி எஸ். நாகராஜன், சர்க்கார் கொல்லப்பட்டி பெரு. இளங்கம்பன், கச்சிராபாளையம் ஜெ. ஜெய்சங்கர், கொண்டரசம்பாளையம் எம். எஸ். பெருமாள், எம். எஸ். கிருஷ்ணன்.

• 'பீமனை வென்ற காளை' சித்திரக் கதை எங்கள் மனத்தை வென்று விட்டது. காமிக்ஸ் படித்த பிரமை! பாராட்டுக்கள்! - ஐயங்கார் பாளையம் மா. ரங்கராஜன், தூக்கப்பட்டி கா. பொன்னம்பலம், நாட்டரசன்கோட்டை வி. சாந்தா, மேலப்பாதி எஸ். ராஜலட்சுமி, புதுவயல் ஆர். அறிவழகன் நண்பர்கள்.

• ஆழியின் 'இரை விசித்திரங்கள்' அறிவியல் சூப்பர் சார்! ஐந்து ரூபாய் இதற்கே தரலாம்! - குன்றத்தூர் ராஜா நாகமணி, திருமந்தூர் மா. ஆடவல்லான், நாகை கா. கண்மணி, ஈரோடு எஸ். சண்முகம், வேட்டவலம் தா. முருகையன், கோட்டையூர் தே. ஸ்ரீதேவி மற்றும் பலர்.

• 'மறக்க முடியாத மாட்டுப் பொங்கல்' உயிர்களிடத்தில் அன்பு காட்டாது மாட்டுப் பொங்கலைக் கொண்டாடுபவர்களைக் கண்டிப்பாகத் திருத்த வைக்கும். - மாயூரம் கோ. பாலசந்திரன், திருவரங்கம் ஏ. சாரதா, பெரியபாளையம் வெ. ராசாத்தி, ஆனைக்கல்மேடு சி. மாதேஸ்வரன், மேல்மலையனூர் எஸ். செந்தில் குமார் மற்றும் பலர்



• முத்துராமலிங்கபுரம் கோகுலம் சிறுவர் சங்கத்தைப் பற்றி எழுதியமைக்கு எங்கள் நன்றி - மு. பாலசுப்ரமணி (தலைவர்).

• ஆங்கிலப் புத்தாண்டை எல்லோரும் கொண்டாடுவதன் அவசியத்தை மிக அழகாகக் கூறியுள்ளது தலையங்கம். வாசகர்களை உலக ஒருமைப்பாட்டு நிலைக்கு உயர்த்தும் ஒரே பத்திரிகை கோகுலம்! - குருவிப்பட்டி மா. பிச்சைமுத்து, திண்டிவனம் சா. கோபிநாதன், திருமங்கலம் கு. திரிவேணி, ஈரோடு மா. செண்பகராணி, சென்னிமலை தா. முத்தம்மா, திருவாரூர் மு. தனகோபால் மற்றும் பலர்.

• எல்லாப் பத்திரிகைகளும்தான் கபில்தேவைப் பாராட்டி எழுதின. ஆனால், தனக்கே உரிய தனித்த பாணியில் கோகுலத்தில் வழங்கியுள்ள பாராட்டுதான் சிந்தையில் நிலைத்தது. எத்தனை தகவல்கள்! நாங்களே அருகே சென்று பாராட்டின மாதிரி ஒரு பிரமை! - கத்திவாக்கம் மா. எல்லப்பன், திருப்பள்ளியூர் கொண்டைய ராஜு, குன்றக்குடி மா. கருவேலன், திருவாரூர் மு. தனகோபாலன், விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், மற்றும் பலர்.

• காப்பியடித்து எழுதுபவர்களுக்கு சரியான சவுக்கடி 'உண்ணி மாதிரி!' - கங்கை கொண்டான் தூ. மயூரவாகனன், திருச்சி கா. பொன்னையன், கெங்கவேல் ம. வேல்முருகன், மேல்மலையனூர் எஸ். சரவணன், ஆரணி கே. யுவராஜ் மற்றும் பலர்.



நடக்குமென் ஓலோமா?

ஜான்சார் தன்னை மறந்து பாடம் நடத்துவதில் ஒன்றிப்போய் இருந்தார். முந்திய வகுப்பில் தாவரவியல் ஆசிரியர் விட்டுச் சென்ற செம்பருத்திப் பூக்கள் மேஜையின் மீது அப்படியே கிடந்தன. வகுப்புக்குப் பக்கத்தில் உள்ள தளதளவென்ற செடியில் பறித்தது என்பதால் இன்னும் வாடாமல் இருந்தன. ஜான்சார் பாடம் நடத்தும் பாங்கு யாரையும் கவர்ந்துவிடும். கவனத்தை ஈர்த்து. மாணவர்களின் மனதில் தனது கருத்துக்களை ஏற்றுவதில் அவர் மிகவும் கெட்டிக்காரர்.

அப்படியே மாணவர்களில் யாரேனும் பாடத்தைக் கவனிக்கவில்லை என்றால் மாணவனின் முகபாவனையை வைத்தே கண்டுபிடித்து விடுவார். அவனை எழ வைத்து அந்த நிமிடத்தில் அவர் விளக்கிய விஷயம் பற்றிக் கேள்வி கேட்பார்.

பையன் பதில் சொல்ல முடியாமல் திருதிருவென விழிப்பான்.

இது போன்ற சமயங்களில் அவர் எப்படி நடந்து கொள்வார் என்று கணிக்க முடியாது.

சில சமயம் கோபப்படுவார். சில சமயம் மனதைத்தொடும் விதத்தில் அறிவுரை பகர்வார். பிரிதொரு சமயம் அத்தகைய மாணவனை அப்படியே பார்ப்பார்.

அந்தப் பார்வையின் வேகம் தாங்காது பையன் வெலவெலத்துப் போவான்.

அன்று அவர் தந்தி அடிக்கும் முறை பற்றி மிகவும் அழகாக விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். கொடுக்கப்பட்ட செய்திகளை எப்படித் தந்தி வாசகங்களாக மாற்றுவது என்பதை உதாரணங்களோடு புரியும்படி விளக்கிக் கொண்டிருந்தார்.

திடீரென அவர் பேச்சு தடைப்பட்டது. கண்கள் புதிதாகப் பள்ளியில் சேர்ந்த குமாரை நோக்கின.

ஆசிரியர் பாடம் நடத்துவதை சிறிதும் கவனிக்காது ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான் குமார். அங்கே வேப்ப மரத்தின் மீது இருந்த சாம்பல் நிற வரிக் குயில், அவன் கவனம்

முகமது ஹில்மி



முழுவதையும் ஈர்த்துக் கொண்டிருந்தது.

"குமார் வெளியே வா" என்றார் ஜான் சார்.

குமார் திடுக்கிட்டான். தயக்கத்தோடு பெஞ்சிலிருந்து எழுந்து வந்தான். வகுப்பு வாசலைக் சுட்டிக் காட்டி அங்கே அவனை நிற்க வைத்தார் ஆசிரியர் ஜான். நேரம் ஓடியது. குமார் மிகவும் சிரத்தையோடு ஜான் சாரைப் பார்ப்பதும் எழுதுவதுமாக இருந்தான். ஜான் சாருக்கு சந்தேகம் எழுந்தது.

"குமார் இங்கே வா" என்றார். அவன் அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. திடுக்கிட்டு நின்றான். பின்பு நிதானித்துக் கொண்டு அவரை நோக்கி வந்தான்.

"எங்கே காட்டு பார்க்கலாம்? என்ன எழுதுகிறாய்?"

அவன் முகம் கல்லைப் போல் இறுகியிருந்தது. அவரே நோட்டைக் கையில் வாங்கினார். பார்த்தார்.

அவன் எழுதியிருந்த ஓவியம்! அவரை அச்சில் வார்த்ததைப் போல் அத்தனை அழகாக இருந்தது!

வெளியில் அவன் நின்று கொண்டு இருந்தபோது, ஜான் சார் அவனது கண்களுக்கு எப்படித் தெரிந்தாரோ, அதே பக்க வாட்டுத் தோற்றத்தை அப்படியே நின்றபடி ஓவியமாக பென்சிலால் வரைந்திருந்தான் அவன்! தன் கண்களையே ஜான் சாரால் நம்ப முடியவில்லை!

வழக்கமாக அவர் கை விரலகளை மடக்கி ஆட்காட்டி விரலை மட்டும் நீட்டிப் பேசும் பாவனையை அப்படியே சித்தரித்து இருந்தான் அந்தப் பிஞ்சுக் கலைஞன்!

பார்க்கப் பார்க்க குமாரின் மீது ஒருவித மதிப்புக் கூடியது ஆசிரியருக்கு. ஒரு கலைஞனின் வித்து அவனிடத்தில் உள்ளது என்பதைப் பொறுப்புள்ள ஆசிரியர் என்ற விதத்தில் அவர் இனம் கண்டு கொண்டார்.

"குமார்" என்று அழைத்தார்.

"உனது ஓவியம் மிகவும் நன்றாக இருக்கிறது" என்ற அவர் வார்த்தையைக் கேட்டதும்தான் அவன் தலை நிமிர்ந்தான். அவன் கண்களில் ஒளி.

"குமார் வருங்காலத்தில் கைகோந்த

ஓவியனாக வருவதற்கான ஆரம்பகாலத் திறமைகள் எல்லாம் உன்னிடம் உள் ளன. என்றாலும், ஆசிரியர் என்ற முறை யில் ஒரு விஷயம் சொல்லணும்."

"என் மேஜைமேல் இருக்கும் இந்தச் செம்பருத்திப் பூக்களைப் பார். இவை எல்லாமே அந்தச் செடியில் பறித்தவை தானே?" என்று கேள்விகேட்டு அவனது முகத்தைப் பார்த்தார்.

அவன் மௌனமாக நின்றான். அவர் என்ன சொல்ல வருகிறார் என்று அவ னுக்குப் பிடி படவில்லை.

ஜான்சார் தொடர்ந்தார்.

"அந்தச் செடியிலே பூத்த அழகான பூக்கள்தான் இவை. ஆனா ஒன்றைக் கவனித்தாயா? செடிகள் முளைக்கத் துவங்கும்போதே பூக்கத் துவங்கு வதில்லை. வளர்ந்து, ஒரு குறிப்பிட்ட பருவம் வரும்போதுதான் அரும்புகட் டிப் பூக்கும். ஆரோக்கியமாக வளர்ந்த செடிகளால்தான் அழகிய பூக்களைப் பூக்க முடியும்."

"பள்ளிப் படிப்பு நமக்கு அடிப்படை. அதைச் சிரத்தையோடு கற்று முடிந்த பிறகுதான் பக்குவம் பிறக்கிறது. பின்பு நமக்குப் பொறுத்தமான துறைகளுக்குப் போக அதுவே வழி வகுக்கிறது. பள்ளிப் படிப்பைப் புறக்கணித்து விட்டு, நமது விருப்பத்திற்கு, எந்தத் திறமையையும் வளர்த்துக் கொள்ள முயல்வது நல்ல தில்லே. அது விதையாக இருக்கும் போதே பூக்க முயற்சி செய்வதற்குச் சமம்.

"நீ வளரனும்னா, அடிப்படையாக உள்ள பள்ளிப்படிப்பைக் கவனமாகவும் சிரத்தையாகவும் படி. இது நடக்கப் பழகற மாதிரி. இது முடிந்த பிறகு உனக்கு விருப்பமான துறைக்குப் போ. அது ஓடுவது மாதிரி. நடக்கப் பழகாத வன் ஓடமுயலலாமா? அது என்ன ஆகும்."

ஜான்சார் தனது பேனாவை எடுத் தார். "இந்தா, இது உன்னிடம் ஒளிந் திருக்கும் ஓவியத் திறமைக்கு நான் வழங் கும் பரிசு" என்று அவன் சட்டைப் பையில் தானே குத்தினார்.

இப்பொழுதெல்லாம் குமார் வகுப் பில் பராக்குப் பார்த்துக் கவனத்தைச் சிதறவிடுவதில்லை.



உங்கள் நூலகம்

உங்கள் நூலகம் பகுதியில் சிறுவர்க்கான நூல்களும், அறிவியல், பொது நூல்களும் மட்டுமே இடம்பெறும். இரண்டு பிரதிகளை ஆசிரியர் - கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் ஏதும் இல்லை.



தஞ்சை பெரிய கோயில், புத்தகப் பித்தன், பக். 50. ரூ. 10/- இமயப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் - 611 001.

தஞ்சாவூரில் உள்ள ராஜராஜ சோழன் கட்டிய பிருகதீஸ்வரர் கோயிலைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாத பல தகவல்களை இந்த நூல் திரட்டித் தந்துள்ளது. குறிப்பாகக் கருவறை விமானத்தின் உட்பகுதியைப் பற்றிய செய்திகள் புகைப்படம் வியப்பைத் தருகின்றது. ஆசிரியரின் உழைப்பை நூல் முழுவதும் உணரலாம். தஞ்சையில் பார்க்க வேண்டிய வரலாற்றுப் பெருமைமிக்க இடங்களையும் குறிப்பிட்டுள்ளது பயனளிக்கக் கூடிய செய்தி. தஞ்சைக்குப் போலவோர் கண்டிப்பாகக் கையில் எடுத்துக் கொண்டு போக வேண்டிய புத்தகம்.

பாட்டி சொல்லைத் தட்டாதே, புத்தகப் பிரியன், பக். 68; ரூ. 10/- - கங்கா காவேரி, 17, காரியாங்குடி தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம் - 611 001.

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்ற நீதிநூல்களைத் தந்து தமிழ்நாட்டுக் குழந்தைகளின் நெஞ்சில் நீங்காது வாழ்ந்து வரும் ஔவையாரின் பெருமைகளையும், அவர் வற்புறுத்திய நீதிநெறிகளையும் விளக்கிக் கூறுகிறது புத்தகம். எளிய நடை, பயனுள்ள முயற்சி.

குழந்தைகளுக்கான நீதிக் கதைகள், முதல் புத்தகம், வாண்டுமாமா, பக். 72, ரூ. 20/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17.

எதையும் புதுமையாகச் செய்யும் திறமை படைத்த வாண்டுமாமாவின் புதிய படைப்பு இது. இதில் பல்வேறு அறங்களைப் போதிக்கும் 58 குட்டிக் கதைகள் உள்ளன. தனக்கே உரிய நடையில் சுவையாக ஆசிரியர் வழங்கியுள்ளார். படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. பரிசளிக்க ஏற்ற படைப்பு.

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி, ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.


பயந்து சூப்பிட வேண்டுமா?
பார்த்தால் அப்பா அடிப்பாரே!



everest/94/PP/186-tm